# ஞானச்சுடர்




வைகாசி

2014

வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# குறள்வழி

**இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்**
**வன்மை மடவார்ப் பொறை.**

**பொருள் :** வறுமைகளில் மிக்க வறுமை விருந்தினரை வரவேற்காது விடுதல்; வலிமைகளுள் சிறந்த வலிமை அறிவின்மை காரணமாகத் தீமை செய்தவர்களைப் பொறுத்தல். (153)

**நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை**
**போற்றி யொழுகப் படும்.**

**பொருள் :** ஒருவன் நிறைந்த நற்குணங்கள் தன்னைவிட்டு நீங்காமை இருத்தல்வேண்டுமென்று விரும்பினால் பொறுமையைப் பாதுகாத்து நடக்கவேண்டும். (154)

---

# நற்சிந்தனை



## மறப்பேனோ குருநாதன் தன்னை

## முத்தி நல்குமே

### குறள் வெண்செந்துறை

காலை யெழுந்து கைகால் சுத்திசெய்
தாலயம் மேவி யரனடி பணியே 56

சீலமு மதுவேசெய் விரதமு மதுவே
ஞாலமுள் ளளவும் நன்மையுண் டாமே 57

காலனு மணுகான் கருமமு மணுகா
ஆல முண்ட கண்ட னாணையே 58

தூல சூக்கும காரண மறிந்தால்
ஏலமர் குழலி யெழிலருள் வருமே 59

நூலறி வாளரும் நுணுகியு மறியார்
மாலய னொடுமறு தேவரு மறியார் 60

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஞானச்சுடர்

வெளியீடு— 2 சுடர்— 197

2014 வைகாசி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| சந்தேகம் நீங்கியது | செல்வி பா. வேலுப்பிள்ளை | 01 -03 |
| போற்றித் திருவகவல் | சு. அருளம்பலவனார் | 04 -06 |
| திருமூலர் அருளிய... | திருமதி பா. சிவனேஸ்வரி | 07 -09 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 10 -12 |
| கம்பராமாயணப் பெண்கள் | அ. சுப்பிரமணியம் | 13 -15 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | தொகுப்பு | 16 -17 |
| மாதங்களில் சிறந்தது... | கு. சிவபாலராஜா | 18 -21 |
| வட இந்திய தல யாத்திரை | செ. மோகனதாஸ் சுவாமிகள் | 22 -25 |
| சிறுவர் கதைகள் | – | 26 -27 |
| நித்திரைதானம் | எஸ்.எஸ். றஜீந்திரன் | 28 -29 |
| திருவருட்பயன் | முனைவர் ஆ. ஆனந்தராசன் | 30 -37 |
| ஆதியில் ஐம்முகப்பிரமர்... | அமரர் சிவ. சண்முகவடிவேல் | 38 -40 |
| படங்கள் தரும் பதிவுகள் | – | 41 -44 |
| சைவத் திருக்கோயிற்... | கா. கைலாசநாதக்குருக்கள் | 45 -47 |
| சைவ சமய வினாவிடை | ஆறுமுகநாவலர் | 48 -49 |
| அன்னதானத்தின் பெருமை... | நீர்வைமணி | 50 -51 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 52 -53 |
| கண்டோம் கதிர்காமம் | கவிமணி அன்னைதாசன் | 54 -57 |
| ஸ்ரீ கருட புராணம் | இரா. செல்வவடிவேல் | 58 -61 |
| தமிழகத் திருக்கோயில்... | வல்வையூர் அப்பாண்ணா | 62 -64 |


03 JUN 2014

வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

சந்நிதியான் ஆச்சிரம

சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் சித்திரைமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

சித்திரைமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை Dr V. பாலகிருஷ்ணன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர்கள் தனது ஆரம்ப உரையில், ஞானச்சுடர் மலரை வெளியிட்டு வைப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன் என்று கூறியதுடன் ஆச்சிரமமானது பசித்துவரும் அடியவர்களின் பசிப்பிணியைப் போக்குவதற்காக நித்திய அன்னப்பணியுடன் பல சமூகப் பணிகளையும் சந்நிதிவேலவன் அருளினூடாக செயலாற்றி வருகின்றது.

மேலும் அவர் தனது உரையில், இங்கு வெளியிடப்படும் ஞானச்சுடர் மலரானது இன்றைய காலகட்டத்திற்குத் தேவையான விடயங்களைத் தன்னகத்தே கொண்டு வெளிவருகின்றது என்று கூறித் தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

196ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை திருமதி தவமலர் சுரேந்திரநாதன் (இளை. அதிபர்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில் ஞானச்சுடர் மலரானது அழகான அட்டைப்படத்துடன் வெளிவந்துள்ளது என்று கூறினார். தொடர்ந்து கூறுகையில் சுடர் தரும் தகவல் எனும் பகுதியில் யோகர் சுவாமிகள் பற்றிய கருத்துக்களும், அடுத்து ஆச்சிரம சுவாமிகளுக்கு "லங்கா இரத்தின ஜோதி" என்ற விருது வழங்கப்பட்ட படங்கள் காணப்படுகின்றன. இவ்வாறு விருது வழங்கப்பட்டமைக்கு எமது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் ஆச்சிரம சுவாமிகளுக்குத் தெரிவித்தார்.

மேலும் அவர் ஞானச்சுடர் மலரில் உள்ள கட்டுரைகளை ஒவ்வொன்றாக விளக்கி அதில் உள்ள கருத்துக்களை சுருக்கமாக விளக்கினார். "ஞானச்சுடர்" மலரைப்பற்றி சபையில் இருந்த மூன்று வாசகர்களாகிய திருமதி பாலாம்பிகை கந்தசாமி, திரு சி. குமரவேல், திரு சி. நந்தகுமார் ஆகியோர் தமது கருத்துக்களைக் கூறினார்கள். இவற்றின் பின்னர் அன்றைய ஞானச்சுடர் மலர் வெளியீடு இனிதே நிறைவேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

உண்மைகளைவிட முக்கியமானது வாழ்க்கையை நாம் எப்படி நோக்குகின்றோம் என்பதுதான். எமது நோக்கில்த்தான் நம் வாழ்க்கையே அமைந்திருக்கிறது. நாம் எதைப் பார்க்கிறோம் எப்படிப் பார்க்கிறோம் என்பதைப் பொறுத்தே நம்முடைய வளர்ச்சியும் வெற்றியும் அமைகின்றது. இத்தகைய செயற்பாடுகளுக்கு ஊன்றுகோலாக விளங்குவது சந்தர்ப்பங்கள் என்றே கூறலாம். ஒவ்வொரு காரண காரியங்களுக்கும் இடையே வந்துபோகும் சந்தர்ப்பங்களை நன்கு பற்றிப்பிடிப்போமானால் அதன் பலன் வாழ்வில் முன்னேற்றம் என்பது கண்கூடு.

நாம் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தும் விதத்தைப்பொறுத்து நன்மையும் தீமையும் அமையும். ஆம்! கேட்கும் செய்தியிலும், பார்க்கும் பொருளிலும் ஒரு தெளிவை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான் காரண காரியங்களை நம்மால் கண்டறிய முடியும். அதற்கேற்ப செயற்பட முடியும்.

எனவே சிறிய நிகழ்ச்சியைக்கூட நாம் ஒதுக்கிவிடக் கூடாது. அது நமக்குப் பல பாடங்களைக் கற்றுக்கொடுக்கும். அதுவே விரும்பத்தகாத நிகழ்வாக இருப்பின் சரியான முறையில் சீர்தூக்கிப் பார்த்து அதை நாம் உடனடியாக நம் மனதிலிருந்து அகற்றிவிட வேண்டும்.

நல்ல நாளுக்காகவும், நல்ல சந்தர்ப்பத்திற்காகவும் நாம் காத்திருக்க வேண்டும். சந்தர்ப்பம் கிடைக்கவில்லையென்றால் சந்தர்ப்பத்தை நாம்தான் உருவாக்க வேண்டும். வாழ்க்கையில் அடுக்கடுக்காக சந்தர்ப்பங்கள் வந்து போகின்றன. வெற்றி பெறுபவன் அவற்றை சரியாகப் பயன்படுத்திக் கொள்கிறான்.

சந்தர்ப்பங்களை தவற விடுபவன் தோல்வி அடைவதோடு அடுத்த வாய்ப்பு கிடைக்காதா என்று ஏங்கியும் தவிக்கின்றான். எனவே சந்தர்ப்பத்தை நமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள நாம் கற்றுக்கொண்டு அதன்வழி நடப்போமெனில் சமுதாயத்தில் நாம் உயர்ந்தோராக போற்றப்படுவோம். இவ்வகைச் செயற்பாடு தற்கால சூழலுக்கு சாலப் பொருந்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறப்பில் ஒருநாளேனும் சந்நிதி சென்றால்...



பெரும்பே ரலைசேர் கடல்சூழ்ந்து
பிறங்குஞ் செல்வச் சந்நிதியை
பிறப்பில் ஒருநா ளேனுஞ் சென்று
பெருவீதி சுற்றிக் கும்பிட்டால்

பொருந்தா தனவே போயகலும்
புண்ணி யங்கள் கைகூடும்
போற்றித் தலத்தில் வீழ்ந்திறைஞ்சில்
புரியும் வரங்கள் கை கூடும்

மருந்தாய் அவனின் மலரடியில்
மலர்கள் திருநீ றுடன் தீர்த்தம்
மகிழ்ந்து ஏற்று மனமுருகி
மௌனத் தியானம் பண்ணிவிட்டால்

விருந்தாய்ச் செல்வச்சந் நிதிக்கந்தன்
விரும்பும் இம்மைப் பயனோடு
மிகுந்த புகழுந் தான்தருவான்
மெய்ம்மை சொன்னேன் விரைந் தும்மினே

-முதுபெரும் புலவர் வை..க. சிற்றம்பலம் அவர்கள்-

**கட்டுரையாளர் கவனத்திற்கு:-**

௨009ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் ௨013ஆம் ஆண்டு மார்கழி மாதம் வரையான காலப்பகுதியில் வெளிவந்த ஞானச்சுடர் மலரில் இடம்பெற்ற ஆக்கங்களுக்குரியவர்கள் தங்களது பெயர் முகவரிகளின் விபரங்களை அறியத்தருமாறு வேண்டுகின்றோம்.

-பேரவையினர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**P.T. பாலச்சந்திரன்**
(அவுஸ்திரேலியா)
**Dr T. ஸ்ரீஸ்கந்தராசா**
(லண்டன்)
**பொ. கஜேந்திரகுமார்**
(யாழ்ப்பாணம்)
**ச. கந்தசாமி**
(தேவன் ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்)
**மா. நாகலிங்கம்**
(லக்ஷ்மி வெதுப்பகம், பத்தமேனி, அச்சுவேலி)
**க. அரியரத்தினம்**
(கதிர் தொலைத்தொடர்பு நிலையம், வல்வெட்டி)
**கா. அருந்தவராசா**
(பிரதானவீதி, தொண்டைமானாறு)
**சி. தங்கவேல்**
(கேம்பிரிட்ஜ் கல்வி நிறுவனம், நவிண்டில்)
**க. கிருபாகரன்**
(சந்தைவீதி, உடுப்பிட்டி)
**நா. சுந்தரம்**
(இளைப்பாறிய பிராந்திய நிர்வாக அலுவலர்)
**ந. நற்குணராசா**
(காளியானை, புத்தூர்)
**P. சாந்தரூபன் G.S**
(சாருகாந் தொலைத்தொடர்பு நிலையம், கெருடாவில்)
**திருமதி இ. லோகநாதன்**
(இளை. பொது முகாமையாளர், மானிப்பாய்)
**Dr V. பாலகிருஷ்ணன்**
(முகுந்தன் வைத்தியசாலை, அச்சுவேலி)
**இ. கணேசலிங்கம்**
(கிராம உத்தியோகத்தர், ஆவரங்கால்)
**ச. தெட்சணாமூர்த்தி**
(மூர்த்தி கட்டுமோணப் பணிப்பாளர், கோண்டாவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S. இராசரத்தினம்
(இளை. பிரதேச அத்தியட்சகர், நல்லூர்)
சி.மு. தம்பிராசா
(வியாபாரிமூலை, பருத்தித்துறை)
த. விக்னேஸ்வரன்
(தங்கராசா நகை மாளிகை, யாழ்ப்பாணம்)
அ. தனேஸ்வரன்
(இரசாயனவியல்துறை, யாழ் பல்கலைக்கழகம்)
உரிமையாளர்
(சுந்தரம் பிறதேர்ஸ் மருந்துக்கடை, திருநெல்வேலி)
K. அருள்வேல்
(விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்)
ஆ. குலேந்திரநாயகம்
(கிராம உத்தியோகத்தர், ஆவரங்கால்)
கு. ரவீந்திரன்
(அதிபர், பஞ்சசீலம்)
ஐ.கோ. சந்திரசேகரம்
(மார்ஷல், யாழ் பல்கலைக்கழகம்)
செல்வி T. பெரியதம்பி
(முன்னாள் கல்விப் பணிப்பாளர், பருத்தித்துறை)
செல்வி ரதிவதனி
(மாயக்கை, தம்பசெட்டி)
திருமதி S. சரஸ்வதி
(குட்டகம்புரை, புலோலி)
மாணிக்கம் குட்டித்தம்பி
(வல்லியாவத்தை, கரணவாய்)
திருமதி சீ. ஆதவன்
(வல்லிபுரக்கோவில் வீதி, புலோலி)
சாவித்திரி அருணாசலம்
(தும்பளை, பருத்தித்துறை)
க. பொன்னுச்சாமி
(அம்மன் கோவிலடி, கரணவாய்)
பேரின்பபாலசுப்பிரமணியராசா கபிலேஷன்
(அரசவீதி, உரும்பராய் கிழக்கு)
V. சந்திரராஜா
(நிற்சாமம், சங்கானை)
நி. ஜெயந்தன்
(மங்கை ஸ்ரோர்ஸ், நீர்வேலி)
சு. சந்திரலிங்கம்
(ஆனைக்கோட்டை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலகுரு விமலேந்திரன்
(குரு பிறிண்ரேஸ், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி)
பொ. கந்தையா
(புருடிலேன், அரியாலை)
செ. கிருஷ்ணராஜா
(கலட்டி வீதி, கோண்டாவில்)
வை. சிற்றம்பலம்
(தேவி வாசம், கொக்குவில்)
செல்வி P. சயிலஜா
(மயிலங்காடு, ஏழாலை)
வரதலிங்கம் செல்வமோகன்
(மோகன்கடை, ஆவரங்கால்)
திருமதி கண்மணி கணபதிப்பிள்ளை
(பத்தமேனி, அச்சுவேலி)
சுப்பிரமணியம் கந்தையா
(சிவன்வீதி, ஆவரங்கால்)
ச. செல்வநாயகம்
(ஜெயபதிவாசா, உரும்பராய் தெற்கு)
ச. தங்கராசா J.P
(இளை. அதிபர், சிறுப்பிட்டி)
வ. புவிநாதன்
(ஐயனார் வீதி, பருத்தித்துறை)
ம.செ. சபாநாயகம்
(மாலிசந்தி, கரவெட்டி)
K. வேணுகோபாலு
(வேணி இல்லம், புலோலி)
க. செல்வராசா
(கட்டைவேலி, கரவெட்டி)
திருமதி S. உமாரதி
(மங்கை இல்லம், உடுப்பிட்டி)
ஆ. வேலாயுதம்
(உலக்கைஓடை, கம்பர்மலை)
செ. ஸ்ரீதரன்
(விமலவாசா, உச்சில் ஒழுங்கை, கரவெட்டி)
சி. மதியழகன்
(திக்கம், அல்வாய்)
பாஸ்கரன் சசிகரன்
(குட்டியப்புலம், வசாவிளான்)
கி. சரஸ்வதி
(போதராமடம், துன்னாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஐ. சிவஞானம்**
(கமலவதி, கரவெட்டி)
**அ. சின்னத்தம்பி**
(மாய்க்கிராயன், துன்னாலை)
**கதிரவேலு சதாசிவம்**
(அந்திரான், கரவெட்டி)
**ச. ஜெகசோதிராசா**
(ஆனைக்கோட்டை மேற்கு)
**த. உருத்திரா**
(ஆதவன் மில், புலோலி)
**த. முருகானந்தா**
(பிரம்படிலேன், கொக்குவில்)
**A.T. கதிரவேல்**
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
**த. யாழினி**
(கந்தர்மடம், யாழ்ப்பாணம்)
**S. சர்வேஸ்வரன்**
(பாடசாலைவீதி, வட்டுக்கோட்டை)
**ஆறுமுகம் மயில்வாகனம்**
(இணுவில் கிழக்கு)
**டனிஸ்ரன் சுகந்தினி**
(கந்தரோடை, சுண்ணாகம்)
**சின்னத்தம்பி அன்னம்மா**
(இளை. ஆசிரியர், நீர்வேலி)
**வே. பாண்டியர்**
(கைதடி தெற்கு)
**இ. இராஜேஸ்வரன்**
(இருபாலைவீதி, கோப்பாய்)
**சோ. இராசலிங்கம்**
(ஆவரங்கால் கிழக்கு)
**சி.க. இராசரெத்தினம்**
(பத்தமேனி, அச்சுவேலி)
**K. குலரெட்ணம்**
(நவாலி வடக்கு, மானிப்பாய்)
**சி. பாலபாரதி**
(கற்கோவளம், பருத்தித்துறை)
**சு. பானுகா**
(துன்னாலை, கரவெட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தேகம் நீங்கியது

–செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள்–

என் மனதில் நீண்ட நாட்களாக ஒரு அவா, தவிப்பு, ஐயம். ஏன்? எதற்காக? மனிதர்கள் பிறக்கிறார்கள்; இறக்கிறார்கள். இதற்கு ஒரு முடிவு இல்லையா?

நான் எங்கிருந்து வந்தேன்? எங்கு போகப்போகிறேன்? எனக்கு இந்தச் சரீரம் கிடைத்தது ஏன்? "கடவுளை வணங்கி முத்தி இன்பம் பெறவே" என நாவலர் ஐயா சொல்லியுள்ளார். முத்தி என்பது பிறப்பு இறப்பு இல்லாநிலை; எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்த நிலை.

"வானோர் பிரான் என்னை ஆண்டிலனேல்
நான்ஆர் என் உள்ளம் ஆர் ஞானங்கள் ஆர்?
என்னை ஆர் அறிவார்?"

இ∴து மணிவாசகரின் கேள்வி. நான் என்பது யார்? உள்ளம் ஆர் என்பதை முதலில் அறிவோம். நான் என்பது எனது உடம்பு; உள்ளம் என்பது மனம். அதுவே உயிர். உயிர் உடம்பை இயக்க உயிரை உயிருக்கு உயிரான இறைவன் இயக்குகிறான். ஆகவே நான் வேறு உயிர் வேறல்ல. நானாகிய உடம்பினுள்ளே இறைவன் இருந்து என்னை இயக்குகிறான்.

இந்த இறைவனை நான் காணவேண்டும். அவன் அருளைப் பெறவேண்டும் என்பதே என் அவா. இறைவன் யார்? அப்படி ஒருவர் இருக்கின்றாரோ என்பதிலும் எனக்கோர் ஐயம்; காண்பேனா என்ற ஏக்கம், தவிப்பு. நான் என்ற இந்த உடம்பு அழியும். அதனால் உடம்பு பொய். "நானும் பொய் என் நெஞ்சும் பொய்; ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாம்" இந்தப் பொய்யான உடம்பு அழியுமாயின் உடம்பினுள் இருந்த உயிர் அழியாதா? "உடம்பார் அழிவார் உயிரார் அழியார்" உடம்பு பொய்; உயிர் மெய் அது அழிவதில்லை. அது மீண்டும் மீண்டும் பிறவி எடுக்கும். செய்த செய்கின்ற கர்மவினைக் கேற்ப பிறவி தொடரும். நம் உள்ளத்தில் இறைவன் இருப்பதை உணர்ந்தால் கர்மவினைகள் தொடரா. "வேற்று விகார விடக்குடம்பினுட் கிடப்ப ஆற்றேன் எம் ஐயா என பொய் கெட்டு மெய் ஆனால் மீட்டிங்கு வந்து பிறவாமல் அது மெய்யாகிவிடும்.

இவற்றை யான் யாரும் சொல்லக் கேட்டேனோ அன்றிப் படித்து அறிந்தேனோ என் மனதில் இப்படியான சிந்தனைகள் யாரிடம் என் சந்தேகங்களைக் கேட்டறியலாம்? சற்குரு வந்து வாய்க்க வேண்டும். அறியாமையைப் போக்கி அறிவை உணர்த்துபவரே குரு. "குருவே சாட்ஷாத் பரப்பிரமம்" இறைவனே குரு வடிவாக வந்து பொய் களைந்து மெய் உணர்த்த வேண்டும்.

கடவுளை வணங்கு நினைத்தது நடக்கும், கேட்டது கிடைக்கும் எனச் சொல்கிறார்கள். எந்தக் கடவுள்? சிவன், விநாயகர், முருகன், அம்பாள், மகாவிஷ்ணு இவர்களில் யார் பெரியவர்? இவர்கள் இருக்கிறார்களா? எனது சந்தேகத்தை நீக்குபவரையே பற்றிப் பிடிக்க வேண்டும்.

யாவர்க்கும் முழுமுதற் கடவுள் இறைவன். அவன் சிவம். சிவன் உயிர்கட்கு நன்மை செய்பவன். தனக்கு மேலாக எவருமில்லாதவர். "குருவடிவாய் வந்து உள்ளத்திற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகுந்து, சித்தத்தினுள் சிவலிங்கம் காட்டி சிந்தை தெளிவித்து ஐந்தெழுத்தையும் அதன் பொருளையும் உணர்த்துபவர் விநாயகர். தந்தைக்கு உபதேசம் செய்தமையால் இறைவனுக்கே மேலான குரு ஆனவர் முருகன். "உருவாய் அருவாய் உளதாய் இலதாய் குருவாய் வருவாய்" என அருணகிரி கூறியுள்ளார். அந்த வகையில் சிவன், விநாயகர், முருகன் மூவரும் ஒரு அம்சமே. அப்படியானால் அம்பாள் அவள் சிவசக்தி. "எத்திறம் ஈசன் நின்றான்; அத்திறம் அவளும் நிற்பாள்".ஆகவே அம்பாளை வணங்குவதன்மூலம் சிவன் அருளைப் பெறலாம்.

ஏ மனமே! கடவுளைக் காண ஆசைப்படுகிறாயே, ஏன் எதற்காக? நான் கடவுளைக் கண்டு பிறவிக் கடலை கடப்பது எப்படி எனக் கேட்பதுதான் என் ஆசை. கடவுளைக் காண வேண்டுமே. எங்கே? எப்படி? கடவுள் கேட்டால்த்தான் கொடுப்பவரல்ல. கேட்டாலும் கேட்கா விட்டாலும் வணங்கினாலும் வணங்காவிடினும் கொடுப்பவர் இறைவன். நாம் முற்பிறவியில் செய்த கன்மவினையை அநுபவிக்கவே இப்பிறவி கிடைத்தது. ஆகவே எங்கட்கு என்ன தரவேண்டும் என்பதை இறைவன் அறிவான். "வேண்டத்தக்கது அறிபவன், வேண்ட முழுவதும் தருபவன்; நான் எதை விரும்புகிறேனோ அதையும் தருபவர் அவரே.

நாம் நடக்கின்றோம். முன்னும் பின்னும் எமது நிழல் நம்மைத் தொடர்கிறது. அதேபோல் நாம் செய்த செய்கின்ற கர்மவினை (பாவ புண்ணியங்கள்) அ·.தாவது ஊழ்வினை எம்மைத் தொடர பிறப்பு இறப்பாகிய பிறவிக்கடலில் அலைகிறோம். பசி தாகம் தனித்தனி உணரப்படுவது. ஊழ்வினையும் அப்படி உணரவேண்டியதே. "முன் செய்த தீவினையே" என்ற உணர்வு தானாகவே உண்டாகும்.

சரி, இறைவனை எங்கே தேடிக் காண்பாய்? அவன் உன் சிந்தையுள் அல்லவா இருக்கிறான். அவன் அருள் இருந்தால் அவனே வந்து தோன்றுவான். உன் சிந்தனை இறைவனையே நாடும். "சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால் அவன் அருளால் அவன் தாள் வணங்க முந்தை வினை முழுதும் ஓயும்" இது திருவாசகம் கூறும் வாசகம். வினை முழுவதும் முடியுமாயின் பிறவியில்லை.

ஆனபடியால் உன்னுள்ளே இருக்கும் இறைவனைத் தேடு. உன் எண்ணத்தை இறைவன் அறிவான். உன்னுள்ளே இருக்கும் சோதியை எவ்வளவுக் கெவ்வளவு தேடுகிறாயோ உன் முன்னே காண்பாய். அப்போது,

"ஆண்டவனும் நீயானால் அடியவனும் யான் ஆனால்
மீண்டும் இப்பிறவியை வேண்டேன்" என முறையிடு.

பிறவிக் கடலைக் கடக்கும் வழியை உனக்கு உணர்த்துவான். இறை சிந்தனை கூடக்கூட பிற சிந்தனைக்கு இடமில்லை. இறைவா! பிறப்பு இறப்பு இல்லாத நிலையை அடைய அருள்வாய். உன்னைக் காணும் பாக்கியம் பெற்றேன். இனி என்ன? உன்னை நான் அடைய வேண்டும். இதுவே என் அவா.

இறைவனுக்கு மேலானவர் விநாயகர். வினைகளைப் போக்குபவர். உளப்பிணி, உடற்பிணியை நீக்குபவர். அவரை மனதில் தியானி. "குருவடிவாய் வந்து உன்னை உனக்கு உணர்த்துவார்.

முருகனை நினை "ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றுவான்", முருகா! "உன்னை ஒழிய ஒருவரையும் பின் செல்லேன் என் கொடிய வினையைத் தீர்ப்பாய்" என முருகன் தாளை இடையறாமல் வணங்கு. "புன்னெறி அதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம் நன்னெறி ஒழுகச் செய்வான். அவனுடைய அழகிய திருமுகக் கோலம் காண்பாய். உன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாமலே அவனுக்காட்படுவாய். இருவினைகள் தானாகவே நீங்கும்.

"இறவாமல் பிறவாமல் எனை ஆண்டு பெருவாழ்வைத் தருவாய்" என அருணகிரிநாதர் வேண்டிப் பெருவாழ்வு பெற்றார்.

"நான் ஆர் என் உள்ளம் ஆர்" என இந்நாள் வரை எண்ணிய நிலை போய் "யான்" என உன்னை நினைக்கும் அளவுக்கு ஞானம் பெற்றிருக்கிறாய். "யான் தான் என்ற இரு சொல்லும் கெட்டால் இறைவனைக் காண்பாய்" எனக் கந்தரலங்காரத்தில் ஒரு பாடலைப் பாடிய அருணகிரியார் கந்தரநுபூதியில் "யானாகிய என்னை விழுங்கி தானாக நின்ற தற்பரன்" எனப் பாடியுள்ளார்.

இப்போ உன்னுள்ளே, இறைவன், விநாயகர், முருகன் மூவரைப்பற்றிய எண்ணமே பதிந்துவிட்டது. உன்னை நீயே உணர்கிறாயல்லவா, "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி மாதொரு பாகனார் வருவார்" ஆதலால் மூவரில் ஒருவரில் பற்றுறுதி கொள். சூரியனைக் கண்ட பனிபோல் உன் சந்தேகம் நீங்கும். திருவருளாகிய சக்தி இறைவனைக் காண வைக்கும். பிறவிக் கடலைத் தாண்டுவாய். அப்புறம் நீ சிவமாம் தன்மை அடைவாய்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்"

-வள்ளுவர் வாய்மொழி.

## சந்நிதிக் கந்தன்
## கழற்கோர் கவிமாலை - 51

- இராசையா குகதாசன் -

**பல்லவி**

அருளிட வேண்டுமையா ஆறுமுகா! நாளும் எந்தன்
இருணிறை வாழ்விருந்து ஈடேறவே யிரங்கி

**அநுபல்லவி**

உருகிநா னுனைப்பாட ஊன்றுகோ லானவனே!
எருதேறு சிவன்மகனே! ஏரம்பன் துணைவனே! (அருளிட)

**சரணம்**

ஐம்பொறி யுடலுடனே ஒட்டிநின் றாட்டுதையா
ஓமெனும் பொருளுரைசெ யுத்தமா காவாயோ?
ஔவையின் தமிழ்கேட்டு அகமகிழ்ந்த குமரா
ஆயுதப் படைவீடே அமர்ந்தருளும் இறைவா! (அருளிட)
கன்மவினை யோடக் கார்த்திகேயா வென்ன
கிஞ்சித்து மிடர்செய்யா கீர்த்தியுந் தருபவனே
குன்றுதோ றாடுமையா கூவிடு மயிலேறி
கெஞ்சிடு மடியாரின் கேடுஎலாம் மறைய (அருளிட)
கைநகத் தாற்கீறி கயவர்தம் சிரமெல்லாம்
கொய்திடு முருகோனே கோமகனே குமரா!
கௌரியுமை மைந்தா செல்வச்சந்நிதிக் கந்தா!
பன்னிரு விழிமலர்ந்தே பாரினி லெந்தனுக்கு (அருளிட)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போற்றித் திருவகவல்

## சகத்தினுற்பத்தி

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

## நிலைமண்டிலவாசிரியப்பா

மறைந்த

சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்

(யாழ்ப்பாணம் - காரைநகர்)



தப்பா மேதாம் பிடித்தது சலியாத்
தழலது கண்ட மெழுகது போலத்
தொழுதுள முருகி யழுதுடல் கம்பித்
தாடியும் அலறியும் பாடியும் பரவியுங்
கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்
படியே யாகிநல் லிடையறா அன்பிற்
பசுமரத் தாணி யறைந்தாற் போலக்
கசிவது பெருகிக் கடலென மறுகி
அகங்குழைந் தனுகுல மாய்மெய் விதிர்த்துச்
சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப
நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுத லின்றிச்
சதுரிழந் தறிமால் கொண்டு சாருங்
கதியது பரமா வதிசய மாகக்

**பதவுரை:-**

தப்பாமே தாம் பிடித்தது சலியா- முற்கூறப்பட்ட ஏதுக்களால் நெறிநின்று தவறாமல் தாம் பிடித்த கடவுட்கொள்கையினின்றும் சலிப்படைந்து விட்டு விடாமல், தழலது கண்ட மெழுகது போல- நெருப்பை அணுகின மெழுகினைப் போல, உளம் உருகி தொழுது- உள்ளம் உருகி இறைவனை வணங்கி, அழுது உடல் கம்பித்து- அழுது உடல் நடுக்கம் அடைந்து, ஆடியும் அலறியும் பாடியும் பரவியும்- பின்னர் ஆனந்தக் கூத்து இயற்றியும் ஓலமிட்டும் இசைபாடல்களைப் பாடி வழிபட்டும், கொடிறும் பேதையும் கொண்டது விடாது எனும் படியே ஆகி- பற்றுக்குறடும் அறிவிலியும் தாம்பிடித்தவற்றை நெகிழவிடா என்னும் பழமொழி போலாகத் தாம் பிடித்த கடவுட்கொள்கையை விடாமல், நல் இடை அறா அன்பின்- நன்றாகிய இடையே அற்றுப் போதலில்லாத அன்பினால், பசு மரத்து ஆணி அறைந்தால் போல- பச்சை மரத்திலே ஆணியை அடித்தாற்போல நன்றாகப் பதியப்பெற்று கசிவது பெருகி- மனநெகிழ்ச்சி மிகுந்து, கடல் என மறுகி- கடல் போலச் சுழன்று, அகம் குழைந்து- மனம் குழையப்பெற்று: அனுகுலமாய் மெய் விதிர்த்து அதற்கு அனுகூலமாய் உடம்பு நடுங்கப்பெற்று சகம் பேய் என்று தம்மை சிரிப்ப- உலகினர் இவர் பேயாற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிக்கப்பட்டவர் என்று தம்மைப் பரிகசிக்க, நாணது ஒழிந்து- அதற்கு நாணத்தை விட்டு, நாடவர் பழித்து உரை கோணுதல் இன்றி பூணது ஆக- நாட்டிலுள்ளார் தம்மைப் பழித்துக் கூறும் வசைமொழிகள் தாம் வெறுப்பின்றி ஏற்றுக் கொள்ளுதலால் அணிகலம் போல அமைய, சதுர் இழந்து- யாம் வல்லுநம் என்னும் வலி அழிந்து, அறி மால் கொண்டு- அதனால் உண்மை அறிவினைப்பெறும் விருப்பத்தினைக் கொண்டு பர மா அதிசயம் ஆக- தாம் அடைதற்குரிய வீடுபேற்று இன்பமே மேலான பெரிய வியப்புக்கு இடமாக,

தப்பாமே என்றது மாயாசத்திகள் மாயைகள் தொடங்கினமையும், ஆத்தமானாரும் அயலவர்களும் நாத்திகம் பேசினமையும் சுற்றத்தார்கள் பற்றியழைத்துப் பதறினமையும் வேதியர் சாத்திரங் காட்டினமையும் சமயவாதிகள் அரற்றி மலைந்தமையும் மாயாவாதிகள் ஆரவாரிக்கப்பட்டமையும் உலோகாயதனது கடுவிடம் எய்தப்பெற்று அந்நிலையில் பெரிய வஞ்சனைகள் சூழப்பெற்றமையுமாகிய இவ்வேதுக்களால் நெறியினின்றும் தவறாமல் என்றவாறு. தப்புதல்- தவறுதல் "தப்பாமே தாளடைந்தார்" (திருவம்மானை 11) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

சலியா- சலியாமல் என்றது சலிப்படைந்து விட்டுவிடாமல் என்றவாறு. சலியா- ஈறுகெட்ட எதிர்மறைவினையெச்சம், "காக்கை கரவா கரைந்துண்ணும்" (குறள் 527) என்புழிப்போல.

தழலது மெழுகது என்பவற்றில் அது பகுதிப்பொருள் விகுதி தழலது கண்ட மெழுகதுபோல உருகி என இயையும். "அழல் சேர்ந்த மெழுகே யன்னார்" (சத 88), "தீசேர் மெழுகொப்பாய்" (திருவெம் 7) "அழலுறுமெழுகாம் என்பராய் நினைவார்" (செத்திலாப் 4) "அனல் சேர் மெழுகொப்ப" (ஆசைப் 8) என பிறாண்டு வருவனவும் ஈண்டறியற்பாலன. கண்ட என்பது அணுகுதற் பொருளில் வந்தது. கம்பித்தல்- நடுங்குதல் "மெய்ம் முழுதுங் கம்பித் தழுமடியாரிடை" (நீத் 27) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க,

கொடிறு- குறடு "கடைவாய்ப் புறமுங் கருவிப் பற்றுங், குருமகிழ் பூசமுங் கொடிறென லாகும்" என்பது பிங்கலந்தை. (10:402) பேதை- அறிவிலி. கொடிறும் பேதையும் கொண்டது விடாது என்பது ஒருமை பன்மை மயக்கம் அன்றி. கொடிறும் விடாது, பேதையும் விடாது எனத் தனித்தனி இயைப்பினுமமையும். பேதையைக் கொடிறொடு சேர்த்துக் கொண்டது விடாது என அஃறிணையாற் கூறியது இழிவுபற்றி, *கொடிறும் பேதையும் தாம் பற்றிய பொருளை விடாத தன்மைபோல மெய்யன்பரும் கடவுட் கொள்கையை விடாமைபற்றிக் "கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும் படியேயாகி" என்றார். படி- தன்மை "கருமணியம் பாலகத்துப் பதித்தன்ன படியவாய்" (சிவக 167) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

அன்பிற் (64) பெருகி (66) என இயையும். பசுமரத்தாணி அறைந்தாற்போல நன்றாகப் பதியப்பெற்று எனச் சில சொற்கள் வருவித்துரைக்க. பசுமரத்தாணி அறைந்தாற் போலக் கசிவது பெருகி என்றது பசுமரத்தில் ஆணி அறைந்தால் எப்படி எளிதில் நன்றாக அழுந்தி விடுமோ அதுபோலத் தைலதாரை போன்ற இடையீடில்லாத அன்பினால் மன நெகிழ்ச்சி மிகுந்து என்றவாறு, மனத்திற்குப் பசு மரத்தினையும், இடையறா அன்பினுக்கு ஆணியினையும், அன்பினால் நெகிழ்ச்சி மிகுதலுக்கு அது நன்றாகப் பதிதலையும் உவமையாகக் கொள்க.

*"கொடிறும் பேதையும் போலத் தாங்கொண்டதே பற்றி" சிவஞான பாடியம் அவையடக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கசிவு- நெகிழ்ச்சிப் பெருக்கு. கடல் அலைபோல மீட்டும் மீட்டும் உளதாகலின் "கடலென மறுகி" என்றார். கடல் அதன் அலைக்கு ஆகுபெயர். அகங்குழைதல்- உள்ளநெகிழ்தல். அனுகுலம்- அனுகூலம் என்னும் வட சொற்றிரிபு. அகங்குழைதலின் மெய்ப்பாடு மெய்விதிர்த்தலாதலின் "அனுகுலமாய் மெய் விதிர்த்து" என்றார். விதிர்த்தல்- நடுங்குதல். "அதிர்வும் விதிப்பும் நடுக்கஞ் செய்யும்" என்பது தொல்காப்பியம்.

சகம்- உலகம். ஈண்டு உலகினரை உணர்த்தி நிற்றலின் ஆகுபெயர். பேய் என்றது பேய்க்கோட்பட்டாரை, பேய்க்கோட்பட்டவர் தம்வயமின்றி அப்பேயின் வயத்தராய் நிற்றால்போலத், தெய்வங் கொள்கையில் நிலைபேறுடையவர் அதனின்றும் பிறழாது நிற்றலின் அவரைக் காணுநர் இகழ்ந்து பரிகசித்தலின் "சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப" என்றார். பேயர் என்பது பேய் என ஈறுகெட்டு நின்றது. இனி அறியாமையுடையாரைப் பேயர் என வழங்கும் உலக வழக்குப் பற்றி வந்ததெனினுமமையும்.

"பேயனேன்.... என் சொலலிப் பேசுகேனே" சத 23.
"உன்னடி பணியாப் பேயனாகிலும்" செத் 7.
"பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனை" கோத்தும்பி 12

என அடிகள் பிறாண்டும் கூறுதல் காண்க.

நாணது ஒழிந்து என்றது சகம் பேய் என்று தம்மைச் சிரித்தலினால் நாணமடையாது என்றவாறு. நாடவர் பழித்துரை (69) கோணுதல் இன்றிப் பூணதுவாக (70) என மாற்றிக் கூட்டி நாட்டவர்களாற் பழித்துக் கூறப்படும் சொற்கள், தாம் வெறுப்பின்றி ஏற்றுக்கொள்ளப் படுதலால் அணிகலம்போல அமைய என்றவாறு. பழித்துரையை ஏற்றுக்கொள்பவரின் தன்மை அப்பழித்துரையின் மேலேற்றிக் "கோணுதலின்றிப் பூணதுவாக" என்றார்.

சதுர் இழத்தல்- யாம் எவற்றையும் அறிய வல்லுநம் என்னும் தன் முனைப்பினை இழத்தல். சதுர் இழந்தன்றி உண்மையை அறியும் ஆசை நிகழாமையின் "சதுரிழந்து அறிமால் கொண்டு" என்றார். அறிவு என்றது ஈறுகெட்டு நின்றது. அறிவு என்றது ஈண்டு தத்துவ ஞானத்தினை. மால்- ஆசை; வேட்கை. "மாறீக்கு மவள்மார்பென் றெழுந்த சொன்னோவோமோ" (கலி 68:13) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. "மாயோன் மேக மயக்கம் வேட்கை, மாலென் றுரைப்பர்" எனப் பிங்கலந்தையில் (10:931) வருதலுங் காண்க. சாருங்கதி என்றது தத்துவ ஞானத்தினால் (மெய்யறிவினால்) அடைதற்குரிய வீடுபேற்றினை. முன்னொரு போதுங் கண்டிராமையின் "பரமாதிசயமாக" என்றார்.

(தொடரும்...

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யூன் | 02 | வைகாசி | 19 | திங்கள் | சேக்கிழார் |
| | | | | | நமிநந்தியடிகள் |
| யூன் | 13 | வைகாசி | 30 | வெள்ளி | திருஞானசம்பந்தர் |
| | | | | | திருநீலகண்ட யாழ்ப்பாணர் |
| யூலை | 02 | ஆனி | 18 | புதன் | மாணிக்கவாசகர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் அருளிய திருமந்திரமாலை

– திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள் –

**உபதேச மந்திரம்:**

"மண்ணாசை மற. உயிர் போனாலும் இறைவனை மறவாதே. முடிந்தவரையில் தியானி. உண்மையே பேசு. யார் இல்லை என்று சொன்னாலும் கடவுள் ஒருவர் உண்டு. ஒன்றே குலம் ஒருவனே தேவன். நல்லதை நினை. உனக்கு யம பயம் இல்லை. இந்த உடம்பை உதவியாக வைத்துக்கொண்டு கடவுளைத் தோத்திரி. இன்னோர் உடம்பை எடுத்துப் பார்த்துக் கொள்வோம் என்று இருக்காதே. வந்த வேலை இந்த உடம்போடு முடியட்டும். மரணப்படுக்கையில் நினைக்கத்தக்கது கடவுள் நினைவே. எவன் இறக்கும் காலத்தும் கடவுளை நினைக்கின்றானோ அவனுக்குப் பிறப்பில்லை. இவ்வுலக வாழ்வு நிலையற்றது. ஆதலால் அவனை எண்ணினால் ஆபத்து இல்லை. "அன்பே சிவம்" என்பது திருமந்திரம்.




"உபதேச மந்திரப் பொருளாலே உனை நான் நினைந்தருள் பெறுவேனோ" என்று தோத்திரம் செய்கிறார் அருணகிரிநாதர். உபதேச மந்திரங்கள் கோடானுகோடி இருந்தாலும் அவற்றுள் எல்லாம் நாயகமாக நின்று நிலவிவருவது "திருமந்திரம்" எனும் ஒப்பற்ற மகா மந்திர நூலாகும். மேற்கண்ட உபதேசங்கள் மட்டுமல்ல இன்னும் ஏராளமான உபதேசக் கருத்துக்களை தமது ஞானநூலில் கூறியிருக்கிறார் தயை பெருகு திருமூலர்.

"அன்பே சிவம்" என்பதே திருமந்திரத்தின் சாரம்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்று சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த திருமூலர் கூறுகிறார். மனிதனைக் கடவுள் படைத்ததன் நோக்கமே அவனைத் தெரிந்து, அறிந்து, தமிழில் புகழ்ந்து, போற்ற வேண்டுமென்பதுதான்.

கயிலைமலையின் காவலரான நந்தியெம் பெருமானின் திருவருள் உபதேசத்தைப் பெற்ற சிவயோகி ஒருவர் இருந்தார். அவர் அகத்திய முனிவரோடு சிலநாள் தங்கியிருப்பதற்காக பொதிகைமலை செல்ல தமிழ்நாட்டிற்கு வருகிறார். தில்லை எனப்படும் சிதம்பரத்தில் சிவயோகியார் உருகி உருகி நிற்கிறார். பேரின்பப் பெரும்பொருள் அங்கே ஆனந்தத் தாண்டவம் ஆடுகிறது. நந்தியம்பெருமானுக்கு உபதேசஞ் செய்தருளிய மெய் ஞானக்கூத்தர் திருச்சிற்றம்பலத்தில் ஞானக்கூத்து ஆடிக்கொண்டேயிருப்பதால், சிவயோகியார் தன்னை மறந்து தன்நாமம் கெட்டு நின்றார்.

பின்பு அவர் வரும் வழியில் சாத்தனூரில் பசுக்களை மேய்த்துக்கொண்டிருந்த மூலன் எனும் இடையன், வினைப் பயனால் இறந்துவிட, அவனுடலைச் சுற்றிப் பசுக்கள் கதறிக்கொண்டு நிற்கின்றன. இதனைக் கண்ட சிவயோகி மூலனுடைய உடம்பில் தன் உயிர்ப்பைப் பாய்ச்சினார். உயிர்த்தெழுந்த மூலன் திருமூலராக நிலைபெறுகிறார். முன்வினைப் பயனை இறையருள் கூட்டுவிக்க சிவயோகி தன் முழு ஆற்றலையும், நயனம், ஸ்பரிசம், திருவடி ஆகிய மூன்றின்வழி ஒருசேர ஒரே நிமிடத்தில் வழங்கிட சிவபோகமும், சிவயோகமும், சிவஞானமும் பெற்று எழுந்த மூலன் திருமூலராகிறார்.

மூலன் தன் மனைவிக்கும் சுற்றத்தாருக்கும் உண்மையை உணர்த்திவிட்டு திருவாவடுதுறை செல்கிறார். சிவபிரானின் அருளாலே முற்றுணர்வு கூடிய மெய்ஞானம் தமக்குக் கிடைத்தது சிவாகமங்களின் பொருளை தமிழில் எழுதுவதற்காகவே என உணர்கிறார். திருவாவடுதுறை கோயிலின் மேற்குப் பக்கத்தில் அமைந்திருந்த உயர்ந்த அரசமரத்தின்கீழ் சிவராச யோகத்திலமர்ந்து, தம்முடைய உள்ளக் கமலத்தில் உறைந்தொளிரும் பொருளோடு உணர்ந்து ஒன்றினார். உலகம் உய்வதற்காகச் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நெறிகளையும் விரித்து மூவாயிரம் பாடல்களை ஆண்டுக்கு ஒன்றாகப் பாடி முடித்தார். "ஒன்று அவன்தானே" என முதல் பாட்டைப் பாடினார்.

பிறவித் தொடர்பை நச்சுத்தொடர்பு என்கிறார் சேக்கிழார் பெருமான்.

"ஊன் உடம்பில் பிறவி விடம் தீர்ந்து உலகத்தோர் உய்ய
ஞானம் முதல்நான்கும் அலர் நல் திருமந்திரமாலை
பான்மை முறை ஓராண்டுக்கு ஒன்றாகப் பரம்பொருள் ஆம்
ஏன எயிறு அணிந்தாரை ஒன்று 'அவன்தான்' என எடுத்து".

(திருமூல நாயனார் புராணம்)

அவர் பாடிய நூலின் பெயர் திருமந்திரமாலை. பின்பு திருமந்திரம் எனப்பட்டது. சிவன் அன்புவடிவானவன் என்னும் உண்மையை வற்புறுத்தும் இத்திருமந்திரமே சைவசித்தாந்த முதல்நூலாகும். இந்நூலில் அறம் பேசப்படுகிறது. தத்துவம் பேசப்படுகிறது. சமயம் பேசப்படுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக யோகத்திற்குத் தனி இடம் கொடுத்திருக்கிறார். இந்நூலில் இல்லாத எப்பொருளுமில்லை. தோத்திரமாகவும், சாத்திரமாகவும், வாழ்க்கை நூலாகவும் அமைந்த திருமந்திர நூலினை அனைவரும் கற்றுணர வேண்டும். சைவ சித்தாந்தத்தின் அரிய கருத்துக்கள் எளிய சொற்களில் விரைவாகவும், இனிமையாகவும் தத்துவக் கருத்துக்கள் அமைந்துள்ளன.

மகா யோகியான திருமூலரின் சிந்தனைகளைத் தாங்கியது "திருமந்திரம்". திருமூலரின் தலையாய கொள்கை "அன்பே சிவம்" என்பதாகும்.

"அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆருமறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே"

"அன்பே சிவம்", "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" போன்ற புகழ்மிக்க வாசகங்கள் திருமூலர் எழுதியவையே. "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" இவற்றை அருளியவர் சித்தரும், சிவயோகியுமாகிய திருமூலர். இவர் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுக்கொன்றாக மூவாயிரம் பாடல்களைப் பாடியவர். இப்பாடல்களைக் கொண்ட திருமந்திரம் 12ஆம் திருமுறையாகும்.

திருமூலர் அம்பிகையை

“அவளை யறியா வமரருமில்லை
அவளன்றிச் செய்யு மருந்தவமில்லை
அவளன்றி ஐவரால் ஆவதொன்றில்லை
அவளன்றி வூர் புகு மாறறியேன்”

எனப் பாடியுள்ளார்.

மக்களாகப் பிறந்தவர்கள் இறைவனை வழிபடுவது தலையாய கடமை. பிற உயிர்களுக்குத் தொண்டு செய்வது பெரிய சேவை. இறைவனுக்குச் செய்கின்ற படையல் நடமாடும் தெய்வமென விளங்கும் அன்பர்களுக்கு உரிய படையலாக வருவதில்லை. ஆனால் நடமாடும் இறைவனாக விளங்கும் சிவனடியார்களுக்கு உணவு அளித்தால் அது திருக்கோயிலில் குடிகொண்டுள்ள இறைவனுக்கு நிச்சயம் வந்து சேரும். இதுவே உண்மையான மகேசுவர பூஜை என்கிறார் சித்தர் பெருமான் திருமூலர்.

படமாடக் கோயில் பரமற்கு ஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயின்
படமாடக் கோயில் பரமற்கு அது ஆமே.

மக்களுக்குத் தொண்டு செய்தால் அது இறைவனைச் சென்றடையும். மக்கள் பூஜையே மகேசன் பூஜை. இறைவன் பெருங்கருணையாளன். உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிவரும் அன்பு நிறைந்த பிரார்த்தனைகளுக்கு நிச்சயம் அருள் செய்வான். தாய்ப்பசு கன்றுக்குட்டியைக் கூவி அழைப்பதுபோல, இறைவனும் அன்பர்களைத் தன்பால் ஈர்த்துக் கொள்கிறான். இதையெல்லாம் “அவன் செய்கிறான்” எனும் நாம் வெறுமனே இருந்துவிடக் கூடாது என்கிறார் திருமூலர். நாம் அவனை அடைவதிலேயே நாட்டம் கொண்டு திருவருள், மெய்ஞானம் ஆகியவற்றைப் பெறுவதற்கு சதாசர்வகாலமும் அவனை மனதில் வைத்து, அவன் நாமங்களை உச்சரித்து, அவன் திருவடியைப் போற்றி வணங்க வேண்டும். மகாஞானி திருமூலர் அருளிய உபதேசங்களின்படி வாழ்ந்து அவர் கூறிய அறத்தின்படி இறைவனுக்கு ஒரு பச்சிலையால் பூஜித்து, பசுவுக்கு ஒருபிடி தீனி கொடுத்து, உண்ணும்போது பிறருக்கு ஒரு பிடி உணவளித்து, எல்லோருடனும் அன்பான சொற்களைப் பேசி, இறைவனை நன்றாகத் தமிழில் பாடி அவனருள் பெறுவோமாக.

## சந்ந்தியான் சுதந்திரம்

ஓசையில் ஒலிக்கும் சந்நிதியான் - உன்
ஓசையில் உதிப்பான் நாளும்
வேளையில் விழிக்கும் சந்நிதியான் - உன்
வேலில் வருவான் நாளும்
அமைதியில் துயிலும் சந்நிதியான் - உன்
ஆளுமையில் எழுவான் நாளும்
சுமைகள் குறைக்கும் சந்நிதியான் - உன்
சுதந்திரத்தை தொழுவான் நாளும்.

-நெல்லை மகேஸ்வரி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி

(தொடர்ச்சி...

– வாரியார் சுவாமிகள் –



39. மாவேழ் சனனம் கெட மாயைவிடா
மூவேடணை என்று முடிந்திடுமோ
கோவே குறமின் கொடிதோள் புணரும்
தேவே சிவ சங்கர தேசிகனே.

**பதவுரை**

கோவே- உலகங்கட்கெல்லாம் அரசே! குறமின் கொடி தோள் புணரும்- குறவர் குலத்தில் வளர்ந்த மின்னல் கொடி போன்ற வள்ளிநாயகியின் தோள்களைத் தழுவுகின்ற, தேவே- தெய்வமே! சிவசங்கர தேசிகனே- மங்கல மூர்த்தியும் சுகத்தைச் செய்பவருமான சிவமூர்த்தியின் குருநாதரே! மா ஏழ் சனனம் கெட பெரிய ஏழுவகையான பிறவிகளும் தொலையுமாறு, மாயை விடா- மாயையினின்றும் நீங்காத, மூ ஏடணை- மூன்று ஆசைகளும், என்று முடிந்திடுமோ- எப் பொழுதுதான் அடியேனைப் பற்றாது அகலுமோ?

**பொழிப்புரை**

உலகங்கட்கெல்லாம் அரசே! குறவர் குலத்தில் வளர்ந்தவரும், மின்னல் கொடி போன்றவரும் ஆகிய வள்ளியம்மையின் தோள் களைத் தழுவுகின்ற கடவுளே! மங்கல மூர்த்தியும் சுகத்தைச் செய்பவருமாகிய ஈசனுக்கு உபதேசித்த குருநாதரே! பெரிய ஏழுவகையான பிறவிகளும் நீங்குமாறு, மாயை விடாத மூன்று வகையான ஆசைகளும் என்றுதான் அடியேனை விட்டு விலகுமோ? (விலக அருள் புரிவீராக).

**விரிவுரை**

**மாவேழ் சனனங் கெட:-**

மா- பெரிய. ஏழ்சனனம்- தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என்பன.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| தேவர் | 11 | லட்சம் | கருவேறுபாடுகள் |
| மனிதர் | 09 | லட்சம் | கருவேறுபாடுகள் |
| விலங்கு | 10 | லட்சம் | கருவேறுபாடுகள் |
| பறவை | 10 | லட்சம் | கருவேறுபாடுகள் |
| ஊர்வன | 15 | லட்சம் | கருவேறுபாடுகள் |
| நீர்வாழ்வன | 10 | லட்சம் | கருவேறுபாடுகள் |
| தாவரம் | 19 | லட்சம் | கருவேறுபாடுகள் |
| ஆக | 84 | லட்சம் | யோனி பேதங்களாம். |

"உரை சேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம்
யோனி பேதம்
நிரைசேரப் படைத் தவற்றின் உயிர்க்குயிராய்
ஆங்காங்கே நின்றான்"

-திருஞானசம்பந்தர்

"தரையி னாழ்த்திரை யேழே போலெழு
பிறவி மாக்கடலூடே நானூறு
சவலை தீர்த்துன தாளேசூடி"

-(நிருதரார்) திருப்புகழ்

ஏழு கடல்களைப் போல் ஏழு பிறப்புக்கள். இப்பிறவிப் பெருங்கடல் கடத்தற்கரியது.

**மாயை விடா:-**

மாயையின் காரியம் உடல் முதலிய கருவிகள்

**மூவேடணை:-**

தானேடணை, தாரேடணை, புத்திரேடணை.

தானேடணை- செல்வத்தாசை, தனம்.
தாரேடணை- மனைவியாசை, தாரம்.
புத்திரேடணை- மக்கள் ஆசை, புத்திரர்.

இந்த மூவாசைகளும் எழுவகைப் பிறப்புக்களை உண்டாக்குகின்றன. இந்த ஆசைகளை விட்டாலன்றி பிறவிப் பெருங்கடலினின்றுங் கரையேற முடியாது.

ஏஷணா- ஆசை; இது வடசொல்; தமிழில் ஏடணை என வந்தது.

ஒருவன் ஆயிரம் பொற்காசுகளைச் சேர்த்து வைத்திருந்தான். அழகிய இளம் மனைவி, ஐந்து வயதுப் பாலகன் இவர்களுடன் இனிது வாழ்ந்தான். மழை பொழிந்து வெள்ளம் வந்து அவன் வாழ்ந்த ஊரே வெள்ளத்தில் மூழ்கிவிட்டது. அவன் பொற்காசு மூட்டையைத் தலையிலும் மனைவியை இடத் தோளிலும், மகனை வலத் தோளிலும் சுமந்துகொண்டு வெள்ளத்தில் நீந்தலானான்.

மேலும் வெள்ளம் வந்துவிட்டது. மூன்று சுமைகளும் அவனை அழுத்தின. ஏதாவது ஒன்றை விட்டால் சுமை குறையும்; நீந்தி அக்கரை சேரலாம் என்ற அக்கறை வந்தது. பொன் மூட்டையை விட்டான். சிறிது கனம் குறைந்து நீந்தினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் வெள்ளம் வந்துவிட்டது. இப்போது இன்னும் ஒன்றை விட்டாலன்றி நீந்த முடியாது என எண்ணினான். மனைவியை விடுவதா? மகனை விடுவதா? என்று சிந்தித்தான் மனைவியைத் தன் விருப்பத்தால் மணந்து கொள்ளலாம். குழந்தை தெய்வங் கொடுத்தாலன்றிக் கிடைக்காது. ஆதலால் மனைவியை விட்டுவிட்டான். சுமை நீங்கிக் கரை சேர்ந்தான்.

வெள்ளம் என்பது பிறவிப் பெருங்கடல். பொன்னாசை, மனைவியாசை, மக்களாசை என்ற மூவாசையும் ஒவ்வொன்றாக விட்டபின் முத்திக்கரை சேர்ந்தான். அநுபூதிக்கு ஆசைகள் தடை. ஆதலால், ஆசைகளை விட்டு முருகன் அநுபூதியைப் பெறவேண்டும்.

**கோவே:-**

சகலலோக ஏகநாயகன் முருகன்.

"சர்வாண்டாதிபதௌ தஸ்மின் குஹே பரமபாவனே"

**குறமின் கொடிதோள் புணரும் தேவே:-**

முருகன் வள்ளியை மணந்து உலகங்கட்கெல்லாம் இன்பத்தை வழங்குகின்றான்.

**சிவசங்கர தேசிகனே:-**

சிவம்- மங்கலப் பொருள்.

சிவம் என்ற சொல் வேதத்தின் இதயமாக விளங்குவது. சிவ சப்தம் உபநிடதங்களுள் பயிலப்படுவது.

"ப்ரபஞ்சோபசமம் சாந்தம் சிவம் அத்வைதம்
சதுர்த்தம் மந்யந்தே"

-மாண்டூக்ய உபநிஷத்.

"சிவ என்று கொடிய சண்டாளன் சொன்னாலும் அவனுடன் பேச வேண்டும், அவனுடன் வசிக்க வேண்டும், அவனுடன் புசிக்க வேண்டும்" என்று வேதம் கூறுகின்றது.

அபிவா யச் சண்டாள: சிவ இதி வாசம் வதேத்
தேந ஸஹ ஸம்வதேத் தேந ஹை ஸம்வஸேத்
தேந ஸஹ புஞ்ஜீத

-முண்டக உபநிஷத்.

சங்கரன். சம்- சுகம்; கரம்- செய்கின்றவன்; சுகத்தைச் செய்கின்றவன் சங்கரன். எனவே முருகனுடைய திருவருளை நாடி அப்பரமனை வழிபட்டு, பிறவிக்கு வித்தாகிய ஆசையை விட்டு அநுபூதி பெற வேண்டும்.

## கருத்துரை

சிவசங்கர தேசிகனே! ஏழு பிறவிகட்கும் வித்தாகிய மூன்று ஆசைகளையும் விலக்கி அருள்செய்.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பராமாயணப் பெண்கள்

– திரு அ. சுப்பிரமணியம் அவர்கள் –

பாற்சமுத்திரத்தைப் பூனை முழுவதும் பருக எண்ணியமை போன்று ஸ்ரீ ராம காவியத்தைப் பருக ஆசைப்பட்ட கம்பன் படைப்பில் தசரதன், ராமன், இலக்குவன், பரதன், சத்துருக்கினன், குகன், அனுமன், சுக்கிரீவன், வாலி, இராவணன், கும்பகர்ணன், விபீஷணன், மாரீசன் ஆகிய ஆண் பாத்திரங்களும், கௌசலை, கைகேயி, சுமித்திரை, சீதை, கூனி, சூர்ப்பனகை, தாரை, சபரி, மண்டோதரி, திரிசடை, ஊர்மிளையாகிய பெண் பாத்திரங்களும் காட்சி தருகின்றனர். இவர்களில் பெண் பாத்திரங்கள் பற்றியுரைத்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும். இவர்கள் செயற்கரும் செயல்கள் செய்து காவிய நாயகிகளாகத் திகழ்கின்றமையோடு இதிகாச மங்கையருமாகினர்.

கேகய நாட்டரசன் மகளாகிய கைகேயி சிறுமியாயிருந்தபோது தமது நந்தவனத்திலே தவம் செய்து கொண்டிருந்த முனிவரொருவருக்குப் பணி செய்ய நியமிக்கப்பட்டிருந்தாள். முனிவர் நிஷ்டையிலிருந்தபோது மூச்சுப் பேச்சின்றியிருப்பதுகண்டவள்பயந்து மூச்சுளதோ? எனப் பார்க்கவென்று மூக்குத் துவாரத்தில் கைவிரலை வைத்தாள். விழிப்படைந்த முனிவர் கோபங்கொண்டு சிறுமியின் விரல் இரும்பாகும்படி சாபமிட்டார். பின்னர் உண்மைநிலை உணர்ந்தவர் விமோசனமாகத் தேவையேற்படும் போது நினைக்க விரல் இரும்பாக மாற்றினார். இது சம்பராசுரப் போரில் வெற்றி பெறத் தசரத னுக்கு உதவி இரு வரங்கள் பெற்றுத் தந்தன. இவையே "கொடுமனக் கூனி"யின் சாதுரியமான பேச்சின் வாயிலாக ஸ்ரீ ராகவன், சீதை, இலக்கு வனாகியோரை வனம் புக வைத்தது. இங்கு கூனியைக் "கொடுமனக் கூனி" என வர்ணிக் கிறார் கம்பர். இராமபிரானது மண்ணுருண்டை யால் முதுகு மாத்திரமன்றிக் கூனிக்கு மனமும் குறுகிப் போனதாம். ராமனது பட்டாபிஷேக நாள் குறிக்கப்பட்டது. ஊரெல்லாம் ஆடிப்பாடி மகிழ்ந் தது. ஸ்ரீராமன் பட்டாடை புனைந்து கைகேயிடம் ஆசிபெற வருகிறான். அங்கு "தாளிரும் சடைகள் தாங்கிப் பூழி வெங்கானம் நல்கிப் புண்ணிய நதிகளாடி ஏழிரண்டாண்டில்வா" என்றியம்பினன் அரசன் என்று கைகேயி கூறியது கேட்ட ராமன் முகம் மலர்ந்து அன்னையிடம் கூறச் செல்கிறான். பெற்றவள் தானும் வருவதாக அடம்பிடிக்க இல்லற தர்மத்தை விளக்கிக் கணவனருகிருந்து பணிவிடை செய்வதை வலியுறுத்த அதையே தமக்குச் சாதகமாக்கிச் சீதையும் உடன் வர இலக்குவனைப் பிரிய முடியாது உடன் செல்ல அன்னையாம் சுமித்திரையிடம் கூற அன்னை "அண்ணனைப் பிரியாது காப்பாற்றுக, முடியவில்லையானால் முன்னம் நீ இறந்த செய்தி என் செவிக்கெட்டவேண்டு"மென வேண்டுகிறாள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் அண்ணனுடன் அண்ணியும் வனம் போக அவர்களது சேவைக்காக நான் செல்லும்போது மனைவியும் வரப் பிடிவாதம் பிடித்தால் என்ன செய்வதெனக் கலங்கியபடி அவளிருக்குமிடம் சென்றவனுக்குப் பேரதிர்ச்சி ஏற்பட்டது. அண்ணனது வனவாச செய்தி கேட்டு மக்கள் யாவரும் கண்ணீர் விட "நீ மட்டும் சீவி முடித்து நிற்பதேன்?" எனக் கோபித்தான். அதற்கவள் "ஸ்ரீ ராமன் தானே? காடேக வேண்டும். உங்களை யாரும் அவருடன் போகச் சொல்லவில்லையே? எனவே நீங்கள் ஏன் அவருடன் செல்ல வேண்டும்? நீங்கள் இந்நாட்டின் இளவரசர். இந்த ராஜ போகத்தை அனுபவிக்க ஆசை கொண்டே உங்களைத் திருமணம் செய்தேன். விதிப்பிரகாரம் அவர் வனம் செல்வதால் நாம் ஏன்? எமது சுக வாழ்வை இழக்க வேண்டும்" என்றாள்.

அது கேட்ட இலக்குவன் கடுங்கோபங் கொண்டவனாக கொடிய அரக்கியரை விடவும் கொடியவள்போல் தோன்றியவளை பெண்குலத்தின் அவமானச் சின்னம் எனக் கருதியவன், அவளை மனைவியாக அடைந்த துர்மதியை நினைந்து வருந்தி "அடி பாவி நீ கைகேயியை விடவும் கொடியவள். அரச போகத்திலும் ஆடம்பர வாழ்விலும் ஆசை கொண்டவள். பதிபக்தி இல்லாதவள் நீ. உன்னை என் மனைவியென எண்ணுவதே பாவம். "இன்று முதல் நீ யாரோ; நான் யாரோ" என்று கோபாவேசம் கொண்டவன், "போகிறேன்" என்று போயினான்.

இராம இலக்குவனது சகோதர பந்தம் அறியாதவள் ஊர்மிளை; அண்ணனுக்கும் அண்ணிக்கும் பதின்னான்கு வருடங்கள் பணிவிடை செய்யப்போகும் நாயகன் தன்னிடம் ஏற்படும் காதல் நினைவுகளால் மனம்மாறி விடக் கூடாதெனக் கருதியே இந்த நாடகத்தை நடத்தினாள். தனது மனவுணர்வுகளையெல்லாம் புதைத்துக் கணவனுடன் உரையாடிய ஊர்மிளை அவன் மறைந்ததும் யாவும் துறந்து விக்கி விக்கி அழுது ஊண் உறக்கமின்றி அஞ்ஞாதவாசம் மேற்கொண்டிருந்தாள். இலக்குவன் மேற்கொண்டதோ வனவாசம்; ஊர்மிளை பேணியது அஞ்ஞாதவாசம். கடமையெனும் யாகத்தீயில் தன்னை நெய்யாக்கி சன்யாசினியாக எவரிடமும் கூறாத தியாக வாழ்வை இலக்குவன் கூட அறிந்தானில்லை.

வனமேகி இராவணனை அழித்து அயோத்திக்கு வந்து பட்டாபிஷேகம் செய்த வேளையிலும் இலக்குவன் ஊர்மிளையை நினைக்கவோ பார்க்கவோ இல்லை என்பதை ஊகித்தறிந்த சீதையின் வற்புறுத்தலில் ஊர்மிளை கூறியது கேட்டுப் பிரமித்துப்போன சீதை சகோதரியாகிய ஊர்மிளையை நோக்கி "ஆயிரம் சீதைகளும் உனக்கு ஈடாக மாட்டார்கள். விரைவில் இளவலுக்கு நடந்தவை கூறிப் பிரிவுத் துயரைத் தீர்த்து வைப்பேன்" என்றாள். இதற்கான தருணத்தை எதிர்பார்த்திருந்தாள்.

இத்தருணத்தில் கர்ப்பிணியான சீதா பிராட்டியைக் காட்டுக்கு அழைத்துச் சென்று வால்மீகி முனிவரின் ஆச்சிரமத்தில் விட்டு வருமாறு ஸ்ரீராமன் இலக்குவனுக்குப் பணிக்கிறான். இதுபோன்று சீதை இரண்டாவது முறை வனவாசம் செய்யச் சதி செய்தவள் கைகேயியின் மகளான "குகியி" என்கிறது நாட்டுப்புற ராமாயணப்பாடல். இது சந்திராவதி என்ற பெண் 17ஆம் நூற்றாண்டில் எழுதிய ராமாயணத்தில் உள்ளதாக சேனாதிபதியெனும் அறிஞர் கி.வா. ஜ விடம் கூறியதான செய்தி உண்டு. அப்போது குகியி சீதையிடம் "ராவணன் எப்படி இருப்பான்" என்று கேட்டாள். அதற்கு ஜானகி அவனை நான் பார்த்தது இல்லை. ஆனால் கால் நகத்தைப் பார்த்திருக்கிறேன். அதைக்கொண்டு உருவம் எப்படி இருக்கும் என்று உணரமுடியும்" என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது எப்படி? முடியும்" என்றாள் குகியி. "தாராளமாக முடியும். வரைந்துகூடக் காட்டலாம்" என்றாள் மைதிலி. ஆச்சரியப்பட்ட குகியி விசிறி ஓலையை நீட்டி "இதில் வரை பார்ப்போம்" என்றாள்.

சிரித்தபடி ஓலையை வாங்கியவள் கை நகத்தாலே தசக்கிரீவன் உருவை வரைந்து காட்டினாள். "அண்ணீ நீ, பெரிய ஓவியக்காரி" என்று புகழுரை கூறிக்கொண்டிருந்தபோது சீதை அப்படியே துயின்றாள். இதுதான் சூழ்ச்சிக்கேற்ற தருணம் எனக் கருதிய குகியி சீதையின் மார்பில் படத்தை மெதுவாக வைத்துவிட்டு வெளியேறினாள். சூழ்ச்சியின் மறு கட்டமாக குகியி ராமனிடம் போய் "அண்ணா! வந்து உன் மனைவியைப் பார். அவள் மனதில் யாதுளதோ?" என்றழைத்தாள். அவளுடன் அந்தப்புரம் சென்ற ராகவன் சீதை அமைதியாக உறங்குவதைக் கண்டான். குகியி, மைதிலியின் மார்பிலிருந்த விசிறியைச் சுட்டிக் காட்டினாள். அதில் இராவணன் உருவம் கண்ணிற் பட்டது. ராமன் மனைவியை எழுப்பி "இதை வரைந்தது யார்?". சீதை தான் வரைந்ததை ஒப்புக்கொண்டாள். இலக்குவன் மூலமாக 2ஆம் வனவாசம் செல்கிறாள் சீதை.

அது சரி, இது கம்பராமாயணத்தில் இல்லை என்றாலும் வண்ணான் அல்லது குகியி சொன்னது கேட்ட ராமன் யுத்தம் முடிந்ததும் அக்கினிப் பிரவேசம் செய்வித்ததை ஏன் மறந்தார்? எனினும் இலக்குவன் தேர் செலுத்தச் செல்லும் சீதை" அவனிடம் ஊர்மிளையின் தியாகத்தை எடுத்துக்கூறி அவளை ஏற்றுக்கொள்ளச் செய்ததோடு ஊர்மிளையின் தியாக நிலையை உனக்குத் தெரிவிக்க இவ் வனவாசம் உதவியது. எனவே எக்காரணமாகவும் இதுபோல் தண்டனை எதுவும் மனைவியான ஊர்மிளைக்குத் தந்துவிடாதே! தர்மம் ஒருபோதும் தாங்காது" என்றாள்.

தாங்கமுடியாத மனப்பாரத்துடன் வந்த இலக்குவன் ஊர்மிளையைச் சந்தித்துப் பாதங்களில் விழுந்து கண்ணீரால் கழுவினான். மாய மானைத் துரத்திச் சென்ற ராமன் அதனைக் கொன்றபோது அது எழுப்பிய அவலச் சத்தம் கேட்டுத் தன்னை விட்டகலாத இளவல்மேல் அபாண்டப்பழி சுமத்திய சீதைக்குக் கிடைத்த தண்டனையாகவும் 2ஆம் வனவாசம் அமையலாம். அடுத்து வருகிறாள் சூர்ப்பனகை. அவள் வருகையைப் படம் பிடிக்கிறார் கம்பர்.

"பஞ்சியெழில் கொஞ்சு மலர்பல்லவ மணுங்க
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடியளாகி
அஞ்சொல் இளமங்கை யென நஞ்சனைய
வஞ்சமகள் வந்தாள்" என்கிறார்.

வனத்திலே இலக்குவனால் மானபங்கமாகி இராம ராவண யுத்தத்திற்கு அடிகோலியவளே சூர்ப்பனகைதான்.

கம்பர் காட்டும் தாரை வாலிக்கு உரைத்தவையெதுவும் வாலி காதில் ஏறவில்லை. அவ்வாறே மண்டோதரி கூறிய அறிவுரைகளும் ராவணனுக்குப் புறக்குடத்தில் வார்த்த நீர் போலாயது. சிறை வைக்கப்பட்ட சீதா பிராட்டிக்கு உற்ற துணையாய் இருந்தவள் திரிசடையாவாள்.

இவ்வாறு கம்பராமாயணப் பெண்களில் நல்லவர்களும் வல்லவர்களும் தீயவர்களும் இருக்கவே செய்கிறார்கள். சந்தர்ப்பம் வரும்போது கம்பராமாயண ஆண்கள் பற்றிய கட்டுரை வரையலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

(தொடர்ச்சி...

## 13. வள்ளல் ரமணன்

என் வாலிப வயதில், கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தபோது, மதுரைக்கு அடிக்கடி போகவேண்டி வந்தது. அப்பொழுதெல்லாம் பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி அய்யர் வீட்டில் தங்குவது வழக்கம். அவருடன் நெருங்கிப் பழகியதில், அவர் கல்லூரி அலுவல்களில் மூழ்கியிருந்தாலும், அவர் மனதில் பகவான் நினைவே நிறைந்திருந்தது என்று என்னால் அனுமானிக்க முடிந்தது. நான் அங்கு போக ஆரம்பித்த புதிதில் அவருடைய தந்தை ரங்கநாதய்யர் இருந்தார். இரவு வெகுநேரம் வரை அப்பாவும் பிள்ளையும் பகவானையும், அதன் மகிமையைப் பற்றியும் பேசி மகிழ்வதைப் பார்த்திருக்கிறேன்.



வயதான கிருஷ்ணமூர்த்தி அய்யர் தற்சமயம் திருவண்ணாமலையில் தனது இரண்டாவது மகன், ஆடிட்டரும், பகவானின் பரம பக்தருமான ரமணனுடன் இருக்கிறார். அவர் சிலகாலம் மனைவியுடன் ஆச்ரம வளாகத்தில் தங்கியிருந்தது எங்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சியாக இருந்தது. அந்தக் காலகட்டத்தில் அவருடன் மேலும் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. “ரிபு கீதையின் சாராம்சம்” என்ற அவருடைய ஆங்கிலப் புத்தகம் 1985இல் பகவானுடைய ஆராதனையன்று வெளியிடப்பட்டது. சந்தோஷமான அந்த நாட்களில் நான் அவரைக் குறிப்பாக ஒரு கேள்வி கேட்டேன். பகவான் உங்களுக்குக் கற்பித்ததென்ன? அதற்கு அவர் சொன்னார்:

பகவானுடைய அன்றாட வாழ்க்கையின் பழக்கவழக்கங்களைக் கூர்ந்து கவனித்து, முடிந்தவரை அவற்றைப் பின்பற்ற முயற்சிப்பதையே நான் எனது சாதனையாகக் கொண்டேன்.

பகவானின் தினசரி வாழ்க்கையில், பரிசுத்தம், சீரான உடை, நெற்றியில் விபூதி மற்றும் குங்குமம் தரிக்கும் பழக்கம், சுற்றியிருப்பவருடன், அனுபவிக்கும் எல்லாவற்றையும் சமமாகப் பகிர்ந்து கொள்ளுதல், கால அட்டவணையை வழுவாமல் பின்பற்றுதல், எவ்வளவு “தாழ்ந்த” வேலையானாலும், கச்சிதமாக வேலையைச் செய்தல், ஒரு வேலையையும் முடிக்காமலோ, அரைகுறையாக விடாமலோ இருத்தல், ஒவ்வொரு செய்கையிலும் குறையற்ற முழுமையை நாடல், உறங்கும் நேரம், கடின உழைப்புக்குப் பின் எடுக்கும் ஓய்வுநேரம் தவிர மற்ற நேரங்களில் இடைவிடாத உழைப்பு, என்றும் பிறரைவிடத் தன்னை உயர்வாக எண்ணாதிருத்தல், எப்பொழுதும் சத்தியமே பேசுவது அல்லது உண்மை பேசுவதால் பிறருக்குத் துன்பமோ, அல்லது பிறர் பெயருக்கு இழுக்கோ ஏற்படுமானால் அதைப் பேசாமல் மௌனமாயிருப்பது. சுய உதவி செய்து கொள்வது, சிறு வேலையாயினும் தன்னால் செய்து கொள்ளக்கூடுமானால், பிறரை செய்யச் சொல்லாமல் இருப்பது, தோல்வி ஏற்பட்டால், பிறர் மேல் பழிசுமத்தாமல் அதன் பொறுப்பைத் தானே ஏற்றுக்கொள்ளுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி தோல்விகளை சமமாகப் பாவிப்பது. பிறருடைய அமைதியைக் குலைக்காமலிருப்பது, சாப்பிட்ட இலையிலோ, தட்டிலோ மிச்சம் வைக்காமல் சுத்தமாகச் சாப்பிடுவது, பிறர் விஷயத்தில் தலையிடாதிருப்பது, எதிர்காலத்தைப்பற்றிக் கவலைப்படாதிருப்பது. இவை எல்லாம்தான் ரமண பகவான் தன் அடியார்களுக்கு பின்பற்றும்படியாக, தன் உதாரணத்தால் நடத்திக் காண்பித்தது. பகவானின் உதாரணத்தை "மனோ, வாக்கு, காய"ங்களால் முழுபலத்துடன் நம் வாழ்வில் பின்பற்ற முயலவேண்டும்.

"ஆன்மீக விஷயத்தில் பகவானின் போதனை என்ன என்று சொல்ல எனக்கு வார்த்தைகளில்லை. எழுத தைரியமில்லை.

*    *    *    *    *    *

உபதேச சாரத்தை பகவான் நான்கு மொழிகளில் எழுதியிருக்கிறார். தெலுங்கும், சமஸ்கிருதமும் இரண்டு வரிகள். தமிழில் மூன்றுவரி. மலையாளத்திலோ நான்கு வரிகளான பாக்களாக இருக்கின்றன. முருகனார் கூட உபதேச சாரத்தில் ஏதாவது பாட்டில் சந்தேகம் எழுந்தால், விரிவான மலையாள பாடலைத்தான் பார்ப்பார். குஞ்சு ஸ்வாமி சுட்டிக்காட்டியது போல் மலையாள பாடலில் இன்னொரு விஷேசமும் உண்டு. ஸ்தோத்திரங்கள் முதலிய ஆன்மீக பாடல்களிலெல்லாம் முடிவில் பலஸ்ருதி இருக்கும். படிப்பவருக்கு அதனால் இன்னென்ன பலன்கள் கிடைக்கும் என்று அதில் விவரிக்கப்பட்டிருக்கும். பகவான் தான் எழுதிய எதிலும் பலஸ்ருதி சேர்க்கவில்லை. ஆனால் சமஸ்கிருத நூல்களில், தான் தமிழில் மொழி பெயர்த்தவற்றில் வரும் பலஸ்ருதிகளை தமிழில் மொழி பெயர்த்திருக்கிறது. உதாரணமாக தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரத்தின் பலஸ்ருதி. ஆனால் மலையாள உபதேச சாரத்தில் மாத்திரம், ஒரு மலையாள பக்தர், பாலகிருஷ்ணசாமியின் வேண்டுகோளுக்கிணங்கி, முப்பது பாடல்களைத் தவிர, இரண்டு மலையாள செய்யுள்களை பலஸ்ருதியாக இயற்றியிருக்கிறது பகவான்.

நான் ஹாலுக்குள் நுழைந்தவுடன் பகவான் அந்த இரண்டு மலையாள பலஸ்ருதி பாக்களையும் காண்பித்தது. அவற்றின் பல்லவி, கொட்டுவின் பெண்காள் எல்லாவரும் கும்மி என்றிருந்தது. "பெண்களுக்கு மாத்திரம் தான் கும்மியா" என்றேன். பகவான் ஒன்றும் சொல்லவில்லை. மறுநாள் முருகனார் ஹாலில் நுழைந்ததும் பகவான் அவரிடம், "குஞ்சுஸ்வாமி ஒரு சந்தேகம் எழுப்பியதால் 'பெண்காள்' என்றிருந்ததை 'அன்பர்காள்' என்று மாற்றிவிட்டேன்" என்றது. பின், என் பக்கம் திரும்பி 'இப்போ திருப்தி தானே?' என்றது.

சந்தோஷ மோடு உபதேச சாரம் கொண்டு
சந்நிஷ்டனாய் கும்மி கொட்டு கொட்டு
சந்தாப சாந்தியும் சந்ததா னந்தவும்
சந்திக்கும் இல்லிதில் சங்கை யொட்டும்

ஒட்டுமே கஷ்டங்கள் ஒட்டாதே விட்டிடான்
உபதேச சாரத்தே கொண்டுக் கூடி
கொட்டுவின் அன்பர்கள் எல்லாவரும் கும்மி
கொட்டுவின் ஆனந்தம் கிட்டு வானாய்!

(தொடரும்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதங்களில் சிறந்தது ஆடி மாதம்

– திரு கு. சிவபாலராஜா அவர்கள் –

ஆடி மாதம் அல்லது ஆஷாட மாதம் இவை இரண்டும் ஒன்றே குறிப்பன. ஆடி மாத அமாவாசைக்கு பின் வரும் ஒன்பது நாட்கள் ஆஷாட நவராத்திரியாக தேவி அடியார்களால் கொண்டாடப்படுகிறது. இது வாராஹி நவராத்திரியாகவே கொண்டாடப்படுகிறது. வாராஹியை வழிபட நம் துன்பம் எல்லாம் போகும். வாராஹி, அம்பாளின் வராக தலை வடிவம் (பன்றித்தலை) அமைந்து தோற்றமளித்து அடியார்களுக்கு அருள்பாலித்து வருகின்றார். ஆடி மாதம் அம்பாளுக்கு உரிய மாதமாகும். அம்பிகை வழிபாடு இம் மாதத்தில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.



தட்சிணாயன புண்ணிய காலம் ஆடி மாதத்தில்தான் தொடங்குகிறது. இப்புண்ணிய காலத்தின்போது சூட்சும சக்திகள் வானத்திலிருந்து வெளிப்படும். அந்த சமயத்தில் பூஜைகள், வேத பாராயணங்கள், ஜபங்கள், நீத்தார் வழிபாடுகள் செய்தால் பலன்கள் அதிகமாகக் கிடைக்கும்.

பிராணவாயு அதிகமாகக் கிடைக்கும் மாதமும் இதுதான். இந்த சமயத்தில் ஜீவாதார சக்தி மிகுந்து காணப்படுவதால்தான் விவசாயத்தில் விதை விதைப்பது இந்த மாதத்தில் ஆரம்பிக்கும் வழமை தோன்றியது. "ஆடி விதை தேடி விதை" என்னும் பழமொழியும் உண்டானது. நமக்கு ஒரு வருடம் என்பது தேவர்களுக்கு ஒரு நாள். அதன்படி தேவர்களுக்கு ஆடி மாதத்தில் மாலை நேரம் தொடங்குகின்றது. அதனாலும் பூஜைகள், ஆராதனைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுந்திருப்பது இயல்புதானே. சூரியன் கடக ராசியில் சஞ்சரிக்கும் கால அளவான 31 நாட்கள் 28 நாழிகை 12 விநாடி கால அளவைக் கொண்டது இந்த ஆடி மாதம். எனவே இதைக் கர்க்கடக மாதம் என்றும் சொல்வதுண்டு. கற்கடக ராசி சந்திரனுக்குரியது. சிவ அம்சமான சூரியன், சக்தி அம்சமான சந்திரனின் ஆட்சி வீட்டில் இருப்பதால், அதாவது ஒன்று சேர்வதால் ஆளுமை பலம் அடைகிறது. சக்தியின் பலம் அதிகரிக்கிறது. இந்த மாதத்தில் மட்டும் சிவம் சக்திக்குள் அடக்கமாகி விடுகிறார். எனவே சிவனை விட அம்மனுக்கு ஆடி மாதத்தில் ஆற்றல் (சக்தி) அதிகமாக இருக்கும் என்பது ஐதீகம். அதனாலேயே ஆடி மாதம் அம்மன் வழிபாட்டுக்குரிய மாதமாகத் திகழ்கின்றது. மதுரை மீனாட்சி அம்மை அவதரித்தது ஆடி மாதத்தில்தான். ஆடி மாதத்தில்தான் மலையரசன் மகளான பார்வதிதேவி மலையரசனுக்கு மகளாகப் பிறந்தாள் என்கிறது தேவிபாகவதம்.

ஆடி மாதம் வந்ததும் அம்மன் கோயில்கள் அனைத்திலும் ஒருவித புத்துணர்வு, கோலாகலம் நிறைந்து காணப்படும். மாரியம்மன் கோவில்களில் இதைச் சிறப்பாகக் காணலாம். ஆடிக்கூழ் வார்த்தல், விளக்குப் பூஜைகள், கூட்டு வழிபாடுகள் முதலியவற்றிற்கு ஆடி மாதம் மிகவும் ஏற்றது. ஆடி மாதத்தில் வேப்பம் இலைகளாலும், எலுமிச்சம் இலைகளாலும் அம்மனை வழிபடுவது சிறப்பு. பக்தி பூர்வமான இச் செயலுக்கு, அறிவியல் ரீதியான விளக்கமும் உண்டு. ஆடி மாதம் மழைக்காலத்தின் ஆரம்பம். தொற்று நோய்கள் பரவுவதற்கு வாய்ப்புகள் அதிகமாக இம் மாதத்தின் தொடக்கத்திலிருந்தே ஆரம்பமாக இடமுண்டு. எனவே வேம்பும், எலுமிச்சையும் நோய் தீர்க்கும் பிரசாதமாக கோயில்களில் வழங்கப்படுகின்றன. இவை இரண்டுமே இயற்கையான கிருமி நாசினிகள்தானே. இவை அம்மனுக்கும் படைக்கப்படுகின்றன. பின்னர் கோயிலில் கூடும் பெருமளவு அடியார்களுக்கு- அவர்கள் மத்தியில் தொற்று நோய்கள் பரவாவண்ணம் இவை வழங்கப்படுகின்றன. வெப்பம் குறைவான இக் காலகட்டத்தில் ஆடிக்கூழ் அம்மனுக்குப் படைக்கப்பட்டு, பின் பிரசாதமாக அடியார்களுக்கு இக்கூழ் வழங்கப்படுகிறது. வெப்பம் குறைந்த காலத்தில் உணவு செரிமானம் குறைவதால் கூழ் ஏற்றதொரு பிரசாதமாகும்.

ஆடி மாதத்தில் வரும் செவ்வாய் வெள்ளிக்கிழமைகள், ஆடிப் பதினெட்டு, ஆடிப்பூரம், ஆடிப் பௌர்ணமி என பல சிறப்பு வழிபாட்டுத் தினங்கள் உள்ளன. ஆடிச் செவ்வாய் விஷேடவிரத தினமாக நம்மவர்களால் அனுஷ்டிக்கப்படுகிறது. “ஆடிச் செவ்வாய் தேடிக் குளி, அரைத்த மஞ்சள் பூசிக் குளி” என்பது பழமொழி. ஆடிச் செவ்வாயில் எண்ணெய் தேய்த்துக் குளித்தல் சிறப்பு. அவ்வாறு செய்தால் வீட்டில் மங்கலம் நிறையும் - தங்கும்- என்பதும் மரபு. மங்கள வாரம் செவ்வாய்க்கிழமை என்பதும் காண்க. தமிழகத்தின் தென் பகுதிகளில் ஆடிச் செவ்வாயன்று “அவ்வை நோன்பு” கடைப்பிடிக்கும் வழக்கம் இன்றும் உள்ளது.

ஆடிச் செவ்வாயன்று விரதமிருக்கும் எல்லாப் பெண்களும் ஒரே வீட்டில் கூடுவார்கள். அவ்வீட்டில் அன்று முழுவதும் கைக் குழந்தைகள் தவிர வேறு எந்த ஆணுக்கும் இடம் கிடையாது. இரவு பத்து மணியளவில் அவர்களுள் வயது வந்த பெண் ஒருவர் (முதிர்வு) அவ்வையின் கதையையும் அம்மனின் கதையையும் மற்றையவர்களுக்குக் கூறுவார். அம்மன் பூஜையும் தொடங்கும். பூஜையில் உப்பில்லாமல் செய்யப்பட்ட கொழுக்கட்டைகள் (அரிசி மா) படைக்கப்பட்டு பிரசாதமாக வழங்கப்படும். விரதமிருக்கும் பெண்கள் மட்டுமே அதை உண்ணலாம். மறுநாள் காலையில்தான் ஆண்கள் வீட்டுக்குள் வரலாம். இந்த பூஜைப் பிரசாதங்களை ஆண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிப்பாகப் பார்க்கக்கூடாது என்பது ஒரு எழுதாத சட்டமாக இருந்து வருகிறது. இந்தப் பூஜையைக் கடைப்பிடித்தால் தீர்க்க சுமங்கலித்துவம், நீங்காத செல்வம், இணக்கமான கணவன், நல்ல குழந்தைகள் வாய்க்கும் என்பர். மணமாகாத கன்னியர்க்கும், குழந்தையில்லா தம்பதிகளுக்கும் இந்தப் பூஜை ஒரு வரப்பிர சாதமாகும்.

ஆடிவெள்ளி நாளன்று மஞ்சள் தேய்த்து நீராடி, மாக்கோலமிட்டு, திருவிளக்கின் ஐந்து முகங்களையும் ஏற்றி, லலிதா சகஸ்ரநாமம், அம்மன் பாடல்களைப் பாடி பூஜை செய்தால் நல்ல பலன் கிட்டும். வயதுக்கு வராத பெண்களை (சிறு பெண்களை) அம்மனாகப் பாவித்து அவர்களுக்கு வெற்றிலை, பாக்கு, மஞ்சள், குங்குமம், அட்சதை, சீப்பு, தோடு, கண்ணாடி, வளையல், ரவிக்கை ஆகிய ஒன்பது பொருட்களையும் தட்சிணையுடன் வைத்துக் கொடுத்து அன்னமிடல் வெகு சிறப்பான பலன்தரும்.

ஏன் ஒன்பது பொருட்கள் கொடுக்க வேண்டும் என்பதற்கு தேவிபாகவதம் விளக்கம் அளிக்கிறது.

அம்பிகையின் அம்சமாக சர்வபூதக மணி, மனோன்மணி, பலப்பிரதமணி, பல விகாரிணி, கலவிகாரிணி, காளி, ரவுத்திரி, சேட்டை, வாமை ஆகிய நவ சக்திகளை குறிப்பிடுவர். இந்த நவ சக்தியரைக் குறிக்கும் வகையில் பெண் குழந்தைகளுக்கு ஒன்பது புனிதப் பொருட்கள் வைத்துக் கொடுத்தல் வழக்கத்திற்கு வந்தது.

ஆடிவெள்ளியன்று நவசக்தி பூஜை நடைபெறும். சில அம்மன் ஆலயங்களில் மட்டும் இது நடைபெறும். ஒன்பது வகையான மலர்களால் ஒன்பது சக்திகளையும், ஒரே நேரத்தில், ஒன்பது சிவாச்சாரியர்களால் அர்ச்சிப்பதே நவசக்தி பூஜை எனப்படும். இது மிகுந்த பலனளிக்கக் கூடியதாகும்.

சக்தி பீடங்களில் ஒன்றெனக் கருதப்படும் திருவானைக்காவில் ஜம்புகேஸ்வரர் கோயிலில் ஆடிவெள்ளி மிக விசேடமாகும். இங்கு அம்மன் மாணவியாக இருக்க, சிவன் குருவாக இருந்து உபதேசம் செய்தருளினார். அதனால் பாடசாலைச் சிறுவர்கள் இங்கு ஆடி வெள்ளியன்று வேண்டிக்கொண்டால் ஞாபக சக்தி மிகுந்து வரும். ஆடிவெள்ளி ராகு காலத்தில் துர்க்கைக்கு நெய் விளக்கேற்ற வாழ்வு ஒளிபெறும்.

ஆடிப்பௌர்ணமியன்று ஆடித்தபசு விழா சிறப்பாகக் கொண்டாடப்படுவது வழக்கம். இது பன்னிரண்டு நாட்கள் கொண்டாடப்படுகிறது. பதினோராவது நாள் ஆடித் தபசு. நெல்லை மாவட்டம் சங்கரன் கோயிலில் இது பக்திபூர்வமாகக் கொண்டாடப்படுகிறது. ஆடித் தபசுக் காட்சியைக் கண்டால் பாவங்கள் அனைத்தும் கரைந்து மனம் லேசாகும் என்பது நம்பிக்கை. திருமால் குதிரை முகத்துடன் ஹயக்கிரீவ அவதாரம் எடுத்து அசுரர்களோடு போரிட்டு வேதங்களை மீட்டு வந்த நாள் ஆடிப் பௌர்ணமி. அன்றுமுதல் லட்சுமி-ஹயக்கிரீவ வழிபாடு பிரபலமடைந்தது. வேதங்களை மீட்டு வந்ததால் கல்விக்கு அதிபதி இவர் எனவே மாணவர்கள் ஹயக்கிரீவனை வணங்க வேண்டும். பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற ஹயக்கிரீவ வணக்கம் இன்றியமையாதது. அதனால் நிச்சயம் பலன் பெறலாம்.

ஆடி மாதம் பூர நட்சத்திரத்தன்று கொண்டாடப்படுவதே ஆடிப்பூரமாகும். இது அம்மனுக்கு மிகவும் உகந்த நாள். இந்த நாள் விழாவின் விஷேடம் என்னவெனில், அம்மனைக் கர்ப்பிணியாக ஆவாகனம் செய்வதுதான். உலகத்தின் தாயான அன்னைக்கு அவள் பிள்ளைகளான நாம், கர்ப்பிணிகளுக்கு செய்ய வேண்டிய பணிவிடைகளை செய்து மகிழும் நாளே ஆடிப்பூரமாகும். இந்தியாவில் இதை வளைகாப்பு நடாத்துதல் என்பர். அம்மனின் வயிற்றைக் கர்ப்பிணிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிறுபோல பருத்த தோற்றமுடையதாக தோன்றச் செய்வார்கள். இவ்வாறு செய்தால் வம்ச விருத்தியும் நல்ல குழந்தைகளும் தோன்றுவர் என்கின்றன புராணங்கள். கர்ப்பிணிகளுக்கு வளைகாப்பு அவசியம் என்பதால் இந்தியாவில் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அதன்படி, அருட்பாடல்கள் பாடியபடி அம்பிகைக்கு வளையல்கள் அடுக்கப்படுகின்றன. பின்னர் அந்த வளையல்கள் பிரசாதமாக வழங்கப்படுகின்றன. தேவியின் திருக்கரங்களில் தவழ்ந்த வளையல்களை இல்லத்தில் வைத்திருந்தால் வாழ்க்கையே ஆனந்தமயமாகும். பெண்கள் தீர்க்கசுமங்கலியாக இருப்பர், குழந்தை இல்லாத பெண்களுக்கு குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கைகள் நிலவுகின்றன.

ஆடி வெள்ளியில் மாவிளக்குப் போடும் வழக்கமும் உண்டு. இவ்வழக்கம் செல்வ வளம் சேர்க்கும் என்பது நம்பிக்கை. நினைத்த காரியம் நடக்கவும் மாவிளக்குப் போடும் வழக்கமும் உண்டு.

ஆண்டாள் அவதரித்த தினம் ஆடிப்பூரமாகும். அவரின் திரு அவதாரத்தை "ஆடியில் மலர்ந்த அரும்பு" என சிறப்பித்துக் கூறுவர். அவளின் அவதார தலம் ஸ்ரீ வில்லிபுத்தூர். அங்கு ஆடிப்பூர தினம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அது ஓர் திருவிழாவாக அங்கு கொண்டாடப்படுகிறது. திருமாலே தனக்கு மணாளனாக வாய்க்கவேண்டுமென்று பாமாலைகள் புனைந்து விரதம் இருந்தவள் கோதை. தான் சூடிய மாலையை மாலவனுக்கு அளிக்கும் பேறினைப் பெற்றவள். கோதை சூடிக் களைந்த மாலைகளே தமக்கு விருப்பம் என அந்த ஆண்டவனே உணர்த்திய பெருமைக்குரியவள். ஆடிப்பூர நன்னாளிலே ஆண்டாளுக்கு சிறப்புப் பூஜைகள் நடக்கும். அந்தப் பூஜைகளில் ஏராளமான பெண்கள் தவறாமல் கலந்து கொள்வர். அவ்வாறு செய்தால் மனதிற்கினிய கணவனோடு தீர்க்க சுமங்கலியாக பல்லாண்டு மங்கல வாழ்வு வாழலாம் என்பது நம்பிக்கை.

ஆடிப்பெருக்கு நாளானது நீர் நிலைகள் பெருகி, நீர் வளம் பெருகி பூமியில் பயிர்கள் செழித்து வளர்வதற்குரிய நாளாகக் கொண்டாடப்படுகிறது. அதாவது மழைக்காலம் தொடங்கி நதிகளில் புதுவெள்ளம் பெருகி வரும் சமயத்தில் வருடம் முழுவதும் வளமாக இருக்க வேண்டும் என வேண்டிக் கொண்டு கொண்டாடப்படும் விழா இது. இந்தியாவில் காவேரிக் கரையோரத்தில் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. கங்கைக் கரையில் விளக்கேற்றி வைத்து, தலை வாழை இலையில் அம்மனுக்குப் படையல்கள் படைத்து வழிபடுவர். சித்திரான்ன வகைகளுடன், வெற்றிலை, பாக்கு, மஞ்சள், குங்குமம், வளையல், பழம் போன்றவற்றை வைத்துப் படைத்து கங்கை அம்மனை வழிபடுவர். பின்னர் கற்பூர ஆரத்தி காட்டி அவற்றை ஆற்றில் விடுவார்கள். இதனால் ஆற்றில் வாழும் உயிரினங்களுக்கு உணவு கிடைக்கும் என்னும் கருணை உணர்வு ஆதாரம், இயற்கைக்கு தீங்கு செய்யாத நம் முன்னோரின் பண்பாட்டுச் சிறப்பையும் இது விளக்கும். ஆடிப்பெருக்கு நாளிலே எந்தத் தொழில் ஆரம்பித்தாலும் அது மேலும் மேலும் பெருகி வளரும் என்பது நம்பிக்கை.

அம்மனுக்கு உரியதாகவும், அருளும் பொருளும், ஆனந்த வாழ்வும் தரக்கூடியதாகவும் உள்ள ஆடி மாதத்தில் கடைப்பிடிக்க வேண்டிய பூஜைகள், விரதங்களை தவறாமல் கடைப்பிடித்து எல்லா வளமும் நலமும் பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இந்திய தல யாத்திரை (தொடர்ச்சி...

– செ. மோகனதாஸ் சுவாமிகள் –

காலம்: 22.06.2013 சனிக்கிழமை.

இன்று காலை 10 மணியளவில் அகமதாபாத்தில் உள்ள பத்ரா கோட்டை ஆஞ்சநேயரைத் தரிசிப்பதற்காகச் சென்றோம். இந்த ஆஞ்சநேயரை மிலிட்டரி ஆஞ்சநேயர் என்று கூறுகின்றார்கள். இப்பெயர் வழங்க என்ன காரணம் என்று விசாரித்தபொழுது இவ்வாலயமானது ஒரு பாரிய இராணுவ முகாமின் மத்தியில் அமைந்துள்ளது. சூழ இராணுவ காரியாலயங்கள். அதன் நடுவில் இருப்பதால்தான் இப்பெயரில் அழைக்கப்படுகிறது என்று கூறினார்கள். இந்த இராணுவ முகாமிற்கு முன்பாக உள்ள பிரதான வீதியில் பேருந்தினை நிறுத்திவிட்டு கால்நடையாக இராணுவ முகாமுக்கூடாக சென்றுதான் வணங்க வேண்டும். ஆனாலும் வயது முதிர்ந்தவர்கள், நோயாளர், நடக்க இயலாதவர்கள் குறிப்பாக 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்காக இராணுவத்தால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வாகனத்தில் இலவசமாக சென்று தரிசிக்கக்கூடிய வகையில் இராணுவ வீரர்கள் செயலாற்றியதன் பிரகாரம் எமது குழுவினரில் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் வாகனத்தில் சென்றே ஆலய தரிசனம் செய்தோம். நடக்கக் கூடியவர்கள் நடந்து சென்றே ஆலய தரிசனத்தில் எம்மோடு இணைந்தனர். ஆலயம் சிறிதாக இருந்தாலும் அதன் கீர்த்தி பெரிதென்பதை அங்கே வழிபாடு இயற்றுபவர்களையும், இயற்ற வருபவர்களையும் பார்க்குமிடத்து ஆஞ்சநேயரின் அருட்திறம் எமது குழுவினரையும் ஆட்கொண்டது.

ஆஞ்சநேயர் தரிசனத்தை முடித்துக்கொண்டு சுவாமி நாராயணர் ஆச்சிரமம் அடைந்தோம். ஒரு பரந்த நிலப்பகுதியின் நடுவில் ஒரு பிரமாண்டமான கிருஷ்ணர் ஆலயம் ஒன்றுண்டு. அதனைச் சூழவுள்ள பிரதேசத்தின் தன்மையை நோக்குமிடத்து கிருஷ்ணபிரான் ஓடி விளையாடிய பிருந்தாவனத்தையொத்ததாக விளங்கியது. உண்மையில் இவ்விடத்தைப் பார்த்தபொழுது பிரமிப்பு உண்டாயிற்று. மனிதரால் செய்யக்கூடிய செயலாகத் தெரியவில்லை. அத்தகைய வடிவமைப்பு. அதற்குள் அமைந்திருக்கும் மரம், செடி கொடிகளில்கூட பலவிதமான உருவ அமைப்புக் கொண்டதாக அமைத்திருந்தார்கள். ஒரு இடத்தில் கண்ணன் ரதத்தில் அமர்ந்திருப்பது போலவும் அதனைக் குதிரைகள் இழுத்துக் கொண்டு போவது போலவும் இயற்கையான மரத்தில் வடிவமைக்கப்பட்ட காட்சியைக் காணக்கூடியதாக இருந்தது. இதேபோன்று ஒருவித கொடிவகை பூமரத்தை யானை போலவும் வேறு பல மிருகங்கள் போலவும் உருவகப்படுத்தி அதனைப் பராமரித்து வருகிறார்கள்.

இதற்கு மேலாக நடுவில் இருக்கும் கிருஷ்ணர் ஆலயத்தின் அமைப்பானது எம்மை ஒருவித பிரமைக்குள்ளாக்கியது. அங்கேயே இருந்து விடலாம் போல் இருந்தது. அத்தனை அழகு பொருந்திய இடம். ஆனால் உள்ளே புகைப்படக் கருவியினை கொண்டுபோக அனுமதியில்லை.

இவ்விடத்தில் நான் ஒன்றைக் கூறிக்கொள்ள வேண்டும். தாஜ்மஹாலை நாம் பார்ப்பதற்கு ரூபா 20 (இந்திய ரூபாய்) செலுத்தித்தான் போய்ப்பார்க்க வேண்டும். தாஜ்மஹால் ஒரு நினைவுச் சின்னம் என்ற காரணத்தால் அது பெருமை பெற்று விளங்குகிறது. ஆனால் நாம் சென்று தரிசித்த இந்த கிருஷ்ணர் ஆச்சிரமமும், அதற்குள்ளே அமைந்த ஆலயமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் சூழலும் எவ்வளவோ ரம்மியமான காட்சிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அதனைப் பார்வையிடுவதற்கு எந்தவிதமான கட்டணமும் இல்லை. அந்தப் பிரதேசத்தை பராபரிக்க பெருந்தொகைப் பணம் செலவிடவேண்டும். ஆனாலும் பார்வையாளர்களிடம் ஒருவித கட்டணமும் அறவிடப்படுவதில்லை. இது எமக்கு ஆச்சரியமான விடயமாகவே தெரிந்தது.

ஒரு வழியாக அந்த இடத்தை விட்டுப் பிரிய மனமில்லாமல் எமது பிரயாண அட்டவணைப் பிரகாரம் அயலில் உள்ள திருமூர்த்தி ஆலயம், ராம்சீதா ஆலயம் பார்த்து விடுதியை அடைந்தோம். அன்று இரவு உணவினை கார்த்திகேசனும், ஆறுமுகானந்தனும் நாம் இங்கே செய்வதுபோல பிட்டும் அவித்து தேங்காய்ப்பால் விட்டு கறியும் வைத்து இரவு உணவை முடித்தோம். எல்லோரும் திருப்தியான முறையில் உணவை உண்டபின் மறுநாள் பஞ்சலிங்க தரிசனம் செய்வதற்குரிய வழிவகைகளை ஆராய்ந்தோம். இவற்றின் இடையே நாம் தங்கி நிற்கும் இடங்களில் சிலவேளைகளில் எமது குழுவினரே சமையல் வேலையில் ஈடுபட்டு தமது பொழுதைக் கழித்தனர்.

**காலம்: 23.06.2013 ஞாயிற்றுக்கிழமை**

காலை 7 மணி அளவில் எமது குழுவினர் பஞ்சலிங்க தரிசனம் செய்வதற்கு ஒரு புதிய உத்வேகத்துடன் புறப்பட்டோம். எமது பேருந்தின் சாரதி அகமதாபாத்தைச் சேர்ந்தவர். அவர்மூலம் பஞ்சலிங்கம் இருக்கும் இடத்தை விசாரித்தோம். அவருக்கும் சரியாகத் தெரியவில்லை. எமது முகவர் ஸ்ரீரெங்கநாதனுக்கும் தெரியாது. ஒருவழியாக எமது வழிகாட்டியாக வந்த முத்துக்குமாரு பலரோடு தொடர்பு கொண்டு பஞ்சலிங்கம் அமைந்த





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தைத் தெரிந்து அவரின் வழிகாட்டலோடும் பேருந்து சாரதியின் வழிப் பாதையோடும் அகமதாபாத்திலிருந்து 70 கி.மீ தூரத்திலுள்ள பாவ் என்னும் நகரை அடைந்தோம். அங்கும் எமது விசாரணை. ஏனெனில் அகமதாபாத்தில் இவ் இடம் சம்பந்தமாக பாவ் நகரில் போய் விசாரிக்குமாறு கூறி இருந்தார்கள். அதற்கமைவாக அங்குள்ளோரிடம் விசாரித்தபொழுது பாவ் நகரிலிருந்து 30 கி.மீ தூரத்தில் ஹோலியாட் என்னும் பின்தங்கிய ஒரு சிறு கிராமம் கடலுக்குச் சமீபமாக இருக்கிறது. அங்கே போனால் பஞ்சலிங்க தரிசனம் செய்யலாம் என்று கூறியதன் பிரகாரம் எமது குழுவினர் அக்கிராமத்தை நாடி செல்வதற்கு ஆயத்தமானோம். நேரமோ 10.30க்கு மேலாகி விட்டது. பேருந்தின் வேகத்தைவிட எமது மன ஓட்டம் மிகவும் வேகமாக இருந்தது. எப்போது பஞ்சலிங்க தரிசனம் செய்யலாம் என்னும் சிந்தனை ஸ்ரீரெங்கநாதன் உட்பட அனைவருக்கும் இருந்தது. உடல் நலமில்லாத ஸ்ரீரெங்கநாதன் எத்தனையோ தடவை வட இந்திய யாத்திரை செய்திருந்தாலும் இதுவரை காலமும் இந்த இடத்திற்குப் போனதில்லை. எமது குழுவினர் அனைவருக்கும் இதுதான் முதற்தடவை பஞ்சலிங்க தரிசனம். அதன் பயனாக எமது குழுவினர் அனைவரும் அந்த இடத்தைப் பற்றி பலவித விமர்சனங்களில் ஈடுபட்டுக்கொண்டு இருந்தனர். எமது மன ஓட்டத்தைப் புரிந்ததுபோல் பேருந்தும் விரைவாகச் சென்றது.

எங்களுக்கு ஒரே யோசனை 1 மணிக்கு மேல் கடலால் லிங்கம் மூடப்பட்டுவிடும். அதற்குள்போய் தரிசனம் செய்யவேண்டும் என்ற மனப்பதற்றத்துடன் பேருந்தில் அமர்ந்திருந்தோம். சாரதிக்கும் இப்பாதை புதிது. எமக்கும் ஒன்றும் தெரியாது. வழியில்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தென்படுவோரை கேட்டுக்கொண்டு ஹோலியாட் என்ற கிராமத்தை அடைந்து கடற்கரை எங்குள்ளது என்று விசாரித்து 11.30 மணியளவில் கடற்கரையை அடைந்தோம்.

நேரமோ 11.30ஐத் தாண்டி விட்டது. எனக்கும் என்னோடு வந்த குழுவினருக்கும் ஒரே ஆவல். மதியம் 1 மணியளவில் கடல் பெருகி லிங்கங்களை மூடிவிடும் என்பதனால் கூடியவரை லிங்கங்களை தரிசிக்க வேண்டும் என்ற பேரவா உந்த, வேகமாக கடற்கரையை நாம் அடைந்தோம். அப்போதுதான் நாம் கண்ட காட்சி எம்மைப் பிரமிக்க வைத்தது. கரையில் இருந்து சுமார் 1 கி.மீ தூரத்தில் ஒரு கூம்பு வடிவமான கோபுரம் போன்ற அமைப்பு காணப்பட்டது. அந்த இடத்தில்தான் பஞ்சலிங்கம் இருக்கின்றது. அவ்விடத்தை கடல் மூடும்பொழுது அடையாளப்படுத்தும் முகமாக அக்கூம்பை அமைத்திருக்கிறார்கள். அதனைப் பார்வையிட்டபடியே கடற்கரையை இரு புறமும் பார்வையிட்டோம். இரு புறமும் 1 கி.மீ தூரம் வரையும் கடலினுள் அமைந்திருக்கும் பஞ்சலிங்கம் இருந்த இடம் வரையும் கடல்நீர் பின்வாங்கி வெறும் தரையாகக் காட்சியளித்தது.

அதனைப் பார்வையிட்டபடியே கடலுக்குள் பஞ்சலிங்கம் உள்ள இடத்தை நோக்கி நடக்க ஆரம்பிக்கின்றோம். மனதுக்குள் பயம். நாம் போய் வருவதற்குள் கடல்நீர் வந்துவிட்டால் என்ன செய்வது என்ற எண்ணம் எல்லோர் மனதில் இருந்தாலும் கூடியவரை கடல்நீர் வருவதற்குள் கரையை அடையவேண்டும் என்று அவசர அவசரமாக பஞ்சலிங்கம் இருக்கும் மேட்டினை நோக்கி விரைவாகச் சென்றோம். என்னோடு கார்த்திகேசனும், ஆறுமுகானந்தனும், முத்துக்குமாரும் வந்து கொண்டிருந்தார்கள். ஸ்ரீரெங்கநாதனும் மற்றவர்களும் எமக்குப் பின்னே வந்துகொண்டிருந்தார்கள். ஸ்ரீரெங்கநாதன் வருவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. உடல் நலமில்லாத வகையில் அவர் எப்படியும் பஞ்சலிங்க தரிசனம் செய்தே தீருவேன் என்ற எண்ணம் வலுப்பெற்ற நிலையில் வந்துகொண்டிருந்தார். முத்துக்குமாரு எவ்வளவோ தடுத்துப் பார்த்தும் நான் தரிசனம் செய்தே தீருவேன் என்ற அவரது பிடிவாதற்கமைய அவரது தரிசனத்துக்கு குறுக்கிடாதே அவரும் வரட்டும் என்று சொன்னதன்பேரில் ஸ்ரீரெங்கநாதனும் பின் தங்கிய நிலையில் வந்துகொண்டிருந்தார்.

கரையிலிருந்து பார்த்தபொழுது அந்த மேடு அமைந்த பகுதியில் ஒருசிலர் வழிபாடு செய்துகொண்டிருப்பதையும், சிலர் வழிபாடு முடிந்து கடற்கரையை நாடி வருவதையும் காணக்கூடியதாக இருந்தது. நாம் மேட்டினை அடைந்த பொழுதுதான் அந்த இடத்தின் புனிதம் தெரிந்தது. அந்த மேட்டின் நடுவில் திக்குக் கொன்றாக பெரிதும் சின்னதுமாக ஐந்து லிங்கங்கள் அமைந்திருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. அந்த லிங்கங்களுக்கு முன்னால் பூசை வழிபாடுகளை ஆற்றும் பூசகர்கள் அமர்ந்திருந்து வழிபாட்டுக்கு வரும் அடியார்கள் கொண்டுவரும் வழிபாட்டுக்குரிய பொருட்களை வாங்கி லிங்கங்களுக்குரிய பூசையை நிறைவேற்றிக் கொண்டிருந்தனர். அந்த லிங்கங்கள் அமைந்த மேடைக்குப் பின்புறம் அமைந்த படிக்கட்டுக்களில் கடல் அலைகள் வந்து மோதிக்கொண்டு இருந்தது. அதிலும் ஒரு அதிசயம், எவ்வளவுதான் அலைவந்து மோதினாலும் ஒரு வரையறைக்குட் பட்டதாகவே கடல்நீர் வந்து போய்க்கொண்டிருந்தது. ஆனாலும் அந்த அலையின் வேகம்......

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அற்ற குளத்தில் அறுநீர்ப்பறவைபோல்

"அற்றகுளத்தில் அறுநீர்ப்பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவு அல்லர். அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் போலவே
ஒட்டி உறவார் உறவு"

பொய்கையில் நிறையத் தண்ணீர் நிறைந்துள்ள காலத்தில் அல்லியாம்பல் நெய்தலும் கொட்டியும் ஆம்பல் முதலியவை முளைத்துக் குளத்தை அலங்கரிக்கின்றன.

அதே காலத்தில் குளத்தை நன்கு பயன்படுத்தி வாழும் பல நீர்ப்பறவைகளும் அதில் வாழ்கின்றன.

ஆனால் குளத்தில் தண்ணீர் வற்றியதும் அதில் இருக்கும் பறவைகள் வேறு நீருள்ள பகுதிக்குச் சென்று விடுகின்றன.

ஆனால் கொட்டியும் ஆம்பலும் அல்லியும் நெய்தலும் மட்டும் அக்குளத்தில் நீருள்ளபோது வாழ்ந்து பின்னர் தன்னை அதிலேயே வாடி வருந்தி மாய்ந்து மடிகின்றன.

அதுபோலவே வாழ்விலும் தாழ்விலும் நீங்காமல் சோ்ந்திருப்பவரே உண்மையான வர்கள். அவர்களே உண்மையானவர்களாயும் சிறந்தவராயும் விளங்கிடுவர்.

உறவினர்களிலும் ஆம்பல் நெய்தலைப் போலவே வாழ்விலும் தாழ்விலும் நீங்காமல் சேர்ந்து இருப்பவரே உண்மையான உறவினர் ஆவார்கள். மற்றவர்கள் பறவையைப் போன்றவராகக் கருதப்படுவர். மனித வாழ்வில் சுகம் பெற்றிட உற்றார் உறவினருடன் கூடி வாழ்வதே கோடி நன்மையை வழங்கிடும் என்பதை அறிந்திடுக.

பாளையம்பட்டு என்ற ஊரில் குப்பாசர் என்பவர் வாழ்ந்து வந்தார். அவருடைய மனைவி பட்டு. பட்டு கல்வியறிவு அதிகம் இல்லாதவள். அழகுடையவள். கேள்விஞானம் உடையவள். அவள் சொல்லுவது பலிக்கும். கேட்டதை இறைவன் உடனே நிறைவேற்றி விடுவார் என்பது அவளுடைய கருத்தாகும்.

தன்னுடைய சுற்றத்தாரிடம் அன்பும் பெருமதிப்பும் கொண்டு வாழ்ந்தாள். அவள் பொதுவாக அக்காலத்திலேயே மாரியம்மன் தாலாட்டு, திருமால் பாடல்கள், முருகனுடைய கந்தர்சஷ்டி கவசம், விநாயகர் அகவல் போன்ற யாவற்றையும் பாராமல் ஒப்புவிப்பதுடன் தவறு இல்லாமல் பாடல் போன்று சுருதி பிறழாமல் பாடும் வன்மை பெற்றவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மனையை நோக்கி வரும் உற்றார் உறவினர்களை மிகவும் அன்புடன் உபசரிப்பாள். தனக்கில்லை என்றாலும் பிறர் பசி தீர்ப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டி வந்தாள்.

அவளுடைய கணவர் இரக்க குணம் உடையவர். அவர் தன் கிராமத்திற்கு வரும் அயலூர் மக்களுக்கும் இரவாகியும் பேருந்து கிடைக்கவில்லையானால் உடனே வீட்டிற்கு அழைத்துவந்து அன்னம்பாலித்து அடுத்த நாள் கொண்டுசென்று வண்டி ஏற்றுவார். அவருடைய உறவினர் அனைவரையும் ஊரில் தீமிதி, தேர் மற்றும் விழாக்களின்போது கடிதம்போட்டு வரவழைத்து உபசரிப்பதில் தயங்கமாட்டார்கள். கணவனும் மனைவியும் நல்ல குணமுடன் செயற்பட்டதால் அனைவருடைய மனங்களிலும் இடம்பிடித்தனர். மேலும் வயலில் விளையும் நெல் முழுவதும் தனக்கும் உற்றார் உறவினருக்கும் மட்டும் உதவியாகும்.

வீட்டைச் சுற்றிலும் மலர் செடிகளையும் காய்கனிகளையும் கீரைகளையும் வைத்துப் பயிர் செய்தனர். அதன்மூலம் அனைவருடைய பசியைப் போக்கினர்.

குப்பாசருக்கு மூன்று மகன்களும் மூன்று மகள்களும் இருந்தனர். இவர்களுடைய மூன்று மகள்களையும் நல்ல குடும்பத்தில் திருமணம் செய்து கொடுத்தனர். அவர்களும் வீடுவாசல் மாடுமனை என்று எல்லோரும் தாய், தந்தை, மாமன், மாமி, தாத்தா, பாட்டிகள் ஆயினர். அவரவர்களுக்கு முதல் இரண்டு மூன்றாவது தலைமுறையும் உருவாகின.

அதுபோலவே மூன்று மகன்களும் தான் போட்ட கோட்டைத் தாண்டாதபடி நடக்கும் மூன்று மருமகள்களைக் கொண்டுவந்து மிகச் சிறந்த குடும்பமாக அந்த ஊரிலேயே புகழ்ந்து பேசுமளவிற்கு வாழ்ந்து வந்தனர்.

பிள்ளைகள், மகள்கள் வழியிலும் மற்றும் பேரப்பிள்ளைகள், எள்ளுப்பேரன், கொள்ளுப்பேரன் பேத்திகளும் ஏராளம். அதனால் அந்தப் பகுதியில் மிகப்பெரிய கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தனர். வீடே ஒரு கோயிலாகவும் ஒவ்வொரு பிள்ளையும் தனித்தனி கர்ப்பக் கிரகங்களைப் பெற்றதுபோல் மிகச்சிறப்பாக வாழ்ந்தனர். வழிவழிச் சந்ததிகளும் அன்போடும் பயபக்தியோடும் வாழ்ந்தனர். அவர்கள் அனைவரும் குப்பாசர் - பட்டு தம்பதியை அன்போடும் பணிவோடும் பாசத்தோடும் கவனித்து வந்தனர்.

பட்டு நினைப்பதுபோல் எல்லாம் நடக்கும். குப்பாசர் ஒரு சக்திதாசர். அவர் அடக்கமும் பண்பும் நிறைந்த குடமாய் வாழ்ந்தவர்.

"இறந்தால் தெரியும் இருந்த இருப்பு" இது பழமொழி. குப்பாசர் இறைவனடி சேர்ந்தார். ஊரே கண்ணீர் சிந்தியது. மலர்களும் கண்ணீர் சிந்தின. வானம் இருண்டது செடிகள் துவண்டன. மரங்கள் தலை தாழ்த்தியது போன்றிருந்தன.

மாடு ஆடுகளும் கண்ணீர் வடித்தன. உணவுண்ணாமல் இருந்தன. ஆயிரக்கணக்கான உறவினர் - ஆண் வழி உறவினர் - பெண் வழி உறவினர்- சம்பந்திகள்- அவரவர் வழி உறவினர்கள்- ஊர்மக்கள்- சுற்று வட்ட மக்கள் கூடினர். இறுதி ஊர்வலத்தின்போது வானமும் கண்ணீர் சிந்தியதோடு, பன்னீர்போல் திவலைகளைத் தெளித்தன. சாலை முழுதும் வத்திரங்கள் பரப்பப்பட்டன. தென்றலோடு மலர்களைத் தாங்கிச் சொரிந்து தன்னுடைய மரியாதையைக் காட்டி நன்றி செலுத்தின. அனைவரும் அமைதியாக ஊர்வலமாகச் சென்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திரை தானம்

– திரு எஸ்.எஸ். றஜீந்திரன் அவர்கள் –

ஏகபத்தினி விரதன் இராமனின் கதையைப் பகரும் சுலோகங்களைக் கொண்ட வால்மீகி இராமாயணமும் கவிதையை யாத்த கம்பராமாயணமும் இந்து மதத்திற்கு பல்லாயிரக்கணக்கான நல்வழிகளைக் காட்டி நிற்கின்றது. அந்த வகையிலே கற்புக்கரசிகளாகப் போற்றப்படும் கண்ணகி, சீதை, அனசூசை, தாரகை என்ற வழியில் ஊர்மிளையும் மிகச் சிறப்பான ஒரு கற்புக்கரசி.

இராமபிரானின் மூன்று தம்பிமார்களைச் சேர்த்து நால்வரும் சீதையின் சகோதரிகளான மூவரையும் திருமணம் செய்து கொண்டார்கள். இராமன் - சீதை, பரதன் - மாண்டவி, இலக்குவனன் - ஊர்மிளை, சத்துருக்கன் - சுதகேசி. இவர்களுள் இராமன் மனைவியான சீதை கணவன் பின்னால் காடு சென்று அரச போகங்களைத் துறந்து வனவாசம் செய்து எண்ணற்ற துன்பங்களை அடைந்து இறுதியில் கணவனை அடைந்த கற்புக்கரசியான இலக்குமி ஆவாள். ஆனால் ஊர்மிளை ஆனவள் கணவனான இலக்குவனனின் கட்டளையை ஏற்று தனது மாமியார்களான கைகேயி, சுபத்திரை, கோசலை ஆகிய மூவருக்கும் பணிவிடை செய்து வந்தாள்.



திருமணமான சில காலங்களில் எதுவித இன்பத்தையும் அனுபவிக்காத ஊர்மிளை கணவனின் சொல்லுக்கு கட்டுப்பட்டு அரச வாழ்க்கையில் இருந்தாள். இலக்குவனன் காடு சென்றதன் நோக்கம் இராமபிரானுக்குத் தொண்டு செய்வதே தவிர வேறு ஒன்றுமில்லை. இலக்குவனனானவன் தான் காடு செல்லும்போது தனது மனைவி அருகில் இருந்தால் இராமபிரானுக்குத் தான் செய்யும் தொண்டுகள் தடைப்படும் என்பதால் தனது மனைவியான ஊர்மிளையைத் தனது மூன்று தாயாருக்கும் பணிவிடை செய்யுமாறு பணித்துச் சென்றான். அப்பெரும் அர்ப்பணிப்பால்தான் அடுத்த பிறவியில் கிருஷ்ணருக்கு தமையனாக பலராமராகப் பிறந்து கிருஷ்ணரின் பணிவிடைகளை ஏற்பதற்கு ஏதுவாக இருந்தது. இலக்குவனன் இராமனுக்கு சேவை புரியும் காலத்தில் 14 ஆண்டுகள் தூக்கமின்றி இராமனுக்கு காவலனாக சேவகனாக நண்பனாகப் பணிபுரிந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய விஞ்ஞானம் நாம் துயில் கொள்ளும் நேரத்தை குறைத்தாலோ அல்லது கூட்டினாலோ பல நோய்களை அனுபவிக்க வேண்டிவரும் என்று எச்சரிக்கிறது. அதே வேளை தமிழ் மூதாதையர் இரவில் நித்திரை விழித்தால் இரத்தம் கருகிவிடும் என்று சுக வாழ்வை மேம்படுத்த எச்சரித்துள்ளார்கள். அப்படி இருக்கையில் ஒரு சிவராத்திரி தினத் தன்று, வைகுந்த ஏகாதசி அன்று ஒரு இரவு அதாவது எட்டு மணித்தியாலங்கள் நித்திரை விழிப்பது என்பது எமக்கு மிகச்சிரமமான விடயமாக இருக்கிறது. அவ்வாறு இருக்கை யில் ஒரு நாளல்ல இரண்டு நாளல்ல 14 வருடங்கள் எவ்வாறு இலக்குவனனால் துயில் கொள்ளாது தொண்டாற்ற முடியும். இதற்குக் காரணம் யார்? ஊர்மிளை என்ற இலக்கு வனன் மனைவி கற்புக்கரசி அதற்கான வலிமையைக் கொடுத்தாள்.

நித்திரைக்கு அதிபதியான நித்திரா தேவியை அவள் பலகாலம் வழிபட்டு இரா மனுக்கு தொண்டனாகப் பணியாற்றும் இலக்கு வனனுக்கு நித்திரையில் சுகம் கிடைக்காத தால் அந்த நித்திரை சுகத்தை தனது கண வன் இலக்குவனனுக்காக தான் மேலதிகமாக ஏழு மணி நேரம் நித்திரை செய்வதாகவும் அதற்குரிய பலனை கணவனுக்கு அளிக்கும் படியும் நித்திராதேவியிடம் வரம் கேட்டாள். இதனால் அவள் பதின்னான்கு மணிநேரம் நித் திரை செய்தாள். ஏழு மணிநேரம் தனக்காக வும், ஏழு மணி நேரம் இலக்குவனனுக்காக வும் நித்திரை புரிந்தாள்.

இவ்வாறிருக்கையில் இராவணனுட னான போர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் காலத்தில் இராவணன் விடுத்த பிரம அஸ் திரத்தால் இராமனும் இலக்குவனனும் மூர்ச்சை அடைந்ததால் இராமனின் பக்தனான ஜடாயு என்ற கரடி கூறிய அறிவுரையின் பேரில் சிரஞ்சீவிக் கொடியைக் கவர்ந்து கொண்டு வந்தால் இவர்களைக் காப்பாற்ற லாம் என்று அதற்கு உகந்த வீரரான அனுமனை அனுப்பினார். அக்கொடியை அடையாளம் காணமுடியாத அனுமன் அக் கொடி இருக்கும் மலையை ஒரு கரத்தில் ஏந்தி அயோத்தியினூடாகப் பயணித்து வந்தார்.

அயோத்தியினூடாகப் பயணிக்கும் போது பரத சத்துருக்கர்கள் அனுமனை வழி மறித்து நீ யார்? ஏன் மலையைக் கொண்டு செல்கின்றாய்? என்ற பல வினாக்களை வின வினர். அதற்கு விடை பகர்ந்த அனுமன் எனது தலைவனான இராமபிரானைப் போல தாங்கள் காணப்படுகிறீர்கள் அதனால் விடை பகர்கின் றேன் என்று கூறி இராவணனுடனான யுத்தத் தில் இராமன், இலக்குவனன் ஆகிய இருவரும் மூர்ச்சை அடைந்ததால் அவர்களை உயிர்ப் பிக்கும் பொருட்டு நான் இந்த மலையைக் கொண்டு செல்கிறேன் என்று கூறி விடை பெற்றான்.

இந்த விடயத்தைப் பரதனின் மனைவி யான மாண்டவி சத்துருக்கனின் மனைவியான சுதகேசியும் தெரிந்து கொண்டனர். உடனடி யாக அவர்களது சகோதரியான ஊர்மிளை யிடம் இவ்விடயத்தைக் கூறினர். அதற்கு சிரிப்பொலி கொடுத்த ஊர்மிளையானவள் எனது கணவருக்காக ஏழு மணிநேர தூக்கத் தையே தானம் செய்கிறேன் நான். எனது கணவர் நித்திரை கொள்ளும் சுகத்தை அனு பவிக்கின்றார். ஆகவே நாங்கள் இருவரும் ஓர் உயிர் கொண்ட ஈருடல்கள். எனவே அவர் அங்கு மாண்டிருந்தால் நானும் இறந்திருக்க வேண்டுமல்லவா, ஆகையால் நான் இங்கே சுகமாக இருப்பதுபோல் எனது கணவரும் அங்கே நலமாக இருப்பார் என்று விடை பகர்ந்தாள்.

தனது கணவனுக்காக எவற்றை எல்லாம் வழங்கி இழந்து கற்புக்கரசி என்ற பெயரைப் பெற்ற மாதரிடத்து நித்திரை என்ற சிறந்த பரிசை இலக்குவனனுக்கு வழங்கி கற்புக்கரசி என்ற பட்டத்தைப் பெற்ற ஊர் மிளையை என்னவென்று போற்றுவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்

[விரிவான பொருளுரையும் தெளிவுரையும்]



முனைவர் ஆ. ஆனந்தராசன்

## 3. ஒப்பு இல்லாதவன்

பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின்
அருமைக்கும் ஒப்பின்மையான்.

**பொருள்:**

எல்லாவற்றிலும் பெரிய பொருளாய் நிற்கும் தன்மையில் அவனை ஒப்பார் இல்லை. எல்லாப் பொருளிலும் உட்கலந்து நிறைந்து நிற்கும் நுண்மையில் அவனை ஒப்பார் இல்லை. எல்லாவுயிர்களிடத்திலும் கொண்டிருக்கும் மாறாத பெருங்கருணைத் திறத்தில் அவனை ஒப்பார் யாருளர்? பிறர் தன்னைப் பெறுவதற்கு அரியனாய் நிற்கும் நிலைமையிலும் அவன் ஒப்பார் இல்லாதவனே.

இவ்வாறு பெருமை, நுண்மை, பேரருள், பெறுதற்கு அருமை ஆகிய இந்நான்கு திறத்திலும் தனக்கு ஒப்பாக வேறொன்று இல்லாத சிறப்பினை உடையவன் எம் இறைவன்.

**சொற்பொருள்:**

பெருமைக்கும்- எல்லாப் பொருள்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டு, அவை எல்லாவற்றினும் தானே பெரிய பொருளாய் நிற்கும் தன்மையிலும் நுண்மைக்கும்- எல்லாப் பொருள்களின் ஊடும் உட்கலந்து நிறைந்து நிற்கும் நுண்மையிலும். பேரருட்கும்- எல்லாவுயிர்களிடத்திலும் வைத்திருக்கும் மாறாத பெருங்கருணையிலும் பேற்றின் அருமைக்கும்- பிறர் தன்னைப் பெறுதற்கு மிகவும் அரியனாய் நிற்கும் நிலைமையிலும், ஒப்பு இன்மையான்- தனக்கு ஒப்பாக வேறொன்று இல்லாத சிறப்பினை உடையவன் எம் இறைவன்.

**விளக்கம்:**

**பெருமை:**

கடவுட் பொருள் தன்னை அடக்கி நிற்பதொரு பொருள் இன்றித் தானே எல்லாப் பொருளையும் தன்னுள் அடக்கி நிற்கும் பெரும் பொருள் ஆகும். வடமொழியில் கடவுளைப் பிரம்மம் என்பர். "பிரம்மம்" என்பதற்குப் பெரியது என்பதே பொருள்.

கடல் வெளி விரிந்த நீர்ப் பரப்பு முழுவதையும் தன்னுள்ளே அடக்கிக் கொண்டு நிற்கிறது. அதுபோலப் பதிப்பொருளாகிய இறைவன் சித்தாகிய உயிர்களையும் சடமாகிய உலகங்களையும் தன் கண் அடங்கக் கொண்டு நிற்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவற்றைத் தன்னுள் அடக்கி நிற்கும் பெருநிலை வியாபகம் எனப்படும். அதனுள் அடங்கி நிற்கும் நிலை வியாப்பியம் எனப்படும். அம் முறையில் கடவுள் வியாபகம். ஏனைய உயிர்களும் உலகங்களும் கடவுளிடத்தில் வியாப்பியம்.

கடவுள் வியாபகமாய் நிற்றலின் அதற்குக் காலம், இடம் என்ற எல்லையாதும் இல்லை. மேல், கீழ், புடை ஆகிய எல்லா இடங்களிலும் இங்ஙனம் எல்லையின்றிப் பரந்து நிற்றலை "அகண்டா காரம்" என்பர்.

காலை வேளையில் பலகணி வழியாக நுழையும் சூரியவொளிக் கற்றையில் மிதக்கும் நுண்ணிய துகள்கள் தாம் எத்துணைச் சிறியவை! எங்கும் விரிந்து கிடக்கும் அண்ட கோடிகள் எல்லாம் அத்துணைச் சிறியவாகத் தோன்றும் படியாக நிற்கும் பெரிய பொருள் இறைவன்.

**நுண்மை:**

இறைவன் எல்லாவற்றிலும் நுண்ணியவன். ஆதலால் அவன் எல்லாப் பொருள்களிடத்தும் உள்ளீடாய்க் கலந்து நிற்பான். அங்ஙனம் எல்லாவற்றிலும் உள்ளுறைந்து நிற்றலை விளங்கிக் கொள்வதற்கு எள்ளில் நிறைந்திருக்கும் எண்ணெய்யை அவனுக்கு எடுத்துக்காட்டாகக் கூறுவர்.

முன்னே கூறிய பெருமை என்பது அவன் எல்லாப் பொருளையும் கடந்து நிற்கும் பெரு நிலையாகும். இங்கு கூறிய நுண்மை என்பது அவன் எல்லாப் பொருளிலும் கலந்து நிற்கும் கலப்பு நிலையாகும். கடந்த நிலையைக் குறிக்கும் பெயர் கடவுள் என்பது-கலந்த நிலையைக் குறிக்கும் பெயர். இறைவன் என்பது, இறுத்தல் என்ற சொல்லிலிருந்து இறைவன் என்ற சொல் வந்தது. இறுத்தல் என்பதற்குத் தங்குதல் என்பது பொருள். எனவே எங்கும் தங்கி இருப்பவன் என்ற கருத்தில் இறைவன் எனப்பட்டான்.

எப்பொருளிலும் எவ்விடத்திலும் இவ்வாறு தங்கி நின்று இயக்குபவன் சிவபெருமான் ஒருவனே. அவ்வகையில் இறைவன் என்னும் பெயர் சிவபெருமானுக்கே உரியதாகும். அப்பெயர் அவனுக்கே வழங்கப்பட்டிருத்தலைப் பழைய நூல்களிற் காணலாம்.

இறைவன் நுண்ணியன் ஆதலால் பருப் பொருள்களாகிய மலங்களால் பற்றப் படாமல் என்றும் தூயவனாய் நிற்பான் என்பதும் விளங்கும்.

அவனது பெருமையின் முன் அண்டமும் ஓர் அணுவாய்த் தோன்றும்! அவனது நுண்மையின் முன் அணுவும் ஓர் அண்டமாய்த் தோன்றும்!

**பேரருள்:**

இறைவன் அளவில்லாத அருளுடையவனாதல் பற்றி அவனைக் கருணைக் கடல் என்று போற்றுவர். அவன் எண்ணில்லாத உயிர்கள் மேல் இரக்கம் கொண்டு, கைம்மாறு சிறிதும் கருதாது அவைகள் நலமடைதற் பொருட்டே அளவற்ற செயல்களை எப்பொழுதும் மேற்கொண்டு செய்து வருகிறான்.

உயர்ந்த மக்கட் பிறவியைப் பெற்ற நாம் தலைவனாகிய அவனை மறந்து நம்மையே தலைவராகக் கருதுகிறோம். நமது மனத்தை அவனிடத்திலே செலுத்தாமல் உலகியலிலே செலுத்தி வருகிறோம்; அவன் விதித்த விதிகளைப் பின்பற்றாமல் நடக்கிறோம். ஆயினும் அவன் நம்மை ஒருபோதும் வெறுத்து விலக்கியதில்லை. அவனுடைய அருளுக்கு அளவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பிலே தாயன்பு சிறந்தது. ஈடு இணையற்றது என்பர். அவளது அன்பின் நிலையும் ஓரொரு சமயம் மாறி விடுவதைப் பார்க்கிறோம். ஆயின் இறைவனது கருணையோ என்றும் ஒருபடித்தாய் நிற்பது. அது பற்றியே இறைவனைத் தாயினும் இனியன் என்று பெரியோர்கள் கூறுகின்றனர்.

அவனுக்கு ஆட்பட்டவர்கள் அவனது பேரருளை நினைந்து எப்படியெல்லாம் உருகுகின்றார்!

"தந்தையே, அடியேனை அன்பினாலே உனக்குத் தொண்டனாகச் செய்தாய்; உனது திருவருள் நோக்கினாலே என்னைத் தூய்மை செய்தருளினாய்; மிகவும் அரியவனாகிய நீ எனக்கு மிகவும் எளியவனாகி இரங்கி ஆண்டு கொண்டாய். நான் ஒரு பேதை; நாயினும் கடைப்பட்டவன். நான் செய்த குற்றங்கள் அத்தனையும் நீ பொறுத்துக் கொண்டாய். இத்தனையும் என் போன்றவர் அளவிற்கு உரியனவோ? அல்ல. எம் பெருமான் தனது பேரருளை என்மீது வைத்த தன்மையை என்னென்பேன்!"

"இரும்பு போன்ற வலிய மனமுடைய என்னை மெல்ல மெல்ல ஈர்த்து உன் இணையடிகளிற் சேர்த்துக் கரும்பு தருசுவையை எனக்குக் காட்டினாய். துன்பத்தைத் தரும் பிறப்பு இறப்புக்களில் அழுந்திக் கிடந்த ஆதரவற்ற அடியேற்கு உனது பாதமலர் காட்டியது உன் பேரருளேயன்றோ? நாய்க்குப் பொன் தவிசு இடுவதுபோல அடியேற்கு உன் பொன்னருள் கிடைத்தது. அடியேனை "அஞ்சேல்" என்று ஆண்டாய். நின்னருளால் நான் உய்ந்தேன். உனது பரங்கருணைத் தடங்கடலில் நான் படியுமாறு எனக்கு அருள் புரிவாயாக".

இவ்வாறு இறைவனது பெருங்கருணைத் திறத்தினை வியந்துருகிப் பாடியுள்ள பான்மையை நமது தேவார திருவாசகங்களிற் காணலாம்.

**பேற்றின் அருமை:**

இறைவன் பெறுதற்கு அரியவன். அவனை அடைய வேண்டின் முதலில் உலக நெறியில் உவர்ப்பு ஏற்பட வேண்டும்; சிவத்தொண்டு, சிவபூசை முதலியவற்றை இடைவிடாது உள்ளன்போடு செய்துவரல் வேண்டும்; அதன் பயனாக இருவினையொப்பு என்னும் பக்குவ நிலை வரல் வேண்டும்; ஞானாசிரியர் வாய்க்க வேண்டும்; அவர் காட்டும் நெறியிலே வழுவாது நின்று உண்மை ஞானத்தைப் பெற வேண்டும்.

இங்கு கூறிய இத்தனை சாதனைகளில் நின்று ஞானத்தைப் பெறுதல் என்பது அத்துணை எளிதோ? இதனைக் கருதியே,

"பல்லூழிக் காலம் பயின்று அரனை அர்ச்சிக்கில்
நல்லறிவு சற்றே நகும்" என்றனர் பெரியோர்.

உயிர்களாகிய நாம் இப்படிப்பட்ட மெய்ந்நெறியிற் செல்லாமல் உலகியலிலேயே உழன்று கொண்டிருக்கிறோம். இதற்குக் காரணம் நம்மிடத்திலுள்ள பாசத்தடையேயாகும். இத்தடை என்று நீங்குமோ? அதற்கு இன்னும் எத்தனை பிறவிகள் வேண்டுமோ? பெறுதற்கு அரியவன் பெருமான் என்று உமாபதி சிவனார் சொல்வது எவ்வளவு உண்மை!

இதனைக் கற்போர்க்கு "அப்படியானால் இறைவனைப் பெறவே முடியாதா?" என்று ஐயமும் திகைப்பும் ஏற்படலாம் அல்லவா? அதனை உணர்ந்தே, அவன் பேரருளாளன் என்ற கருத்தையும் உடன் சொல்லியிருக்கிறார் ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அன்று தொட்டே உயிர்களோடு உடனாய் நிலைபெற்றுள்ள இறைவன் அவ்வுயிர்களைத் தானாக்கிக் கொள்ள வேண்டும் என்ற பெருங்கருணை உடையவன். அதற்குத் தடையாக இருப்பது ஆணவமலம். உயிர்களைப் பற்றியுள்ள அம்மல சத்தியைத் தன் திருவருட் சத்தியினால் சிறிது சிறிதாக நீக்கி வருகிறான். இவ்வாறு செய்வதில் அவனுக்கு ஒருபோதும் சலிப்பு உண்டாதல் இல்லை. அவனது பேரருளே எல்லாவுயிர்களுக்கும் உய்தியைத் தரவல்லது. அவனது அருளையே பற்றாகப் பற்றினால் பாசப் பற்று நீங்கி வாழலாம்; இறைவனைப் பெறலாம்.

எனவே, இறைவன் பெறுதற்கு அரியவனாகவும் இருக்கிறான்; திருவருள் உதவியினால் பெறுதற்கு உரியவனாகவும் இருக்கிறான். இவ்வாறு "பேற்றின் அருமை" என்பதோடு முன்னே உள்ள "பேரருள்" என்பதையும் இணைத்து நோக்கிப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

**சிவப்பிரகாசக் கருத்து:**

ஆசிரியர் உமாபதிசிவம் தமது சிவப்பிரகாசம் என்ற நூலில் பதியாகிய பரம்பொருளின் இயல்பைச் சொல்லும் போது,

"செலஅரிதாய் செல்கதியாய் சிறிதாகிப் பெரிதாய்"

(செ.13)

என்கிறார். அத்தொடரின் மறுவடிவமாகவே திருவருட்பயனில் இச்செய்யுள் அமைந்துள்ளது என்பது நோக்குதற்குரியது.

"செலஅரிதாய்" என்பதற்கு ஏற்ப இங்கே பேற்றின் அருமை என்பது உள்ளது. "செல்கதியாய்" என்பதன் பொருளை இங்கே பேரருள் என்பது விளக்கி நிற்கிறது. "சிறிதாகி" என்பதை இங்கே நுண்மை என்று குறிப்பிடுகிறார். "பெரிதாய்" என்பதை அப்படியே பெருமை என்று இங்கே அமைத்துக் கொள்கிறார்.

"பெரிதாய்" என்பதைப் பெருமை என அமைத்துக் கொண்டாற்போலச் "சிறிதாகி" என்பதையும் சிறுமை என அமைத்துக் கொள்ளலாமே. அப்படிச் செய்யாமல், சிறுமை என்பதற்குப் பதிலாக நுண்மை என்ற சொல்லை இங்கே ஆளக் காரணம் என்ன? என்று கேட்கலாம்.

சிறுமை என்ற சொல் நுண்மையைக் குறிக்கும். சான்றாக, சிற்றம்பலம் என்பது சிறுமை + அம்பலம் எனப் பிரிந்து, நுண்ணிய அருள்வெளி எனப் பொருள்படும். இதில் சிறுமை என்பது நுண்மையைக் குறித்து நிற்றலைக் காணலாம்.

மேற்காட்டிய சிவப்பிரகாசத் தொடரிலும் நம் ஆசிரியர் இறைவனது நுண்மையைக் குறிப்பதற்குச் "சிறிதாகி" என்ற சொல்லையே ஆண்டிருத்தல் கண்கூடு.

அப்படியானால், திருவருட்பயனில் சிறுமை என்ற சொல்லை அவர் ஏன் பயன்படுத்தவில்லை? நுண்மை என்ற சொல்லை ஏன் பயன்படுத்த வேண்டும்? எனில், வெண்பாவாகிய யாப்பே அதற்குக் காரணம் எனலாம். "பெருமைக்கும் சிறுமைக்கும்" என்று பாடினால் யாப்புக் கெடும். "பெருமைக்கும் நுண்மைக்கும்" என்று அமைத்தால் யாப்புக் கெடாது. அது கருதியே நுண்மை என்ற சொல்லைப் பயன்படுத்தினார் ஆசிரியர். வேறு நயம் கருதி அதனை இங்கே பயன்படுத்தினார் என்று கருதவேண்டியதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, சிவப்பிரகாசத் தொடரிலுள்ள நான்கு கருத்துக்களையும் திருவருட் பயனில் அதே வரிசையில் நிறுத்த வில்லை; மாற்றி எதிர் நிரலாக அமைத்துள்ளார் என்பதையும் காணலாம். எனவே சிவப்பிரகாசத் தொடரைப் பின்னிருந்து நோக்கினால் பெருமை, நுண்மை, பேரருள், பேற்றின் அருமை என்ற வரிசை முறை கிடைத்துவிடும்.

### 4. முத்தொழில் செய்பவன்

ஆக்கி எவையும் அளித்து ஆசுடன் அடங்கப்
போக்கும் அவன் போகாப் புகல்.

**பொருள்:**

இறைவன் உயிர்களிடம் உள்ள ஆணவ மலமாகிய அழுக்கினை நீக்கவேண்டியே அவ்வுயிர்களுக்கு உடம்பும், ஐம்பொறி முதலிய கருவிகளும், உலகும், உலகிலுள்ள நுகர்ச்சிப் பொருள்களும் ஆகிய எல்லாவற்றையும் படைத்துக் கொடுக்கின்றான்; உயிர்கள் குறித்தகாலம் வரை அவற்றோடு பொருந்தி வாழும்படியாக அவற்றை நிலைநிறுத்திக் காக்கின்றான்; பின், ஆணவ மலம் நீங்கும் நிலையை அடையும் காலத்தில் அம்மலத்தோடு சேர்த்து, தான் படைத்துக் காத்த உடம்பு முதலிய பொருள்களையும் ஒருசேரப் போக்கி உயிரைத் தூயதாக்குகின்றான். இப்பேருதவியைச் செய்யும் இறைவனே உயிர்களுக்கு நீங்காத புகலிடம் ஆவான்.

**சொற்பொருள்:**

எவையும்- தனு, கரணம், புவனம், போகம் ஆகிய எல்லாப் பொருள்களையும் ஆக்கி- மாயையிலிருந்து படைத்துக் கொடுத்து அளித்து- குறித்த காலம்வரை அவை நிலைபெறும்படி காத்து (ஆணவமலம் ஆகிய மாசு தேய்ந்து மெலிவுற்ற காலத்தில்) ஆசுடன்- அம்மலத்தோடு அடங்க- (தான் படைத்துக் கொடுத்த உடம்பு முதலிய பொருள்களையும்) ஒருசேர போக்கும்- உயிர்களிடமிருந்து நீக்கி அவை தன்னை அடையும்படி செய்கின்ற அவன்- அவ்விறைவனே போகாப் புகல்- உயிர்களுக்கு நீங்காத புகலிடம் ஆவான்.

**விளக்கம்:**

**ஆசு:**

ஆசு என்பதற்குக் குற்றம் என்பது பொருள். உயிரிடத்தில் இயற்கையாகவே ஆணவமலம் என்ற குற்றம் உள்ளது. உயிர் என்று உண்டோ அன்றே அதனிடத்தில் இந்தக் குற்றமும் உடனாகச் சேர்ந்து இருத்தலினால் "சகசமலம்" என்று சொல்லப்படும். சகசமலம் இயற்கையாய் உள்ள அழுக்கு.

ஆடையில் உள்ள அழுக்கு அதன் வெண்மையை மறைப்பதுபோல உயிரிலுள்ள ஆணவ மலமாகிய அழுக்கு அதன் அறிவை மறைத்து நிற்கிறது. அம் மறைப்பினால் உயிருக்கு அறியாமை உண்டாகிறது. அறியாமையினால் வருவது துன்பமே.

எனவே முடிவாகப் பார்த்தால் எல்லாத் துன்பங்களுக்கும் மூல காரணம் ஆணவ மலமே என்பது விளங்கும். இது பற்றியே ஆணவமலம் "மூலமலம்" என்று சொல்லப்படும். இதன் இயல்பையெல்லாம் இருள் மல நிலை என்ற மூன்றாம் அதிகாரத்தில் விரிவாகக் காணவிருக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உலக வாழ்க்கை:**

மூலமலமாகிய ஆணவத்தை நீக்கும் பொருட்டே உயிரோடு உடம்பு முதலியவற்றைக் கூட்டுவிக்கிறான் இறைவன். உடம்பு தனு எனப்படும். மனம் முதலிய கருவிகள் கரணம் எனப்படும். இந்த உலகு புவனம் என்று குறிக்கப்படும். உலகிலுள்ள நுகர்ச்சிப் பொருள்கள் போகம் எனப்படும்.

உயிர்கள் இறையருளால் தனு கரணம் புவனம் போகம் ஆகிய இந் நான்கினோடும் பொருந்தி வாழ்வதே உலக வாழ்க்கை. உயிர்கள் தனுவாகிய உடம்பினுள் நின்று, கரணங்களின் உதவியால் அறிந்து, புவனத்திடையே போக்குவரவு செய்து, போகங்களை நுகர்ந்து கொண்டு வாழ்கின்றன.

**ஐந்தொழில்கள்:**

உயிர்கள் என்றும் உள்ளவையாதலின் அவற்றை இறைவன் படைத்தான் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆயின், இறைவனின் தொழில்களுள் ஒன்றாகப் படைத்தல் என்பது கூறப்படுகிறது. அதன் கருத்து, உயிர்களுக்கு வேண்டிய உடம்பு, கருவிகள், நிலம், நுகர்பொருள் ஆகிய நான்கையும் படைத்துக் கொடுக்கிறான் என்பதாகும்.

உடம்பு முதலிய நான்கும் அறிவற்ற சடப்பொருள்கள். இவற்றை மாயை என்ற சடப்பொருளிலிருந்து இறைவன் தோற்றுவிக்கிறான். குடம் வனைபவன் குடமாகிய காரியத்தைக் களிமண் மூலப்பொருள். அதுபோல, உடம்பு முதலிய நான்கினுக்கும் மாயை மூலப்பொருளாகிறது. இறைவன் செய்வோனாய் நின்று, மாயையிலிருந்து உடம்பு முதலியவற்றை ஆக்குகிறான். இதுவே படைத்தல்.

இவ்வாறு ஆக்கிக் கொடுத்த உடம்பு முதலியவற்றை அந்தந்த உயிர்களின் வினைக்கேற்றவாறு எத்துணைக் காலம் நிறுத்த வேண்டுமோ அத்துணைக் காலம் நிறுத்தி வைக்கிறான். இதுவே காத்தல்.

இனி, "வினைப் போகமே ஒரு தேகங் கண்டாய், வினைதான் ஒழிந்தால் தினைப் போதளவும் நில்லாது" என்றபடி முன் நிறுத்திய உடம்பு முதலியவற்றை உயிர்களிடமிருந்து நீக்குதலே அழித்தல் எனப்படுகிறது.

இதனால், படைத்தலும் காத்தலும் அழித்தலும் ஆகிய இத்தொழில்களை இறைவன் உடம்பு முதலிய சடப்பொருள்களிடத்தில் நிகழ்த்துகிறான் என்பது விளங்கும்.

இம் முத்தொழில்கள் போக, வேறு இரண்டு தொழில்களையும் இறைவன் செய்கின்றான் என்று சைவ சித்தாந்தம் கூறும். அவை மறைத்தல், அருளல் என்பன. அவற்றைப் பின்வருமாறு விளக்கலாம்.

பெறுதற்கரிய உடம்பினையும், அறிதற்குரிய ஐம்பொறி முதலிய கருவிகளையும் பெற்ற உயிர்கள் அவற்றைக் கொண்டு உலகை அறிந்து உலக வாழ்வில் மயங்கிக் களிக்கின்றன.

உலகில் இன்பம் சிறிதாக, துன்பமே பெரிதாயிருக்கின்றது. துன்பத்தைத்தரும் பல பிணிகளைக் கொண்ட உடம்பிலே அப்பிணிகளுக்கு இடையில் உயிர் கட்டுண்டிருக்கின்றது. ஆயின் உயிர் தன்நிலையை உணராமல், உலகில் சிறிதாயுள்ள இன்பத்தை நுகர விரும்புகின்றது. இஃது எது போன்றது எனில், பாம்பின் வாயில் அகப்பட்டுள்ள தவளையின் வாயில் பிடிபட்டிருக்கும் வண்டு அந்த நிலையிலும் தன் முன் உள்ள ஒரு பூவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்து கிடக்கும் சிறிய அளவினதாகிய தேனை உறிஞ்சியெடுத்து உண்ண விரும்புதலைப் போன்றது எனலாம்.

இவ்வாறு உயிர்கள் உலக இன்பத்திலேயே விடுதல் அறியா விருப்பம் கொண்டு வாழ்கின்றன.; உள் நின்று தம்மைச் செலுத்தி வருகின்ற இறைவனை அறிய மாட்டாது உலகத்தையே அறிந்து நிற்கின்றன. உலக ஆசை இருக்கின்ற வரையில் உயிர்க்குப் பிறப்பும் உண்டு; இறப்பும் உண்டு. இவ்வாறு இறைவன் உயிர்களுக்குத் தன்னைக் காட்டாமல் மறைந்திருந்து அவற்றைத் துன்பமே மிகுந்த உலக வாழ்வில் இச்சை கொள்ளுமாறு செலுத்தி வரும் செயல் மறைத்தல் எனப்படும்.

உலக வாழ்வில் பல்காலும் உழன்று வினைத் துன்பத்தை உயிர் நுகர நுகர, அதனைப் பற்றியிருந்த ஆணவ மலம் தேயும்; நல்லுணர்வு சிறிது உண்டாகும்; உலகியலில் உவர்ப்புத் தோன்றும். அந்நிலையில் அவ்வுயிர் உலகை நோக்காது இறைவனை நோக்கும். இறைவன் அப்படிப்பட்ட உயிர்களுக்கு ஞானத்தை நல்கி அவை தன்னையடைந்து இன்புறுமாறு செய்வான். இச்செயல் அருளல் எனப்படும்.

இறைவன் படைத்தல் முதலிய மூன்று தொழில்களையும் சடமாகிய உடம்பும் உலகும் ஆகியவற்றின் மேல் நிகழ்த்துவான் என முன்னே குறிப்பிட்டோம். மறைத்தலும் அருளலும் ஆகிய இவ்விரு தொழில்களையும் இறைவன் சித்தாகிய உயிர்களின் மேல் நிகழ்த்துகின்றான் என்பதை நினைவிற் கொள்ளுதல் வேண்டும்.

இதுகாறும் கூறியவற்றால் இறைவன் செய்யும் தொழில்கள் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என ஐந்தாகும் என்பது விளங்கும்.

**முத்தொழிலாய் அடங்குதல்:**

இறைவன் தொழில்கள் இங்ஙனம் ஐந்தாக, இச்செய்யுளில் "ஆக்கி" எனவும், "அளித்து" எனவும், "போக்கும்" எனவும் முறையே படைத்தல், காத்தல், அழித்தல் என்றே மூன்றுதானே இறைவன் தொழிலாகக் கூறப்பட்டுள்ளது என எண்ணலாம். இது பற்றிச் சிறிது விளக்குதல் வேண்டும்.

இறைவன் தொழில்களை ஐந்தாக விரித்து நோக்காமல் படைத்தல், காத்தல், அழித்தல் என மூன்றாகத் தொகுத்துக் கூறுதலும் உண்டு. எங்ஙனம் எனில்,

உடம்பு முதலியவற்றை நிலை நிறுத்தலாகிய காத்தல் தொழில் நிகழ்வதனால் அன்றோ, உயிர்கள் இறைவனை நோக்காது உலகையே நோக்கி நின்று உலக வாழ்வில் மயங்கி நிற்கும்படியான மறைத்தல் தொழில் நிகழ்வதாகிறது. காத்தல் இல்லையேல் மறைத்தல் நிகழ வழியில்லை. எனவே, மறைத்தலைக் காத்தல் தொழிலில் அடக்கி விடலாம்.

இனி, ஆணவ மலம் நீங்குதற்குரிய காலத்தில் அதனோடு சேர்த்துத் தான் படைத்துக் காத்த உடம்பு முதலியவற்றையும் ஒரு சேரப் போக்குதலே அழித்தல் தொழில் என்பாராய், "ஆசுடன் அடங்கப் போக்கும்" என்றார் ஆசிரியர். இதுவே உயிர் மாசு நீங்கிய நிலையாகும். இவ்வாறு உயிரின் மாசினை நீக்குகிற அழித்தல் தொழிலை இறைவன் செய்கிறான் என்பதைச் சொல்லவே, மாசு நீங்கிய உயிரை அவன் ஆட்கொண்டு அருள்புரிகிறான் என்பதும் சொல்லாமலே விளங்கும். எனவே அருளலை அழித்தல் தொழிலில் அடக்கி விடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனம், மறைத்தல் காத்தலில் அடங்க, அருளல் அழித்தலில் அடங்க, இம்முறையில் ஐந்தொழிலும் முத்தொழிலாய் அடங்கி நிற்றல் காணலாம். இத் தொகுத்தல் முறை பற்றியே ஆசிரியர் இறைவன் தொழிலை மூன்றாகக் கூறினார் என அறியலாம். இச்செய்யுள், இறைவன் செய்யும் முத்தொழில்களை வெளிப்படையாகவும் அவன் உயிர்களிடத்துச் செய்யும் மறைத்தல், அருளல் என்னும் இரண்டு செயல்களைக் குறிப்பாகவும் உணர்த்துகிறது.

**கட்டு நிலையும் முத்தி நிலையும்:**

ஆசுடன் கூடி நின்ற நிலை உயிர்க்குக் கட்டு நிலை என்று சொல்லப்படும். கட்டு நிலையைக் குறிக்கப் பந்தம், பெத்தம் என்ற வேறு சொற்களும் நூல்களில் வழங்கும். கட்டு நீங்கி இறைவனை அடையும் நிலை முத்தி நிலை என்று சொல்லப்படும். கட்டு நிலை என்றும் துன்பமே யாதலின் அதனின் நீங்கி இறைவனையடையும் முத்தி நிலையே இன்புறு நிலையாகும்.

**போகாப் புகல்:**

"போக்கும் அவன் போகாப் புகல்" என்று முரண் சுவை அமைத்துக் கூறுகிறார் ஆசிரியர். உயிரிடத்துள்ள ஆசினை அவனே நீக்குகிறான். ஆயின் அவனோ உயிரிடத்தில் இமைப் பொழுதும் நீங்காதவனாய் இருக்கிறான்.

உயிர்களுக்கு இரண்டு நிலைகள் தாம் உண்டு. ஒன்று, கட்டு நிலையில் இருக்கும். அதிலிருந்து விடுபட்டால் முத்தி நிலையில் இருக்கும். இவ்விரண்டு நிலைகளிலும் உயிர்களுக்குப் புகலிடமாய் உள்ளவன் இறைவனே.

நாம் என்றும் இறைவனிடம் அடங்கியிருக்கிறோம் என்பதையும், அவனே நமக்கு என்றும் துணையாக உள்ளவன் என்பதையும் கட்டுண்ட உயிர்கள் உணர்வதில்லை. மனைவி மக்கள், உற்றார் உறவினர் முதலியோரையே உற்றதுணை என்று எண்ணுகின்றனர். இவர்களெல்லாம் இடையிலே வந்து சேர்ந்தவர்கள்; இடையிலே நீங்கக்கூடியவர்கள். இவர்கள் இப்படிக் கடைசி வரை துணையாக இருக்க முடியும்? இறைவன் ஒருவனே நமக்குப் போகாப் புகல் என்ற உண்மையைத் தெளிந்து அவனையே புகலாக அடைதல் வேண்டும்.

(தொடரும்...

## எது வந்தாலும் போராடு

# மோட்சத்தைத் தேடி அலையத் தேவை இல்லை. சுயநலம் சிறிதும் இல்லாமல் பிறருக்கு சேவை செய்பவனைத்தேடி இறைவனே ஓடி வருவார்.

# கையைக் கடவுள் படைத்தது கொடுப்பதற்கே. நீ பட்டினியாய் கிடக்க நேர்ந்தாலும் பரவாயில்லை. உன்னிடம் இருக்கும் கடைசிப் பருக்கையையும் பிறருக்கு கொடுத்துவிடு. அதனால் உன் வாழ்வு முழுமை பெறும்.

# அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில் எதைப் பின்பற்றுவது என்ற போராட்டம் எழும்போது உள்ளம் சொல்வதைப் பின்பற்றுங்கள்.

# எதுவந்தாலும் எதிர்த்துப் போராடு. ஓர் அடியும் பின்வாங்கக் கூடாது. என்ன நடந்தாலும் கலங்காதே.

# மரணம் வருவது உறுதியாக இருக்கும்போது மேலான லட்சியத்திற்காக வாழ்ந்து இறந்துபோவது சிறந்தது.

-சுவாமி விவேகானந்தர்-

**கடவுளின் கிருபை பணிவுடையவனை நாடுகிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதியில் ஐம்முகப் பிரமன் நான்முகமான சம்பவம்

– அமரர் சிவ. சண்முகவடிவேல் –

ஆதிகாலத்தில் பிரமதேவர் ஐந்து முகங்களோடு மேருமலையில் அமர்ந்திருந்தார். ஒருநாள் சனகர் முதலாய முனிவர்கள் சந்திக்க வந்தார்கள். முன்னர் முனிவர்கள் பிரமதேவரைத் தொழுதார்கள். பின்னர் இஃதொன்றை வினாவினார்கள்.

"ஐயனே சர்வலோக நாயகர் யாவராவார்? அவரை அறியும் ஆவலோடு தங்களை அடைந்தோம்" என்று சாற்றினார்கள் முனிவர்கள்.

அயனார் சற்று நேரம் ஆலோசனையில் ஆழ்ந்தார். பின்னர் முனிவர்களுடைய முகம் நோக்கி மொழிவதானார்.

"முனிவர்களே! முன்னிப் பாருங்கள். அனைத்து உலகங்களையும் ஆக்குபவன் நான். அவை நிலை பிறழாது நிறுத்துபவன் நான். அவற்றை அழிப்பதற்கு அருகதையாவானும் நானே. அதனால் அண்ட புவனங்களுக்கும் நாயகன் நான்தான் என்று நவிலவும் வேண்டுமோ மைந்தர்காள்" என்று கம்பீரமான தொனியில் எடுத்து இயம்பினார் பிரமதேவர்.

திருமால் அப்போது திசைகள் திடுக்கிட அங்கு தோற்றினார். பிரமதேவர் முகம் நோக்கி மொழிந்தார் இலக்குமிதேவி கணவர்.

"மகனே! உன்ன நீ துதிக்கத் தகுமோ? சிந்தையைச் சற்றுப் பின்னோக்கிச் சிந்திப்பாய்" உன்னுடைய உதிப்பு என் உந்தியில் உதயமாவது அன்றோ.

என்னிடத்தில் தோற்றும் நீ உன்னை முன்னவன் என்று மொழியலாமோ? உன்னைத், தோற்றிய நானே உனக்கு முன்னவன்! கமலாசனா! முறை பிறழ மொழியற்க..." என்று விளக்கினார் பாற்கடல் பாம்பணையில் பள்ளி பயில் பரந்தாமனார்.

அந்த வேளையில் இருக்கு வேதம் அவர்கள் முன்பு உருக்கொடு நின்று உரைத்தது:

"நீங்கள் இருவரும் முழுதுமான உலகங்களுக்கும் முதலாக முடியாது. நீங்கள் அமுதம் பெற விரும்பிப் பாற்கடலைக் கடைந்தீர்கள். அப்போது ஆலம் தோற்றியது. சிவபெருமான் ஆலத்தை அமுதாக உண்டார். அவரே அனைத்தினுக்கும் ஆதியாவார். அவரே முன்னைப் பழம் பொருட்கும் முன்னவர். பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியர்" என்று எடுத்து விளக்கியது இருக்கு வேதம்.

அச்சமயம் பார்த்து யசுர் வேதம் விசும்பு அதிர முழங்கியது.

"கேளுங்கள்! அப்புர அசுரரை அகற்றி முப்புரங்களை இப்புவியில் முடித்த செப்புதற்கரிய சிவபெருமான் ஒப்பரும் பரம்பொருள் என்னும் உண்மையை எப்போதும் மறவாதீர்கள்" என்று உணர்த்தியது.

சாமவேதம் சாந்தமாகச் சாற்றத் தொடங்கியது.

"பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரையும் பிறவாப் பேரின்பத்துள் ஆழ்த்தும் அறப்பெருங்கடவுள். கங்கையைச் சடையில் தரித்த கருணைக் கடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அக்கடவுள் தேவதேவர். மகாதேவர். அவருக்கு மேலான கடவுள் இல்லை. ஒப்பிடற்குரிய தேவரும் உளரல்லர்..." என்று சாம வேதம் சாற்றியது.

அதர்வண வேதம் அறிவுறுத்தத் தொடங்கியது!

"ஏகனாகவும் அநேகனாகவும் உயிருக்குள் உயிராகவும் உலகம் அனைத்தும் ஆகியும் உள்ளும் புறமுமாக உள்ளான் சிவபெருமான். அவனன்றி அணுவும் அசையாது. செம்மேனி அம்மான் அவர். விரதமெல்லாம் மாண்ட மனத்தார் மனத்தான். தூண்டு சுடரனைய செம்பொற்சோதி. அவர் சிவபெருமான், அவரே முதல்வர்" என்றது அதர்வண வேதம்.

வேதங்கள் உணர்த்திய உட்பொருளைக் கேட்டு ஆவேசங் கொண்டார் அயனார்.

"வேதங்களே! நீங்கள் ஆணையிட்டுக் கூறும் விழுப்பொருள் முதல்வராவது வியப்பிற் குரியது. அவருக்குரிய குறைகளை நீங்கள் அறியமாட்டீர்களா?

"தமது உடலில் பாதிப் பாகத்தை உமைக்கு இடங்கொடுத்தார். சுடுகாட்டில் பூதங்கள் பாட நடனம் ஆடுகின்றார். அல்லாமல் எனக்கு மகவாகவும் வந்து பிறந்தாரே" என்று ஏளனமாக எடுத்து இயம்பினார்.

உடனே பிரணவம் தோற்றியது. பிரமரைப் பார்த்துப் பரிகசித்துப் பகன்றது.

"பிரமனே! பிறை தவழ்சடை முடிப் பிஞ்ஞகர் பெண்ணொரு பாகங் கொண்டார் என்று பழித்துரைத்தாய். இறைவர் தமது திருமேனியில் பாதிப்பாகத்தைப் பார்பதியாருக்குப் பகிர்ந்தளித்தமை சிவம் வேறு சத்தி வேறின்மை என்னும் தத்துவப் பொருள் என அறிதல். தேற்றாய்.... ஈசன் எருத்தின் மேல் எழுந்தருள்வார் என்று ஏளனஞ் செய்து எக்களிக்கின்றாய்.

"அது தரும தேவதைத் தம்மைத் தாங்குவதற்கு எடுத்த தவவடிவம் என்று தெளிவாய். மாதேவர் மயானத்தில் ஆடி மகிழ்கின்றார் என்று மதித்தாய் மதியிலி. ஐயன் அண்ட புவனங்கள் அனைத்தையும் அழித்து ஒடுக்கித் தான் ஒடுங்கா இடம் சுடலையதாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கோடி சூரியர் கூடினார் போன்ற ஒளிப் பிரகாசம் ஒன்று உதித்தது. அவ்வொளியினூடே சிவப்பரப்பொருள் காட்சி அளித்தது. அருகினில் துவாதச ஆதித்தர்கள் மின்மினி போல ஒளி கான்றனர். சிவபெருமான் திருமுகங்கள் ஓரைந்தும் திருக்கரங்கள் ஈரான்குமாகத் தரிசனம் தந்தார். அத்திருவுருவத்தைக் கண்ட மாத்திரத்தில் பிரமதேவருடைய உச்சித்தலை பின்வருமாறு உழறத் தொடங்கியது.

"ஓ! உருத்திரனே! நீ என் மைந்தனாக என்னுடைய புருவ மத்தியில் முன்னொருநாள் முளைத்தாய் அல்லையோ! என்னிடத்தில் பிறந்த நீ எப்படி எனக்கு முன்னவனாக முடியும்? என்றார் பிரமதேவர்.

உடனே சிவபெருமானிடத்தில் சினம் தோற்றியது. மேரு மலையை வில்லாக வளைத்தும் முப்புரங்களை முறுவலால் முடித்தும் விளையாடிய பரம்பொருள் தமது இடது திருக்கரத்தில் பிரமதேவருடைய உச்சித் தலையைக் கிள்ளி எடுத்தருளினார்.

அக்கணத்தில் அயனுடைய ஆணவம் அடங்கியது. பொறாண்மை பொன்றியது. போதம் புகுந்தது. அன்னவாகனன் அறிவு பெற்று எழுந்தான். கைகளைக் குவித்துக் கும்பிட்டான் கண்கள் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கின. கருணைக் கடவுளிடத்தில் கழிவிரக்கத்தோடு கழறுவதானான்.

"மும்மூர்த்திகளுக்கு மூத்தவனே. உலகத்தைக் காத்தவனே!! ஞானிகளுடைய அறிவாலயத்தில் அமர்வாய்! அண்டர் அண்டாக் கரியாய்! தேவரீரைத் தொழுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேடன் மலர்க் கண்ணும் மாதவன் மலர்க் கண்ணும் புனைவாய்! அடியேனுடைய அறியாமையை அகற்றி அறிவொளிய அருளுதல் வேண்டும்.

"அடியேன் பிழை பொறுத்துக் குன்றாத பத்தி கூர குறித்து அருளல் வேண்டும்" என்று குறை இரந்து கூவினான் குரை இதழ் மரை இதழில் குடி கொள்வான்.

ஆராலும் அறிதற் கரிய அரும் பெரும் பொருள் பிரமதேவருடைய பிரார்த்தனைக்குத் திருச்செவி சாய்த்தருளினார்.

அந்நாளிலிருந்து நான்முகனானார் ஐம்முக அயனார்.

## இட்ட தெய்வத்தின் சுட்ட பழம்

தமிழ் மூதாட்டி ஔவையின் புலமைச் செருக்கடக்க இந்தச் "சுட்ட பழத்தினைச்" சுட்டியே அவளைப் பரிகசித்தான் - ஏறு மயிலேறி விளையாடிடும் எழில் பாலகன்; எம் வேலவன்!

இந்தக் கதையை அறியாதோர் இலர்; செவி வழியாக, அச்சூடக வாயிலாக, சலனத்திரை வண்ண ஓவியமாக... வரலாற்றுப் பிரபல்யம் பெற்றுவிட்ட இந்நாவற் கனியின், மருத்துவ மகத்துவத்தினைச் சற்றே நோக்கலாம்.

நார்ச்சத்து நிறைந்தது இந் நாவற்கனி. கயர்த் தன்மையும், இனிப்புச் சுவையும் சாற்றில் செறிந்த இக் கனியின் தோலும், சதையும் இலகுவில் சமிபாடடையக்கூடியன; சீரான குருதிச் சுற்றோட்டத்தினைக் கொடுக்க வல்லன; உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியை ஊக்குவிக்கக் கூடியன. மேலும்- குருதியிலுள்ள தீங்கற்ற கொழுப்புச் சத்தான "LDL கொலஸ்திரோலை" மட்டுப்படுத்தவும், தீய கொழுப்புச் சத்தான "HDL கொலஸ்திரோலை" கட்டுப்படுத்தவும் முடிந்த குணநலன்களையும் கொண்டன.

சிறப்பாக - "மெல்லக் கொல்லும் கொலையாளி" (Slow Killer) என வருணிக்கப்படும் நீரிழிவு வியாதியினாற் பீடிக்கப்பட்டவர்களுக்கு ஏற்றதொரு கனி, இது. அவர்களுக்கான ஆற்றலை அதிகரிக்கும் அருமருந்துங்கூட. மிதமான அளவோடு இக்கனிகளைப் பதமாக உட்கொண்டபின் மீதமாக உமிழும் விதைகளை - துப்புரவாக்கி, நன்குலர்த்தி, பொடித்து, அரித்துப் பத்திரப்படுத்த வேண்டும். இந்தத் தூகள்களை உரிய பிரமாண அளவில் - பரிந்துரைக்கப்பட்ட நீராகாரங்களில் கலந்து பருகுவது, குறித்த நோயாளரின் உபாதைகளைக் குணமாக்குவதற்கு ஏதுவாகும் என, சித்த மருத்துவமானது சிலாகித்துரைக்கின்றது.

ஒப்பில்லாத் தமிழ்த் தெய்வம், எம் இட்ட தெய்வமுமாம் இளமுருகனின் மரமீதிலிருந்து உதிர்க்க, ஔவைப் பிராட்டியவள் ஒவ்வொன்றாய்ப் பொறுக்கி எடுத்து ஊதி ஊதிச் சுவைத்த ஓர் ஔடதமே இது!

-இளைய பண்டிதன்-



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



ஞானச்சுடர் சிறப்புப்பிரதி வழங்கல்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞானச்சுடர் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஞானச்சுடர் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...



பொய்யை மறவாதே, மறந்தாயானால் மெய் பேசமாட்டாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேலே: ஆச்சிரம சமுதாயப் பணிகளில் ஒன்று
கீழே: ஆச்சிரமத்தில் இடம்பெற்ற கடவுள் சுவாமிகளின் குருபூசை நிகழ்வு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# சைவத் திருக்கோயிற் கிரியைநெறி

– உயர்திரு கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள் –

**சுப்பிரமணியர்:**

சுப்பிரமணியரது வழிபாடு கௌமாரம் என்னும் பெயர் வாய்ந்தது. ஒரு காலத்தில் இதுவும் தனி வழிபாடாக நிலவிற்று. இலக்கியச் சான்றுகள் இவ்வுண்மையினை நிரூபிக்கும் நாளடைவில் இது சைவத்தின் இன்றியமையா உள்ளுறுப்பாக ஆயிற்று என்பது நூல்களை ஆராய்ந்தவர்களது கருத்து. இதிகாச புராணங்களில் கார்த்திகேயரது வரலாறு உள்ளது. ஏறக்குறைய எல்லா நூல்களிலும் முருகன் சிவகுமாரனாகக் கூறப்படுகிறான். சைவ வழிபாட்டில் இவன் பரிவாரத் தெய்வமாக இடம்பெறுகிறான். கணேசனும், முருகனும் இடம்பெறாத சிவாலயங்களைத் தென்னாட்டிற் காண்பதரிது.

அரக்கர்கள் கடுந்தவமியற்றி வரங்கள் பெற்றுத் தேவர்களைத் துன்புறுத்தினர். தேவர்க்கு அரசனான இந்திரன் செய்வதின்னது என அறியாது திகைத்து நின்றான். அவனது பலம் பொருந்திய சேனையைத் தலைமை தாங்கிப் போருக்குச் செலுத்த உரிய தலைவன் கிடைத்திலன். பகைவரைப் பூண்டுடன் அழிக்க ஒப்புயர்வற்ற சேனைத் தலைவனாக விளங்கும் ஆற்றல் படைத்தவன் சிவனின் மதலை ஒருவனே என்பதை நன்கு உணர்ந்த இந்திரனும் ஏனைய தேவர்களும், மன்மதனின் துணையால் இறைவனும், பரமனை நோக்கித் தவம் மேற்கொண்டு நிற்கும் இறைவியுங் கூடுவதற்கு ஏற்ற சூழ்நிலையைத் தோற்றுவித்தனர். இதில் வெற்றியுங் கண்டனர். சிவனுடைய தேஜஸிலிருந்து முருகன் தோன்றினான். ஆறு பொறிகளாளமைந்த இத் தேஜஸை அக்கினி தாங்கிச் சரவணப் பொய்கையில் இட்டனன். குழந்தை பிறந்தது; அது குழவிப் பருவத்திலேயே ஆற்றல் மிக்கு விளங்கியது. தேவர்கள் குழந்தைக்குப் பரிசில்கள் பல வழங்கினர். இந்திரன் தன் சேனைப் பாதுகாப்பினை இச் சிவசுதனிடம் ஒப்புவித்தான். ஒப்பற்ற இத்தலைவன் அரக்கரையழித்து ஆன்மாக்களை உய்வித்த வரலாற்றினைப் புராணவாயிலாக நாம் விரிவாக அறிகிறோம். சிவனின் தேஜஸ் ஆறு பொறிகளினால் அமைந்ததனால் ஒவ்வொன்றும் ஒவ்வொரு குழவியாயிற்று. ஆறு குழந்தைகளையும் ஒருங்கு சேர்த்து உமை இறுகத் தழுவியவேளை முருகன் ஒரே வடிவுகொண்டு அறுமுகத்தோனாய் பன்னிரு கரங்களுடன் உருவாயினன் என்பதும் புராண வரலாறு.

சிவனின் மூத்த மைந்தன் கணங்களுக்குத் தலைவனாகிக் கணபதி எனப் பெயர் பெற்றான். இளைய புதல்வன் தேவர்களின் சேனைக்குத் தலைவனாகித் தேவசேனாதிபதியானான். கோவிலில் எமக்குக் காட்சி தரும் கந்தனின் கோலத்தினை நாம் உரியவாறு உணரப் புராணங்கள் துணை செய்வன. இவன் தோற்றத்தின் ஒவ்வொரு அம்சத்தினையும் புராணங்கள் தனித்தனி வரலாறு கூறி விளங்க வைப்பன. இவனுக்கு சக்திவேல் சிறந்த படைக்கலமாக விளங்குகின்றது. இதனை ஏவித் தாரகன் வலியினை அழித்தான். கிரௌஞ்சமலையினைப் பிளந்தது. சூர் தடித்தது எல்லாம் இவ்வேற்படையினாலேயாகும். மயில் இவனுடைய ஊர்தி. சில புராணங்களில் சேவலும் இவனுடைய ஊர்தியாகச் சில இடங்களிற் கூறப்படினும் இது இவன் கொடியில் விளங்கும் அடையாளமாயிருக்கக் காண்கிறோம். ஆட்டினையும் இவன் வாகனமாகக் கொண்டுள்ளான். "இவை அனைத்தையும் தேவர்கள் இவன் குழந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக விளையாடும் பருவத்தில் விளையாட்டுப் பொருட்களாகக் கொடுத்தனர்" என்று புராணங் கள் கூறுகின்றன.

இதிகாச புராணங்களில் கார்த்தி கேயன் ஆறுமுகங்களுடனும் பன்னிரு கரங் களுடனும் விளங்குகின்றான். தனித்தனி ஆறு குழவிகளாக இருந்து ஆறு கார்த்திகைப் பெண்களின் வேண்டுகோளிற்கு இணங்க அவர்களால் பாலூட்டப்பட்ட வரலாறும் இங்கு உண்டு. குமாரன் என்னும் பெயருடன் சிவனுக் கும், **விசாகன்** என்னும் பெயர் பூண்டு உமைக் கும், **சாகனெனப்** பெயர் தாங்கி கங்கைக்கும், நைகமேயன் என்னும் பெயர் வாய்ந்தவனாய் அக்கினிக்கும் தன் குழவிப் பருவத்தில் இன்பம் விளைவித்ததாக இவ்வரலாறுகள் கூறும்.

முருகன் பெயர்கள் அவன் பெருமை கூறும் வரலாற்று அடிப்படையிலேயே அமை வன. சர வனத்தில் (சரம் எனப்படும் ஒரு வகைப் புல் மிகுந்து விளங்கும் காட்டில்) பிறந்தமையால் இவனுக்குச் **சரவணபவன்** என்னும் பெயர் உண்டாயிற்று. **சரஜன்மா** என்னும் பெயரும் இதே கருத்தையுடையது. கார்த்திகைப் பெண்களால் பாலூட்டி வளர்க் கப்பட்டவன் **கார்த்திகேயன்** ஆயினன். ஆறு முகங்களையுடையவனை ஆகமங்களும் புரா ணங்களும் ஏனைய நூல்களும் **ஷண்முகன்** எனச் சுட்டுகின்றன. அக்கினி தேவனாற் சர வணப் பொய்கையில் விட்ட தேஜஸிலிருந்து தோன்றியவனானமையாற் **பாவகேயன்** என் னும் பெயர் இவனுக்கு உரித்தாயிற்று. பாவகி என்பது அக்கினியின் பெயர்களிலொன்று. ஆறு குழந்தைகளையும் உமை ஒன்று சேரத் தழுவியவேளை ஒருருவாய் **ஸ்கந்தன்** ஆயி னான். இவனது ஊர்தி மயிலாயமைந்தமை யால் இவன் **சிகிவாகனன்** எனப்பட்டான். பெருஞ் சேனைக்குத் தலைவனானதுபற்றி இவனுக்கு **மகாசேனன், சேநாநீ** என்னும் பெயர்கள் பிறந்தன. துறவிக்கோலம் பூண்டு அடியவர்களின் உள்ளக்குகையில் வசிப் பதனால் **குகன்** என்னும் சிறப்புப் பெயர் பெற்றான்.

**பண்டர்க்கார்** என்னுமறிஞர் தமது பெருநூல் ஒன்றில், மகாராஷ்டிரத்திலும் வடக் கேயும் முருக வழிபாடு பெரிதும் நிகழாதது கண்டு இந்தியாவில் இவ்வழிபாடு மறைந்து வருவதாகத் தவறாகக் குறிப்பிட்டுள்ளார். இதி காச புராணங்களில் பெரிதும் வழங்கின இவ் வழிபாடு. இப்பொழுது அநேகமாக மறைந்து விட்டது என்பதே இவர் கூற்று. தென்னாட்டின் நிலை கண்டிருப்பாராயின் தாம் கூறியதைத் திருத்தி வேறு விதமாக நூலை அமைத்திருப் பார். கார்த்திகேயன் தென்னாட்டில் பல தனிக் கோவில்களில் எழுந்தருளி மக்களின் வழி பாட்டை ஏற்றருளுகின்றான். சிவாலயங்களி லும் இவருக்கு இடம் உண்டு என்பது முன்னர் குறிப்பிடப்பட்டது. முருகன் என்றால் அழகு என்பது பொருள். இக்கருத்தினையே **குமரன்**, குமாரசாமி முதலிய இதர பெயர்களும் குறிப் பிடுகின்றன. வேற்படையைத் தாங்கிய திருக் கோலத்தில் இவன் **வேலன்** எனப் பெயர் பெறுகிறான். வேலன் என்னும் பெயர் உணர்த் துங் கருத்தினையே **சக்திதரன்** என்னும் பெயருஞ் சுட்டுகிறது. இவனைக் குறிஞ்சி நிலத்திற்கு அதிதெய்வமாகத் தமிழ் நூல்கள் கூறும். இவன் திருக்கோவில்கள் எல்லாம் தென்னாட்டில் குன்றின்மேல் விளங்குவது குறிப்பிடத்தக்கது.

கோவில்களில் நிறுவி வழிபடுவதற் குரிய முருகன் திருவுருவங்கள் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதை ஆகமங்கள் கூறியுள்ளன. ஒரு முகமும் இரு கரங்களும் உடையது ஒரு திருவுருவம்; ஆறு முகங் களும் இரு கரங்களும் உடையது இன் னொன்று. ஆறுமுகங்களும் பன்னிரு கரங்களு முடைய இன்னொரு முகம் பிரசித்திபெற்றது.

ஆறு முகங்களையுடையதனால் **சண் முகமூர்த்தி** எனப் பெயர் பெற்ற திருவுருவம் பன்னிருகரங்களுடன் பின்வருமாறு அமைதல்

**அடக்கமுள்ள சான்றோரைத் துயரம் ஒன்றும் செய்யாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். ஒவ்வொரு முகத்திற்கும் இரு கண்கள் உரியன. சந்திரனின் அழகும் முப்பத்திரண்டு இலக்கணங்களும் உருவத்தில் பொலிந்து விளங்குதல் வேண்டும். சதங்கைகள் இரு கால்களையும் அழகு செய்வன. பின்னால் மயில் இடம்பெறும். சக்தி, சரம், கட்கம், துவஜம், கதை, வில், குலிசம், கேடயம், சூலம், பங்கயம் ஆகிய ஆயுதங்கள் பத்துக் கரங்களில் விளங்கும். முன் இரு கரங்கள் அபய வரத கரங்களாய் அமையும். மயிலின்மீதமர்ந்து இருப்பதாகச் சித்தரிப்பின் இடதுகால் தொங்கியவாறும் விக்கிரகத்தை உருவாக்குதல் வேண்டும். நிற்கும் நிலையில் உருவத்தைச் சித்தரிப்பதாயின் பத்மபீடத்தில் சமநிலையில் நிற்குமாறு உருவாக்குதல் வேண்டும்.

கந்தனைத் துறவிக் கோலத்தில் வைத்து வழிபடும் முறையும் வழக்கில் இருக்கக் காண்கிறோம். இதைப் பழநி என்னுந் திருத்தலத்தில் விசேடமாகக் காணலாம். மொட்டந்தலையும், உருத்திராக்கமும், காவியுடையும் பூண்டு, கோவணாண்டியாக விளங்கும் திருக்கோலம் இது. சுவாமிமலையில் இதைப் பெரிதும் நிகர்த்துக் குருவாயமைந்து அறிவு புகட்டுங் கோலம் காணலாம். தந்தையாகிய சிவனுக்கு இம்மைந்தன் குருவாய் அமைந்து பிரணவப் பொருளினை உரைத்த வரலாற்றினைக் கந்தபுராணத்திலுள்ள அயனைச்சிறைபுரிபடலம் கூறும். இறைவனின் திருவுருவங்களில் முக்கியமான சோமாஸ்கந்த வடிவத்தில் முருகன் இடம்பெறுவதும் இச் சந்தர்ப்பத்தில் உற்றுநோக்கற்பாலது.

கந்தனது வழிபாடு பெரும்பாலும் ஆகமங்கூறும் சிவவழிபாட்டை நிகர்ப்பதே. இவ்வழிபாட்டின் அங்கமான கிரியைகள் அனைத்தும் தனிக்கிரியை நூல் வடிவாக உருவாக்கப்பட்டுள்ளன. இந்நூல் குமார தந்திரம் எனப் பெயர் பெற்றுள்ளது. ஐம்பத்தொரு பாடல்களாலமைந்த இந்நூல் ஆகம மரபினையொட்டி உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றுள் நித்தியபூஜா விதி, நைவேத்ய விதி, அக்கினிகார்ய விதி, நித்தியோத்சவ விதி, குண்டலக்ஷணம், தீக்ஷை, ஸ்நபனம், ஜீர்ணோத்தாரணம், வாஸ்துசாந்தி, திசா ஹோமம், மூர்த்திஹோமம், பிரதிமாலக்ஷணம், ரதப்பிரதிஷ்டை முதலிய அத்தியாயங்கள் குறிப்பிடத்தக்கன.

ஆகமங்களிலும் தந்திரங்களிலும் கூறப்படாதவிடத்தும், வழிபடும் புதியதொரு முறை சில இடங்களில் வழங்கி வருகின்றது. இவ்வழிபடு மரபில் கந்தனின் சக்தியாகிய வேற்படையினைக் கருவறையில் வைத்து வழிபாடு நிகழ்வதைக் காண்கிறோம். இவ் வேலாயுதம் தங்கத்தினாலும், வெள்ளியினாலும் ஐவகை உலோகத்தினாலும் அமையும். இவ்வழிபாட்டில் நிகழும் கிரியைகள் வேற்படையினையே முருகனாகக் கொண்டு நிகழ்த்தப்படுகின்றன. (தொடரும்...

**ஆன்மீகச் சிந்தனைகள்**

*நாம் நம் கடமையைச் செய்கிறோம் என்பதை மட்டுமே எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அதில் வெற்றி கிடைக்குமா அல்லது தோல்வியில் முடியுமா என்று சிந்தித்துக் கொண்டே கடமையைத் தள்ளிப்போடக்கூடாது. அப்பொறுப்பினை ஆண்டவனிடம் ஒப்படைத்து விட வேண்டும். இந்த மனப்பான்மையை வளர்த்துக் கொண்டால் வெற்றி தோல்விகள் எவ்விதமான பாதிப்புக்களையும் ஏற்படுத்துவதில்லை.

*கண்ணிமையில் பூசிய கருநிற மை கண்ணுக்குள் படிவதில்லை. நீரில் இருக்கும் தாமரை மலர் சேற்றினைத் தீண்டுவதில்லை. கடவுளை முற்றிலும் உணர்ந்த மனிதர்கள் உலக வாழ்வில் ஈடுபட்டாலும், அவர்களது மனம் அதில் ஈடுபடுவதில்லை. எப்போதும் இறைவனையே எண்ணிக்கொண்டு இருப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பக்கம்: (தொடர்ச்சி...

# சைவ சமய வினா விடை

– ஆறுமுகநாவலர் –

**282. இப்படிப்பட்ட நிலத்திலே வைக்கற்பாலனவாகிய மரஞ்செடி கொடிகள் எவை?**

**மரங்கள்:**

வில்வம், பாதிரி, கோங்கு, பன்னீர், கொன்றை, புலிநகக்கொன்றை, பொன்னாவிரை, மந்தாரை, சண்பகம், குரா, குருந்து, மகிழ், புன்னை, சுரபுன்னை, வெட்சி, கடம்பு, ஆத்தி, செருந்தி, பவளமல்லிகை, வன்னி, பலாசு, மாவிலிங்கை, நுணா, விளா, முக்கிளுவை, நெல்லி, நாவல், இலந்தை, பலா, எலுமிச்சை, நாரத்தை, தமரத்தை, குளஞ்சி, மாதுளை, வாழை, செவ்விளநீர், சூரியகேளியிளநீர், சந்திரகேளியிளநீர் என்பவைகளாம். மரங்களில் உண்டாகும் பூ, கோட்டுப்பூ எனப்படும்.

**செடிகள்:**

அலரி, நந்தியாவர்த்தம், குடமல்லிகை, வெள்ளெருக்கு, செம்பரத்தை, கொக்கிறகு, மந்தாரை, துளசி, நொச்சி, செங்கீரை, பட்டி, நாயுருவி, கருவூமத்தை, பொன்னூமத்தை, கத்தரி, தகரை, செவ்வந்தி, தும்பை, வெட்டிவேர், இலாமச்சை, தருப்பை, மருக்கொழுந்து, சிவகரந்தை, விஷ்ணுகாந்தி, மாசிப்பச்சை, திருநீற்றுப்பச்சை, பொற்றலைக்கையாந்தகரை, எள்ளு, பூளை, அறுகு என்பவைகளாம். செடிகளில் உண்டாகும் பூ, நிலப்பூ எனப்படும்.

**கொடிகள்:**

மல்லிகை, முல்லை, இருவாட்சி, பிச்சி, வெண்காக்கொன்றை, கருங்காக்கொன்றை, கருமுகை, தாளி, வெற்றிலை என்பவைகளாம். கொடிகளில் உண்டாகும் பூ, கொடிப்பூ எனப்படும்.

**283. நீர்ப்பூக்கள் எவை?**

செந்தாமரை, வெண்டாமரை, செங்கழுநீர், நீலோற்பலம், செவ்வாம்பல், வெள்ளாம்பல் என்பவைகளாம்.

**284. திருநந்தவனத்தை எப்படிப் பாதுகாத்தல் வேண்டும்?**

புலையர், புறச்சமயிகள், தூரஸ்திரிகள், முதலாயினோர் உள்ளே புகாமலும், யாவராயினும் எச்சில் மூக்குநீர் மலசல முதலியவைகளால் அசுசிப்படுத்தாமலும், அங்குள்ள பத்திர புஷ்பங்களைக் கடவுட் பூசை முதலியவற்றிற்கு அன்றிப் பிறவற்றிற்கு உபயோகப் படுத்தாமலும், மோவாமலும், அங்குள்ள மரஞ்செடி கொடிகளிலே சலம் தெறிக்கும்படி வஸ்திரம் தோயாமலும், அவைகளிலே வஸ்திரத்தைப் போடாமலும் பாதுகாத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்திர புஷ்ப மெடுத்தல்

**285. கடவுட் பூசைக்குப் பத்திர புஷ்பங்கள் எடுக்க யோக்கியவர் யாவர்?**

நான்கு வருணத்துட்பட்டவராய்ச், சிவதீக்ஷை பெற்றவராய், நியமாசாரம் உடையவராய் உள்ளவர்.

**286. பத்திர புஷ்பம் எடுக்க யோக்கியர் ஆகாதவர் யாவர்?**

தாழ்ந்த சாதியார், அதீக்ஷிதர், ஆசௌசம் உடையவர், நித்திய கருமம் விடுத்தவர், ஸ்நானம் செய்யாதவர், தூர்த்தர் முதலானவர்.

**287. கடவுட் பூசைக்கு ஆகாத பூக்கள் எவை?**

எடுத்துவைத்து அலர்ந்த பூவும், தானே விழுந்து கிடந்த பூவும், பழம் பூவும், உதிர்ந்த பூவும், அரும்பும், இரவில் எடுத்த பூவும், கைச்சீலை, எருக்கிலை, ஆமணக்கிலை என்பவற்றிற் கொண்டு வந்த பூவும், காற்றினடிபட்ட பூவும், புழுக்கடி, எச்சம், சிலந்தி நூல், மயிர் என்பவற்றோடு கூடிய பூவும், மோந்த பூவுமாம்.

திருக்கோயிலுள்ளும் அதன் சமீபத்தினும் உண்டாகிய பத்திர புஷ்பங்கள் ஆன்மார்த்த பூஜைக்கு ஆகாவாம்.

**288. இன்ன இன்ன தேவருக்கு இன்ன இன்ன பத்திர புஷ்பம் ஆகா என்னும் நியமம் உண்டோ?**

ஆம்; விநாயகருக்குத் துளசியும், சிவபெருமானுக்குத் தாழம்பூவும், உமாதேவியாருக்கு அறுகும் நெல்லியும், வைரவருக்கு நந்தியாவர்த்தமும், சூரியனுக்கு வில்வமும், விஷ்ணுவுக்கு அக்ஷதையும், பிராமணருக்குத் தும்பையும் ஆகாவாம்.

**289. வில்வம் எடுக்கல் ஆகாத காலங்கள் எவை?**

திங்கட்கிழமை, சதுர்த்தி, அட்டமி, நவமி, ஏகாதசி சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணமி மாசப்பிறப்பு என்பவைகளாம். இவையல்லாத மற்றைக் காலங்களிலே வில்வம் எடுத்து வைத்துக் கொள்ளல் வேண்டும்.

**290. துளசி எடுக்கல் ஆகாத காலங்கள் எவை?**

ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை, திருவோண நக்ஷத்திரம், சத்தமி, அட்டமி, துவாதசி, சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணிமை, விதிபாதயோகம், மாசப்பிறப்பு, பிராதக்காலம், சாயங்காலம், இராத்திரி என்பவைகளாம். இவையல்லாத மற்றைக் காலங்களிலே துளசி எடுத்து வைத்துக் கொள்ளல் வேண்டும். இரண்டிலை கீழே உள்ள துளசிக்கதிர் எப்போதும் எடுக்கலாம்.

**291. இன்ன இன்ன பத்திர புஷ்பம் இவ்வளவு இவ்வளவு காலத்துக்கு வைத்துச் சாத்தலாம் என்னும் நியமம் உண்டோ?**

ஆம்; வில்வம் ஆறுமாசத்திற்கும், வெண்துளசி ஒரு வருஷத்திற்கும், தாமரைப்பூ ஏழு நாளிற்கும், அலரிப்பூ மூன்று நாளிற்கும் வைத்துச் சாத்தலாம்.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னதானத்தின் பெருமையும், தனிச்சிறப்பும்

– திரு நீர்வைமணி அவர்கள் –

அன்னதானம் ஒன்றே ஒருவரைப் பூரணமாகத் திருப்திப்படுத்தக்கூடியது. இதுவே அன்னதானத்தின் தனிச்சிறப்பாகும்.

உலகில் பொன், மண், பொருள் எவ்வளவு கொடுத்தாலும் வாங்கிக் கொள்பவர்கள் வேண்டாம் என்று சொல்லமாட்டார்கள். ஆனால் அன்னத்தை ஒரு அளவுக்குமேல் உண்ண முடியாத நிலையிற் போதும், போதும் என்பார்கள். இப்படிப் போதும் போதும் என உண்பவன் திருப்தி தெரிவிக்கும்போது அன்னத்தைக் கொடுத்தவனுக்குத் தானத்தின் பூரணபலனும் கிடைப்பதுடன், மனப்பூரிப்பும் பெறுகின்றான்.

பிறர்பசி நீங்கித் திருப்தி காண்பவர் மனப்பூரிப்புடன் தன் பணியைச் செய்வதிற் காட்டும் ஆர்வம் எத்துணை மேன்மையானது என்பதை வள்ளுவப் பெருந்தகையார்

“செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு”

என மிக அழகாக ஈரடிக் குறட்பாவால் எடுத்துக் கூறியுள்ளார்.

அன்னதானமே தானங்களுட் சிறந்ததென்பதைத் தொன்றுதொட்டே எமது ஆலயங்களிலெல்லாம் அன்னதான மண்டபம், அன்னதான மடம் என்பன அமைத்து இப்பணியைச் செய்து வந்தமை நமக்கு நன்கு உணர்த்துவதாக உள்ளது.

மேலும் அன்னதானத்தின் மேன்மைபற்றி மகாபாரதத்தில் வரும் கதை ஒன்று எமக்கு நல்லறிவு புகட்டுவதாக இருப்பதையும் நாம் அறியலாம். அதாவது

## கர்ணனின் வள்ளன்மை

குந்திபுத்திரனான கர்ணன் போரில் இறந்ததும் அவனுடைய ஆவி யமலோகம் செல்கின்றது. அவன் இவ்வுலகிற் செய்த தான தர்மங்களுக்கு ஏற்ப யமலோகத்தில் மிக முக்கியமான ஒன்றைத் தவிர மற்றைய சிறப்புக்கள் யாவும் கிடைத்தன.

முக்கியமானதான அன்னம் (உணவு) அவனுக்குக் கிடைக்கவில்லை. இதனை உணர்ந்த கர்ணன் தன்னைப் பூவுலகிற்கு அனுப்பி வைக்கும்படி வேண்டவும், யமதர்மன் இதற்குச் சம்மதித்து கர்ணனை பூவுலகிற்கு அனுப்பினான். பூவுலகம் வந்த கர்ணன் தான் பூமியில் உள்ள ஏழை எளியவர்கட்கும், அந்தணர்க்கும், பிறர்க்கும் அன்னதானம் செய்து மகிழ்ந்து மீண்டும் யமலோகம் சென்றான். அப்பொழுது யமலோகத்திற் கர்ணனுக்கு அன்னம் கொடுத்து வரவேற்றார்கள். புரட்டாதி மாத பிரதமைமுதல் அமாவாசை வரையான நாட்கள், மாளயபட்ச தினங்களே கர்ணன் பூமிக்கு வந்து அன்னதானம் செய்த நாட்களாக பாரதக்கதை கூறுகின்றது.

## பிறர்பசித்திருக்கத் தான் புசித்தல் பாவம்

பசி! பசி இந்தப்பசிக் கொடுமை பொல்லாதது. ஆயினும் எமது உடம்பானது ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாது. இருநாள் உணவை ஒரே நாளில் ஏற்கவும் மாட்டாது. பசிவந்துவிட்டால் எந்தப் பெரியவரும் தன்நிலை மாறிவிடுவர். இதனை மிகச் சிறப்பாக பசி வந்திடப் பத்தும் பறந்துவிடும் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை - தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந்திடப் பறந்துபோம்"

எனும் பாடல் அறிவுறுத்துகின்றது.

எனவே எமது உயிர்வாழ்விற்கு உணவு எவ்வளவு இன்றியமையாதது என்பதை இது அறிவுறுத்துகின்றது.

## தானத்திற் சிறந்தது அன்னதானம்

மக்கள் உயிர் வாழ்வதற்கு உணவு, உடை, நீர் இம்மூன்றும் உயர்ந்த தானங்களாக வழங்கப்படுவதை நாம் அறியலாம். எமது உடம்பைப் பேணுவதற்கு உணவும், நீரும் அவசியமாகவும், இந்த உடம்பின் மானத்தைக் காப்பதற்கு உடை அத்தியாவசியமாகவும் விளங்குவதனால், இம்மூன்றையும் தானங்களில் உயர்ந்ததாகப் பெரியோர் வகுத்துள்ளனர்.

மேலும் இம்மூன்றிலும் அன்னதானம் எனப்படுவது மிகச் சிறந்ததாக எடுத்துக்கூறப் பட்டுள்ளது.

பகவான் கிருஷ்ணனே பகவத் கீதையில்,

"எவன் ஒருவன் தனக்காக மட்டுமே உணவு தேடிச் சாப்பிட்டுக் கொள்கிறானோ. அவன் தனது பாவங்கள் அனைத்தையும் அனுபவித்தே ஆகவேண்டும். பிறருக்கு அன்னமிடாமற் புசிப்பவன் பாவத்தையே உண்கிறான்" எனக் கூறியுள்ளான்.

வேத உபநிடதங்களும்,

பசி என்று யார் வந்தாலும் சுயநலம் கருதாது. பேதம் பாராமல் உண்ண உணவு கொடுத்து அவர் பசி தீர்க்கவேண்டும் எனவும்,

திருமந்திரமும்

யார்க்கும் இடுமின், அவர் இவர் என்னன்மின் எனக் கூறுகின்றது.

வனவாசத்தின்போது ஒருமுறை இராமனுக்கு உணவு கிடைக்கவில்லை. உணவுதேடி அலையவேண்டி இருந்தது. அப்பொழுது இராமன்தன் அருகிலிருந்த லட்சுமணனிடம் தம்பி! லட்சுமணா! நாம் ஈட்டாதது நமக்குக் கிடைக்காது. அதனை வித்தையினாலோ, வீரத்தினாலோ பெற்றுவிட முடியாது. நாம் எதை மற்றவர்களுக்குக் கொடுக்கவில்லையோ அதை ஒருபோதும் அனுபவிக்க முடியாது. இது சத்தியம் என்றார்.

இறைவனை வழிபாடு செய்யும் ஆலயங்கள் பலவும் வழிபாட்டுடன் அன்னதானமும் செய்து வருவதும், தண்ணீர்ப்பந்தல் வைத்து தாகசாந்தி செய்துவருவதும் சிறந்த அறப் பணிகளாக கருதப்படுகின்றது.

கலியுகவரதனாகிய கந்தப்பெருமானும் ஈழத்தில் செல்வச்சந்நிதியில் அன்னதானக் கந்தன் எனும் பெயர்பெற்று விளங்குவது, அன்னத்தின் பெருமையை எல்லோர்க்கும் நன்கு உணர்த்துவதாயுள்ளது எனலாம். இதனை நாம் எமது வாழ்க்கையிற் தெரிந்து, உணர்ந்து இந்த அறப்பணியைச் செய்வதுடன், இந்நற்பணியைச் செய்வோர்க்கும் உதவியும், ஒத்தாசையும் புரிந்து நல்லறம் காப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

தொடர்ச்சி

| | | | |
|---|---|---|---|
| சற்குணம் குகருபன் | | ஆவரங்கால் | 10000. 00 |
| சி. பாலச்சந்திரன்மூலம் சூரியகுமார் | | வல்வெட்டி | 10000. 00 |
| த. ஶ்ரீஸ்கந்தராசா | | இணுவில் | 3000. 00 |
| ரமேஷ் ராதிகா | | நீர்வேலி | 1000. 00 |
| தினேஷ்குமார் | | கனடா | 5000. 00 |
| சி. மகேந்திரன் | | இணுவில் | 10000. 00 |
| அபிராம் அர்ச்சுனன் | | நெதர்லாண்ட் | 10000. 00 |
| சயன்தசக்தி | | உடுவில் | 2புட்டி அரிசி, 6000. 00 |
| பா. சஞ்சயன் | | கொழும்பு | 6000. 00 |
| திருமதி தவேஸ்வரராஜதுரை | | கொழும்பு | 10000. 00 |
| K. கிருஷ்ணகுமார் | | வல்லிபுரக்குறிச்சி | 5000. 00 |
| R. அபிஷேக் | | | 1000. 00 |
| திரு குகசேனன் செட்டியார் | | தாவடி | 1000. 00 |
| கி. மாலினி | நல்லூர் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| வினோதகுமார் தர்ஷினி | | நல்லூர் | 2000. 00 |
| வசந்தநாகபூசனி அம்மன் | களவாவோடை | ஏழாலை | 2மூடை அரிசி |
| சாந்தகுமாரி இராசையா | வதிரி | கரவெட்டி | 10000. 00 |
| திருமதி நா. கந்தசாமி | | மட்டுவில் தெற்கு | 1000. 00 |
| கணபதிப்பிள்ளை கிருஷ்ணன் நினைவாக | | இடைக்காடு | 15000. 00 |
| சி. முருகானந்தன் | | இணுவில் | 15000. 00 |
| மூ. சிவலிங்கம் | | இணுவில் | 1000. 00 |
| ச. தில்லைநாதன் | | புத்தூர் கிழக்கு | 5000. 00 |
| கோ. சிவபாலலிங்கம் | | அச்சுவேலி தெற்கு | 2000. 00 |
| இராமநாதன் பராசக்தி குடும்பம் | | கனடா | 3000. 00 |
| S. பிரதீபன் | | மானிப்பாய் | 5000. 00 |
| அழகுராசா சம்மாட்டியார் நினைவு | | நாகர் கோயில் | 10000. 00 |
| வி. சிவசாமி பேராசிரியர் | | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| P. மதிதரன் | | கந்தர்மடம் | 2000. 00 |
| N. விஜயசுந்தரம் (அதிபர்) | | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| ப. தமிழீசன் | | இணுவில் | 2000. 00 |
| திரு பிரபாகரன் | | அச்சுவேலி | 3புட்டி அரிசி |
| திரு சுரேஷ் | | புத்தூர் | 300. 00 |
| ச. சரவணபவன் | தோப்பு | அச்சுவேலி | 6000. 00 |
| சு. சுதர்சன் | | லண்டன் | 5000. 00 |

பிரதிபலனை எதிர்பார்க்கும் செயல் துன்பத்தைத் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| செ. செல்வகுமார் | வவுனியா | 2000. 00 |
| ந. லோகநாதன் | வவுனியா | 1புட்டி அரிசி |
| செ. ஆரூர் | நெல்லியடி | 1000. 00 |
| சின்னையா பொன்னம்மா | இமையாணன் | 2000. 00 |
| தியாகரெத்தினம் கமலாம்பிகை குடும்பம் | கனடா | 2000. 00 |
| சுகுமாரி V.M. றோட் | பருத்தித்துறை | 5000. 00 |
| N. சண்முகநாதன் | இணுவில் கிழக்கு | 3000. 00 |
| சுரேஷ் அனுராதா | இணுவில் கிழக்கு | 1000. 00 |
| திரு தனபாலசிங்கம் | அல்வாய் | 1000. 00 |
| நிர்மலா | தொண்டைமானாறு | 500. 00 |
| திரு கருணாகரன் | சங்கானை | 500. 00 |
| செ. நவரத்தினசாமி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| திரு செந்தூரன் | லண்டன் | 1000. 00 |
| அ. சாவித்திரியம்மா | பருத்தித்துறை | 6000. 00 |
| தியாகராஜா கஜிந்தன் | கனடா | 2000. 00 |
| திருமதி இ. திருமேனிப்பிள்ளை கன்னாதிட்டி | ஒழுங்கை யாழ்ப்பாணம் | 5000. 00 |
| சி. இரத்தினசபாபதி | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| திரு நமசிவாயம் | பருத்தித்துறை | 1000. 00 |
| த. தவீந்திரன் | திருகோணமலை | 500. 00 |
| குமாரதாசன் தம்பிஜயா | கந்தர்மடம் | 1000. 00 |
| பி. சுசிலகுமாரி | அல்வாய் | 10000. 00 |
| கோ. முருகதாஸ் பிரம்படி | கொக்குவில் | 1மூடை அரிசி |
| J. சந்திரப்பிரகாஷ் குடும்பம் ஆத்தியடி | பருத்தித்துறை | 3000. 00 |
| S. ஞானலிங்கம் | கோண்டாவில் | 1000. 00 |
| இராசராகுலன் இராசரத்தினம் | சுண்ணாகம் | 2000. 00 |
| செ. ஜீவராஜ் | கோண்டாவில் | 1000. 00 |
| இ. ஸ்ரீஸ்கந்தராம் | உரும்பராய் | 2000. 00 |
| கணபதிப்பிள்ளை செல்வராசா நினைவாக ரமணன் | சுண்ணாகம் | 3000. 00 |
| செல்லத்துரை செல்லம்மா | சுண்ணாகம் | 5000. 00 |
| தவமலர் சுரேந்திரநாதன் | மயிலியதனை | 2000. 00 |
| ஆச்சிப்பிள்ளை நினைவு க. காந்தரூபன் | கிளிநொச்சி | 2000. 00 |
| கி. தும்சிகா | கனடா | 7000. 00 |
| ஸ்ரீ பிரசாந்தினி | நெல்லியடி | |
| சுசிலா நகைமாடம் | பருத்தித்துறை | 1மூடை அரிசி |
| யாழினி கோகுலவாசன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| ஆ. மகேந்திரலிங்கம் | இணுவில் | 4000. 00 |
| க. வெங்கடாசலம் | இடைக்காடு | 1000. 00 |
| சுப்பிரமணியம் கந்தவனம் (நினைவு) | திருகோணமலை | 4000. 00 |

(தொடரும்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டோம் கதிர்காமம்

(தொடர்ச்சி...

**– திரு கவிமணி அன்னைதாசன் அவர்கள் –**

அங்கே, அங்கே பேருந்தினுள் இருந்த அனைவரது பார்வைகளும் முன்னாலே தெருவில் குவிகிறது. வயோதிபத் தாய்மார் பிள்ளையாரே, பிள்ளையாரே என்று சத்தமிட்டு வணங்கினர். இளசுகள் அங்கே பாருங்கள் பெரிய யானை ஒன்று குறுக்கே வருகிறது. பய பக்திப்பரவச நிலையில் அடியார்கூட்டம். சாரதி எதுவித கிலேசமுமின்றி லாவகமாக வண்டியை ஓட்டியவண்ணம் இருக்கிறார். ஆம் இப்பொழுது அடியேனாலும் அவ்வருங் காட்சியைக் காணமுடிகிறது. மிகப்பெரிய கன்னங் கரேலென்ற யானை ஒன்று தன் சுளகுக் காதுகளை அசைத்த வண்ணம் மெதுவாக நடந்து தெருவைக் கடக்க முயற்சிக்கிறது. இதற்கிடையில் தம்பி தம்பி யானையடா சற்று மெதுவாக ஓட்டையா என்கிறார்கள். யானை தெருவைக் கடப்பதற்கும் நாங்கள் அதனைக் கடப்பதற்கும் சரியாக இருந்தது. திரும்பிப் பார்க்கிறோம். எதுவித சலனமுமின்றி தன்பாட்டில் அது தனது பயணத்தைத் தொடர்கிறது. நாமும் எமது பயணத்தைத் தொடர்கிறோம். எம்மை வரவேற்கும் முகமாக அந்த அழகன் தன் அண்ணனை அனுப்பியதாக எனது கற்பனை நீள்கிறது. எம்மில் பலரும் அதே பரவசத்தில்தான் இருந்தார் கள். ஒரு 15நிமிட ஓட்டம் அங்கே மீண்டும் ஓர் அருமையான காட்சி. தெருவின் குறுக்கே தெருவின் நீளத்திற்குச் சமனாக ஓர் தோகை மயில் மிகப் பெரும் மயில், தனது தோகையை விரிக்காது அழகாக அசைந்து அசைந்து குறுக்கறுத்து மறுபுறம் செல்கிறது. இப்போ பேருந்தினுள் முருகா முருகா என்ற ஒலி சிலரிடமிருந்து பிறக்கிறது. இவ்வளவு நீளமாக (15-20′) ஆடாத நிலையில் தோகை உள்ள மயிலை சிறியேன் மிருகக் காட்சி சாலையில்கூட இதுவரை பார்த்ததில்லை. ஆக முதலில் பிள்ளையார் (யானை) பிற்பாடு தானே (முருகன்-மயில்) எம்மை வரவேற்ற காட்சி கதிர்காமத்தான் முழுத் தரிசனம் தந்து எம்மை வரவேற்றது போலிருந்த அந்த அற்புதக் கணங்களை நினைத்துப் பார்க்கிறோம்.



**உடல் பழுதுபட்டாலும் உள்ளம் தெளிவாதல் வேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் இதுபோன்ற காட்சிகளை கருவூலமாகக் கொண்டுதான் அருளாளர்கள் தம் கவித்துவத்தால் மெருகூட்டிப் பாடலாக்கித்தர இன்று நாம் அதனை ஏற்றிப்போற்றி பாடிப்பரவி வருகிறோம். இதனை எம்போன்றவர்கள் பாடலாக்கினால் இதுவும் அருட்பாடலா மருட்பாடலா என எடைபோடும் ஆசாட பூதிகள் எம்மிடம் இருப்பார்கள் என்பதும் வெளிப்படை. ஆக திருவருள் என்பது பேசுவது, எழுதுவது அன்று மாறாக அது உணரப்படுவது. ஆக முருகனின் திருவருட்கடாட்சம் நிறையவே என்ற நம்பிக்கையுடன் பயணம் வெகு அமைதியாக கதிர்காமத்தானை நோக்கிப் பறக்கிறது. உண்மையில் இன்னும் கதிர்காமக் கந்தனை நம்பி பூஜித்து வருபவர்களுக்கு அவன் ஏதோவித வகையான அருளாடல்களைச் செய்வதாற்றான் எத்தனை ஆயிரம் ஆயிரம் அடியவர் இன்றும் வெளிநாடுகளில் இருந்தபொழுதும் வந்து வணங்கி மகிழ்ந்து செல்கிறார்கள். பணத்தை அருட்பணிக்காக, திருப்பணிக்காக அள்ளி அள்ளி வழங்குகிறார்கள். நேர்த்தி வைக்கிறார்கள், பொருட்கள் வாகனங்களைக் காணிக்கையாக்கு கிறார்கள் என்பதை உணர்த்துவதாக அமைந்த இவ்வருட் காட்சிகள் கலியுகவரதனின் கருணைக்கு இன்றும் சாட்சிகளாக அமைந்துள்ளன. சரியாக 5.40 மணிக்கு ஆச்சிரம சுவாமிகளால் முன்னரே ஒழுங்குபண்ணப்பட்ட இந்து கலாச்சார யாத்திரிகர் மடத்தை அடைந்தோம்.




என்னே ஆச்சரியம் கதிர்காமத்தான் காட்டில் அமைந்துள்ளான் என்ற இதுவரை தரிசிக்காத என் மனக்கணக்கு தவிடுபொடியானது. எங்கள் நகரங்களிற்கூட இல்லாத ஓர் அழகிய நேர்த்தியாக நிர்வகிக்கப்படும் ஓர் பிரமாண்ட மண்டபத்தில் எமக்குத் தங்குவதற்குரிய (ஜாகை) இடம் ஒழுங்குபண்ணப்பட்டிருந்தது. இந்த மண்டபத்தைப் பற்றிக் குறிப்பிட்டேயாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இந்து கலாச்சார அமைச்சினால் அலுவலகப் பாணியில் மிகவும் நேர்த்தியாக நிர்வகிக்கப்படுகிறது. சுத்தம், சுகாதாரம், ஒளி, குடிநீர், மின் விசிறிகள் அனைத்தும் அற்புத ஒழுங்கமைப்பு. மிகவும் விசாலமான ஆண்கள் பெண்கள் தங்கக்கூடிய இரு பொது மண்டபங்கள். 50- 60 பேர் படுத்துறங்கக்கூடியன. அதைவிடத் தனித்தனி இருவர், நால்வர் தங்கக்கூடிய கட்டில் படுக்கைவசதிகள் கொண்ட அறைகள் என அழகுற அமைந்துள்ளது. அது மட்டுமல்ல மீண்டும் பிரமாண்ட அளவில் பெரிதாக்கி அறைகள் மண்டபங்கள் அமைக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டுக்கொண்டுமிருந்தனர். எதிர்வரும் காலம் பெருந்திருவிழாக் காலமாக இருப்பதனால் அதற்கேற்ற வகையில் இரவு பகலாக தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டிருப்பதையும் காணமுடிந்தது.

ஆண்களுக்கு ஒதுக்கப்பட்ட பொதுமண்டபத்தில் ஆண்களும், பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட மண்டபத்தில் பெண்களும் தங்கள் தங்கள் பொதிகளுடன் தங்குவதற்கு ஆயத்தமானோம். முதலில் பிரயாணக் களைப்புத் தீர குளிப்பதற்கு ஆயத்தமானார்கள். மிக நேர்த்தியான கழிப்பறைகள், குளியலறைகள், நீர்த்தாரை வசதிகள் மிகச் சுத்தமாக அமைந்திருந்தன. அனைவரும் ஆனந்தமாகக் குளித்தோம். ஜில் என்ற மலை அருவித் தண்ணீர்போல இருந்தது. பிரயாணக் களைப்பு தலைதெறிக்க ஓடியது. புதுவித உற்சாகம் கதிரமலையானிடம் வந்துவிட்டோம் என்ற தென்பும்கூட சரியாக 7.05 மணிக்கு நான் படங்களில் பார்த்த அந்தக் கதிர்காமக் கந்தனின் வாசலில் நின்றோம். எமது விடுதிக்கும் எம் கதிர்காம ஆலயத்திற்கும் $^3/_4$ கி.மீ தூரம்தானிருந்தது. விடுதியிலிருந்து கொழும்பு வெள்ளவத்தை போன்ற பெருந்தெரு ஊடாக நடந்துதான் சென்றோம்.



கோழை சாபம் என்பதை வீரன் ஆசீர்வாதம் என்கிறான்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இருமருங்கிலும் கடைகள் கண்ணிகள் வர்ணஜால விளக்குகள் வாங்கோ, வாங்கோ யண்ட, யண்ட, லாபாய், லாபாய், ஒரே வியாபார ஓசை, அர்ச்சனைத் தட்டுத் தொடக்கம், கழுத்துமாலை, விபூதி, ஆடம்பரப் பொருட்கள் அத்தனையும் இங்குண்டு. இப்போ எவரும் பெரிதாக அர்ச்சனையோ, நேர்த்திகளோ செய்யவில்லை. ஒருமுறை சுற்றி (பூசை ஒன்றும் நடைபெறவில்லை) வந்தோம். இங்கு அடியேன் இப்போது பார்த்த காட்சி. அன்று நான் பாட நூல்களில் படித்த பார்த்தவற்றிற்கு முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. ஆம் கதிர்காமம் என்பதும் எம் நினைவில் வருவது அவனுக்கே உரிய அந்த ஆலய முகப்பு (கோபுரங்கள் அற்ற) இது அந்த நாட்களில் சிறிதாக இருந்ததாக படங்களில் பார்த்தோம். ஆனால் அதில் எதுவித மாறுதலுமின்றி அதேபாணியில் அதே வளைவில் மிகப்பெரிதாக அந்த முகப்பு வாயில் வெள்ளை வெளேரென எதுவித சிற்பங்களுமின்றி அமைந் துள்ளன. அது மட்டுமல்ல முகப் பில் மட்டுமல்ல சுற்றிவர வேறு இருவாயில்களும் சற்று சிறிதாக தெற்கிலும் வடக்கிலும் அமைந் திருந்தன. அனைத்தும் எதுவித வர்ணங்களுமின்றி வெள்ளை வெளேரென்றே இருந்தன. அதுமட்டு மல்ல கருவறை என நாம் கருதும் மூலஸ்தானமும் அதன் அருகில் அமைந்த பரிவார மூர்த்திகளும் வில்லு வளைவு மண்டபங்களின்றி மிகச் சாதரணமாகவே எமது ஆதி கால கோவில்கலிளமைந்ததைப்போல முகடு ஓடு மரம் என்றவாறு கூரை அமைத்து ஒரே நேரத்தில் நூறுபேர் வரை தங்கக்கூடிய அளவிலேயே இன்றும் அமைந்துள்ளது; முருகனின் சிறப்பு எனலாம். அதுமட்டுமல்ல இத்தனை ஆடம்பர அழகுக் கட்டிடப் பொருட்கள் கிடைக் கின்ற பொழுதிலும் வெறுங் காட்டுத் தடிகளாலும், கொடிகளாலும் காட்டின் சாயல் வெளிப்படும் வகையில் முக்கோண வடிவில் ஓர் கலைத்துவம் மிக்க முகப்பு அமைத்திருந்தனர். இப்போ இங்கே ஆனால், அந்த முக்கோணத்தினுள் முருகன், பைரவர், சிவன் என அந்த அந்த ஆலயங் களுக்குரிய மூல மூர்த்திகளின் ஓவியங்கள் சிற்பங்களாகவே, ஓவியங்களாகவோ வரையும் கலாசாரம் எம்மிடம் வளர்ந்துள்ளது. இதனை நன்கு விளக்க ஞானச்சுடரின் 1ஆம் பக்கத்தின் வர்ண முகப்பையும் பின்புற அட்டையின் இப்போ சந்நிதியான் அமைந்துள்ள வில்லு வளைவு முகப்பு வாசகர்களுக்கு தெளிவுதரும் என எண்ணுகிறோம். இங்கு வேல் சேவல் மயில் அமைந்துள்ளதைக் காணலாம். பெருந்திருவிழா ஆரம்பமாக இருப்பதால் பாரிய இரும்புச்சட்டங்களால் சிகரத்தைப்போல விதானங்களை அமைத்து அவற்றில் சரவிளக்குகள் மின்சாரத்தால் ஒளிரச் செய்வதற்குரிய ஆயத்தங்களை இரவு பகலாக ஊழியர்கள் செய்து கொண்டிருந்தனர். மேலெழுந்தவாரியாக முருகனது ஆலயச் சூழலை ரசித்து வணங்கி 9.30 மணியளவில் எமது விடுதி திரும்பி இரவுணவை உண்டு மறுநாள்... (தொடரும்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# ஸ்ரீ கருட புராணம்



–திரு இரா. செல்வவடிவேல் அவர்கள்–

பிண்ட சரீரம், தான் முன்பு செய்த பாவச் செயல்களை எண்ணி கதறி அழுது கொண்டிருக்கும் நிலையில் எமதூதர்கள் பாசக்கயிற்றினால் அடித்துத் துன்புறுத்தியபடி இழுத்துச் செல்வர். இவ்வாறு எமலோகம் சென்றடைய ஓராண்டு பிடிக்கும்.

அதுவரை அவர்களுக்கு உணவு மகன் மற்றும் உறவினர் மூலம் மாதந்தோறும் படைக்கப்படும் பிண்டச்சோறுதான் உதவுகிறது.

பிண்ட சரீரம் எமதூதர்கள் கொடுக்கும் துன்பத்தைப் பொறுக்க முடியாமல் யாரும் தம்மைக் காக்க வரவில்லையே! எமதூதர்களிடம் சிக்க வைத்து வேடிக்கை பார்க்கிறார்களே! என்று எண்ணிக் குமுறும். இப்படிப்பட்ட நிலையில், தாம் வாழ்ந்த காலத்தில் மனச்சாட்சியின்றி நீதி நேர்மைக்கு அப்பாற்பட்ட நிலையில் பொன், பொருள் சேர்த்தோமே! இவை யாருக்காக? தேடிய பொருளை உற்றார் உறவினர் பயன்படுத்தி இன்பமடைகின்றனர். ஆனால் தாமோ சம்பாதித்துக் கொடுத்துவிட்டுப் பழிபாவங்களைச் சுமந்து அல்லற்படுகிறோமே என்று வேதனையால் துடிக்கும்.

அவர்கள் நினைப்பதும், துடிப்பதும் எமதூதர்களுக்குத் தெரியும். அதற்காக அவர்கள் இரக்கம் காட்ட மாட்டார்கள். மேலும் துன்புறுத்தி, "மூடனே! இப்போதுதான் உனக்குப் புரிகிறதா? வாழ்ந்து வந்த காலத்தில் உன் சுகத்திற்காகவும் உன் மனைவி மக்களின் மேன்மைக்காகவும் பிறர் நலனையும் கெடுத்து பொன்னும் பொருளும் சேர்த்துக் குவித்தாயே! அப்போது எண்ணவில்லையே! நீ எத்தனை பேருடைய உழைப்பை உனக்கு ஊதியமாக்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருப்பாய்! ஏழை எளியவர்களைப் பற்றி வேதனைப்படுபவர்களைப் பார்த்து நீ இரக்கம் காட்டினாயா? பிறரை ஏமாற்றவும் அவர்களின் பொருள்களை அபகரிக்கவும் துணிந்தாயே! உன்னால் எத்தனையோ பேர் துன்பத்திற்கு ஆளாகியிருப்பர்! மண் ஆசை, பொன் ஆசை, பெண் ஆசையால் மதிமயங்கி இருந்தாயே! தான தருமம் செய்தாயா! உனக்கும் மேலான கடவுளை நினைத்து வாழ்ந்தாயா! யாவும் உன்னால் நடக்கிறது என்று இறுமாப்புடன் இருந்தாய்! அதற்குத் தண்டனை தான் இது. இப்போது நினைத்து கூக்குரலிட்டுப் புலம்புவதால் எந்தப் பயனுமில்லை. உனக்கு ஏற்பட்டுள்ள துன்பம் நீங்கிவிடாது! என்று, அவர்கள் செய்த பாவங்களைச் சுட்டிக்காட்டி பாசத்தை இழுத்தும் முசலத்தால் புடைத்துத் துன்புறுத்துவர்.

இவ்வாறு தாம் வாழ்ந்திருந்த காலத்தில் தீமை புரிந்தவர்கள் அடையும் துன்பம் அதிகமாகும். அவர்கள் சிறிதுதூரம் பலத்த காற்று வீசும் வழியாலும் சிறிது தூரம் புலிகள் நிறைந்துள்ள காட்டு வழியாலும் செல்ல நேரும். அப்படிச் செல்கையில் எமதூதர்கள் ஓரிடத்தில் தங்குவர். அப்போது அவர் இறந்த இருபத்தெட்டாம் நாளில் பூமியில் அவர் மகனால் செய்யப்படும் சிரார்த்த பிண்டத்தை உட்கொள்ளும்.

அதன் பிறகு அவர்கள் யாமியம் என்னும் நகரத்தை அடைவர். அந்த நாள் அவர் மரணமடைந்த முப்பதாவது நாளாக இருக்கும்.

யாமியம் என்பது தெற்குப்பக்கமாக இருக்கும் நகரமாகும். அங்கு பிரேதங்கள் கூட்டங் கூட்டமாகக் குடியிருக்கும். அந்த இடத்தில் புண்ணிய பத்திரை என்ற ஆறும் இருக்கும். அந்த நகரத்தில் எமதூதர்கள் சிரமப்பரிகாரத்தை முன்னிட்டுச் சிறிது காலம் தங்குவர்.

இரண்டாவது மாத சிரார்த்தத்தின் போது அந்த ஜீவனுக்கு அளிக்கப்படும் பிண்டத்தை அருந்தியபின் எமதூதர்களால் மேற்கொண்டு இழுத்துச்செல்லப்படும். இரவு பகலென்று பாராது எமதூதர்கள் ஆவி உருவத்தை பல வகையிலும் துன்புறுத்தியபடி இழுத்துச் செல்வர். அத்துடன் பயங்கரமான காடு வழியாகவும் செல்ல நேரும். அதனால் ஆவி உருவில் இருப்பவர் அழுது ஓலமிட்டபடி சென்று கொண்டிருப்பார்.

அதன்பின் அவர்கள் சங்கமன் என்ற மன்னனுக்குரிய சௌரி என்ற நகரத்தை அடைவர். அங்கு பூவுலகில் அளிக்கப்படும் மூன்றாவது மாத சிரார்த்த பிண்டத்தை ஏற்றுக்கொள்வர்.

அவர்களின் தொடரும் பயணத்தில் தாங்க முடியாத அளவு குளிர்வாட்டும். உடலை உறைய வைக்கும் குளிரால் ஆவி உருவம் வேதனைப்படும். அப்போது எமதூதர்கள் அந்த உயிர்மீது கற்களை எறிந்து துன்பப்படுத்துவர்.

அடுத்து குரூரன் என்ற மன்னனின் ஆளுகைக்குட்பட்ட குரூரபுரம் என்ற பட்டினத்தை அடைவர். அந்த இடத்தில் தான் ஐந்தாம் மாதப் பிண்டத்தை உண்பர்.

அடுத்து நடந்து கிரௌஞ்சம் என்ற ஊரை அடைவர். அங்கு ஆறாவது மாதப் பிண்டம் ஏற்றுக்கொள்ளப்படும். அங்கு அவர்கள் அரை முகூர்த்த காலம் மட்டுமே தங்கியிருப்பர். ஒரு முகூர்த்தம் மூன்றே முக்கால் நாழிகை- அதாவது ஒன்றரை மணி நேரம். அரை முகூர்த்தம் முக்கால் மணி நேரம்.

பின்னர் எமதூதர்கள் ஆவி உருவை இழுத்துக்கொண்டு பயங்கரமான பாதை வழியாகச் செல்வர். இவ்வாறு பல துன்பங்களை அனுபவித்தவாறு ஒரு நதியை வந்தடைவர். அந்த நதி பொறுக்கமுடியாத துர்நாற்றம் வீசக் கூடியது. அதையே வைதரணி என்பர். தான தருமம் செய்தவர்கள் மட்டுமே அந்த ஆற்றை சுலபமாகக் கடக்க முடியும். அவ்வாறு செய்யாதவர்களை அந்த ஆற்றில் தள்ளிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதாளம் வரை அழுத்தித் துன்பப்படுத்துவர். அதிலேயே நீண்ட காலம் வரை தவிக்க நேரிடும்.

வைதரணி என்ற ஆறு பாய்ந்தோடும் நீர்நிலையல்ல. அந்த ஆறு மிகவும் நீள மானது; ஆழமானது. அதில் தண்ணீர் இருக் காது. இரத்தமும், சீழும், சிறுநீரும் மலமுமாக கழிவுப் பொருட்கள் யாவும் நிறைந்திருக்கும். அதில் நாசியில்லாத கொடிய பயங்கரத் தோற்றமுள்ள விலங்குகள் ஏராளம் வசித் திருக்கும்.

பூமியில் தாம் வாழ்ந்திருந்த காலத் தில் கோதானம் மற்றும் தான தருமங்களைச் செய்தவர்கள் இந்த ஆற்றில் மூழ்கி வேதனைப்படமாட்டார்கள். மற்றவர்கள் துன்பத் திற்குள்ளாக நேரும். அதன் பின் எமதர்ம ராஜனின் இளைய சகோதரனான விசித்திரன் என்பவனின் நகரத்தை அடைவர். அங்கு ஆறாவது மாதப்பிண்டத்தை உண்ட பின்பு பயணத்தைத் தொடரும்.

ஏழாவது மாதப் பிண்டத்தை எண்ண முடியாமல் தவிக்க நேரும். ஆவி உருவின் முன்பாக சில பிசாசுகள் தோன்றி, அப்பிண் டத்தை உண்ணாதவாறு தட்டிப்பறிக்க முயற் சிக்கும். வாழும் காலத்தில் இறைவழிபாட் டையும், நற்காரியங்களையும் செய்தவருக்கு இத்தகைய நிலமைகள் ஏற்படமாட்டாது. அதன் பின் அந்த ஆவி உருவங்களை மிகுந்த பசி யோடு எமதூதர்கள் இழுத்துச் செல்வார்கள்.

எமதூதர்கள் இறந்த உயிர்களிடம், "மூடனே! உயிருடன் மானிட உருவில் வாழும் போது இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டிய புண்ணியங்களைத் தேடிக்கொள்ள வேண்டும். தானதருமம், பூசைவழிபாடு, புனிதப் பயணங் களை மேற்கொண்டு இறையருளைப் பெற வேண்டும். வாழ்க்கையில் நேரிய முறை களைக் கொண்டு ஒழுக்கமாக வாழ வேண் டும். பெரியோர்களை மதிக்க வேண்டும்; வறியவர்களைக் காக்க வேண்டும். பிறருக்கு நன்மை செய்ய வேண்டும். பாவம் எது புண்ணியம் எது என்று அறிந்து புண்ணிய செயல்களையே செய்து வந்தால் இக்கதி நேராது! அப்போது செய்யாமல் ஆவியுருவம் பெற்றபின் எத்தகைய செயல் மூலமாகவும் பரிகாரம் செய்துகொள்ள முடியாது ஏற்படும் துன்பங்களை அனுபவித்தே ஆக வேண்டும்!" என்று கூறுவர்.

எட்டாவது மாதத்தில் பக்குவபதம் என்ற பட்டணத்தை அடையும். இங்கு எட்டா வது மாத பிண்டத்தை உண்ணும். அதன்பின் துக்கதம் என்ற ஊரை அடையும். அங்கு ஒன்பதாம் மாதப்பிண்டத்தை ஏற்கும். அங் கிருந்து நாதாக்கிரந்தம் என்ற பட்டினம் சென்று பத்தாவது மாதப் பிண்டத்தை உண் ணும். இந்தப் பட்டினத்தில் அநேக ஆவி உருவங்கள் கூட்டம் கூட்டமாக ஓலமிட்டுத் திரிந்து கொண்டிருப்பர். அவர்களெல்லாம் பாவச்செயலில் ஈடுபட்டிருந்தவர்களாகும்.

பின்னர் அகப்தம் என்ற ஊரை அடை யும். இங்கு பதினொன்றாம் மாத பிண்டத்தை ஏற்கும். அடுத்து சீதாப்பரம் என்ற நகரத்தை அடையும். அந்த இடம் கடுமையான குளிர் நிறைந்ததாகும். பன்னிரெண்டாவது மாதப் பிண்டத்தை உண்ணும்.

அதன்பின் அந்த ஆவி தம் நிலையை எண்ணிப் புலம்பும். தன்னுடன் வாழ்ந்து வந்தவர் களில் ஒருவர்கூட தன்னருகில் இல்லையே என்று ஏங்கி வேதனையுறுவர். அந்த ஆவிகள் எமதூதர்களிடம் தம் உறவினர்களைப்பற்றி கேட்டும் அதற்கு எமதூதர்கள், "உன்னுடன் வாழ்ந்தவர்கள் பூவுலகில் இப்போதும் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார்கள். நீ மட்டும்தான் இங்கு வந்துள்ளாய். உன்னுடன் வந்துள்ளது நீ செய்த பாவ புண்ணியங்களின் பலன்தான்" என்பர். அப்பொழுது தான் அந்த ஆவி உரு வுக்கு தாம் புண்ணியச் செயல்களைச் செய் யாதது பற்றிய எண்ணமே தோன்றும். தமக் குத் தாமே எண்ணிப் புலம்பும். அதன்பிறகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைவஸ்வதப்பட்டினம் என்னும் இடத்திற்கு இழுத்துச் செல்வர்.

வைவஸ்வதலோகம் மிகவும் விரிவடைந்த, தேவ கன்னிகைகள் கூடியதாய் எண்பத்து நான்காயிரம் விலங்குகள் வாழ்விடமாய் திகழ்கின்றது. உயிர்களின் பாவ புண்ணியங்களுக்கேற்ப எமதர்மராஜன் அவர்களை நடாத்துவான். அவர்களின் பாவ புண்ணியங்களை அறிந்து கூறுவதற்கென்று பன்னிரெண்டு "சிரவணர்கள்" என்பவர்கள் எமதர்மராஜனுக்கு உதவியாளராக இருப்பர்.

உயிர்கள் அனைத்தும் அந்தப் பன்னிரண்டு சிரவணர்களையும் ஆராதனை செய்ய வேண்டும். அவ்வாறு உயிர்கள் செய்யும் ஆராதனையில் சிரவணர்கள் திருப்தி அடைந்தால், அந்த உயிர் செய்த பாவங்களைவிட்டு புண்ணியங்களை மட்டும் எமதர்மராஜனுக்கு எடுத்துரைப்பர்.

அதனால் பன்னிரு சிரவணர்களை ஆராதித்து வந்தால் மறுமையில் நன்மை பெறலாம் என்று பரந்தாமர் கருடனுக்குக் கூறியருளுகிறார். (தொடரும்...

## வருடாந்த வைகாசிப் பெருவிழா 2014

**வருடாவருடம் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்றுவரும் வைகாசிப் பெருவிழா எதிர்வரும் 13.06.2014 வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது. அன்றையதினம் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் விசேட நிகழ்வுகள் இடம்பெறும்.**

# இறை நிழலில் சுவாமி சித்ரூபானந்தா



**ஆன்மீக வளர்ச்சிக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்துப் பாடுபட்ட ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் நிறுவுனரும் அதனைச் செவ்வனே வழிநடத்தி வந்தவருமான சுவாமி சித்ரூபானந்தாவின் மறைவு ஆன்மீக உலகிற்குப் பேரிழப்பாகும்.**

**தமது அன்றாட சேவாச்சிரமப் பணிகளுடன் பல்வேறு சமூகப்பணிகளையும் ஆற்றி வந்த சுவாமிகள் இன்று நம்மிடையே இல்லை என்பதை எண்ணிப் பார்க்கவே முடியவில்லை.**

**சந்நிதியான் ஆச்சிரமத்தின் பல்வேறு விழாக்களிலும் தவறாது பங்குபற்றி வந்த சுவாமி சித்ரூபானந்தா அவர்கள், ஆச்சிரமத்து வாராந்த வெள்ளி நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு தமது ஆழமான ஆன்மீகக் கருத்துக்களால் அனைவரையும் கவர்ந்தவர்.**

**அன்னாரது ஆத்மா இறை நிழலில் அமைதிபெற்றுச் சாந்தியுற சந்நிதியான் ஆச்சிரமம் சார்பாகப் பிரார்த்திக்கின்றோம்.**

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

அழகு ஒரு ஆபத்தான ஆயுதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத் திருக்கோயில் வரிசை:

# குன்றக்குடி

– வல்வையூர் அப்பாண்ணா –

முருகனின் படைவீடுகளில் ஐந்தாவது படைவீடாகிய குன்றுதோறாடலில் சுருளி மலை, இலஞ்சி, குன்றக்குடி, விராலிமலை, வயலூர், வைத்தீஸ்வரன் கோவில், திருத்தணி ஆகியவை அடங்குவதாக முருகன் புகழ் பேசும் பழைய புத்தகங்கள் பகர்கின்றன. ஆனாலும் பின்னாளில் திருத்தணியே ஐந்தாவது படை வீடாகப் பொதுவாக அனைவராலும் கொள்ளப்படுகிறது.

காரைக்குடியிலிருந்து மேற்கே சுமார் 14கி.மீ தூரத்தில் குன்றக்குடிக் குமரன் கோவில் அமைந்துள்ளது. மதுரையிலிருந்து காரைக்குடி வரும் வீதியில் பிள்ளையார் பட்டியை அண்மித்ததுமே குன்றின் மேலிருக்கும் குமரன் கோயில் கிழக்கே கண்ணெதிரே தெரிகிறது. குன்றக்குடி கிராமம் நெருங்கி வரவர வீதி ஓரத்திலேயே குன்றமும் கோயிலும் பளிச்சிடுகிறது. குன்றின் மீதமர்ந்துள்ள குன்றக்குடிப் பெருமான் அன்பர்கள் நினைத்ததை வழங்கும் அருளாளராகத் திகழ்கிறார்.

முருகப் பெருமானின் வாகனமான மயில் ஒரு குன்றுருவில் இருந்து வழிபட்டதால் இந்நகர் மயூரகிரி என்றும், குன்றக்குடி என்றும் அழைக்கப்பட்டமையை அருணகிரிநாதர் தமது இரு வேறு திருப்புகழ் வரிகளில் வைத்துப் பாடியுள்ளார்.

1) ..........................................

..........................................

"மாமாது வனமாது கார்மேவு சிலைமாது
மாலாகி விளையாடு புயவீரா
வானாடு புகழ்நாடு தேனாறு புடைசூழ
மயூர கிரிமேவு பெருமாளே"

2) ..........................................

..........................................

"குறுமுனி யின்பப் பொருள்பெற அன்றுத்
பனமனு வுஞ்சொற் குருநாதா
குலகிரி துங்கக் கிரியுயர் குன்றக்
குடிவளர் கந்தப் பெருமாளே"

மயிலின் அமைப்பினை ஒத்த மலைக்குன்றில் வந்தமர்ந்துள்ள ஆறுமுகன், மயிலின் வேண்டுதலை ஏற்று, குன்றிலிருந்து சிறிதளவு தூரத்தில் தன் திருக்கைவேலினால் தோற்று விக்கப்பட்ட சரவணப்பொய்கை காணப்படுகிறது. மலையடிவாரத்தில் முற்றும் பழுதடைந்த நிலையில் ஒரு தேரும், பிற்காலத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புதிய தேர், தேரின் தரிப்பிடத்தில் காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைக்குன்றில் ஏறுவதற்கு சமதளத்திலிருந்து நூற்றுக்கணக்கான படிகள் காணப்பட்ட போதிலும், ஓரளவிற்கு மேலே படிவரிசை போலல்லாத செதுக்கப்பட்ட மலைச்சரிவினூடாகச் சிரமம் எதுவுமின்றிச் செல்ல முடிகிறது. இடையிடையே இளைப்பாறிச் செல்ல நான்கு கால் மண்டபங்களும் அமைத்துள்ளனர். கீழ்க்கோயில் என்றும், மலைக்கோயில் என்றும் குன்றக்குடிக் கோயில் இரு பகுதிகளாக உள்ளது.

மலையடிவாரத்தில் பெருமளவு மலையைக் குடைந்தே அமைக்கப்பட்டுள்ள கீழ்க் கோவிலில் சுயம்புலிங்க வடிவான தேனாற்று நாதருக்கும் அழகம்மைக்கும் அகஸ்தியருக்கும் சந்நிதிகள் உள்ளன. இப்பகுதியிலேயே மலையைக் குடைந்து அமைக்கப்பட்ட ஐந்து சிவலிங்கங்கள் காணப்படுகின்றன. இவைகளில் மலைக்கொழுந்தீசர் சந்நிதியில் மலையில் செதுக்கப்பட்டுள்ள துவார பாலகர்கள், வலம்புரி விநாயகர், மகாவிஷ்ணு, பிரம்மா, சிவபெருமான், துர்க்கை, சங்கரநாராயணர், சிவனின் நடனத் தோற்றம் முதலிய சிற்பங்கள் அற்புதமாக உள்ளன. குடைவரைக்களைக் காணும்போதெல்லாம் அவைகள் பல்லவ மன்னர்களோடு தொடர்புபட்டவையாகப் பொதுவாகக் கூறப்படுவது வழக்கம். பாண்டிய நாட்டில் என்றுமே பல்லவர்கள் காலடி வைத்ததாகச் சரித்திரச் சான்றுகள் இல்லாததால், இந்தக் குகைக்கோயில் பாண்டிய மன்னர்களின் கைவண்ணமே என உறுதிபடக் கூறலாம்.

கீழ்க் கோவிலிருந்து 99 படிகள் மேலேறிச் சென்றதால் வல்லப விநாயகர் சந்நிதியும், மேலே அப்பால் இடும்பன் சந்நிதியும் காணப்படுகிறது. மேலும் 34 படிகள் மேலேறி வர மலைக் கோவிலின் வாசலில் வீரபாகுதேவரின் ஆலயம் உள்ளது. தெற்கு நோக்கியுள்ள பிரதான வாசலினை அழகிய அளவான உயரமுள்ள ராஜகோபுரம் அலங்கரிக்கிறது. ஒரே பிரகாரத்தினையுடைய இவ்வாலயத்தின் தென்புற நூற்றுக்கால் மண்டபத்திற்கு நாம் வந்துள்ளோம். மூலவர் கிழக்குப் பார்க்க அமர்ந்திருப்பதால் (நாமும் முறை தவறாது) வலஞ்சுழியாக அந்த ஒற்றைப் பிரகாரத்தை வலம் வருகிறோம். நால்வர், சொர்ணகணபதி, தெட்சணாமூர்த்தி சந்நிதிகள் கடந்து, சோமாஸ்கந்தர் - உற்சவர் - மூலவர் அமர்ந்துள்ள கருவறைப் பகுதியைச் சுற்றி வலமாக வடபுறம் வந்தால் குழந்தைவடிவேலர், நடராஜர், சந்திரன், பைரவர், சண்டிகேஸ்வரர் ஆகியோர் சந்நிதிகளைத் தரிசிக்க முடிகிறது.

எமது பிரகார வலத்தினை முடித்து வர, அடுத்துள்ள அலங்கார மண்டபத்தில் சோமாஸ்கந்தரும், மறுபுறம் ஆறுமுகப் பெருமானின் உற்சவ மூர்த்தமும் உள்ளன. கருவறையில் ஆறுமுகங்கள் - பன்னிரு கரங்களுடன் - தேவியர் இருவருடனும் - தனித்தனி மயில்களின்மீது கிழக்கு நோக்கியபடி ஆறுமுகப்பெருமான் அருள் பாலிக்கிறார். சிரித்த முகத்தோடு சிந்தை கவரும் சிங்கார வேலன். வழமையான திருவுருவத்தினை விடவும், சற்று பருத்த - உயர்ந்த திருவுருவமும், அழகிய அலங்காரமும் நம்மை ஆட்கொள்ள, மனம் ஒன்றிக் கைகூப்பித் தொழுகிறோம். கருவறையின் முன்னுள்ள பரந்த மண்டபப் பகுதியின் நடுவே மயில் - பலிபீடம் - தம்பம் ஆகியவை உள்ளன. சிவஸ்தலங்களிற் காணப்படும் நந்திக்குப் பதிலாக இங்கே முருகக் கடவுளின் வாகனமாக மயில் வீற்றிருக்கிறது.

பதினெட்டாம் நூற்றாண்டில் சிவகங்கை மன்னராக விளங்கிய பெரிய மருதுவுக்கு ஏற்பட்ட நோயைத் தீர்த்தவர் குன்றக்குடிக் குமரன் என ஸ்தல வரலாறு கூறுகிறது. வெள்ளையனை எதிர்த்துப் போரிட்டு வீர சுவர்க்கம் அடைந்த பெரிய மருதுவும் - சின்ன மருதுவும் சகோதரர்கள். இருவரும் குன்றத்து முருகன்மீது கொண்ட பக்தியினால், சிதலமடைந்திருந்த ஆலயத்தை திருத்திப் புதுப்பித்தது இவர்களே எனவும் ஸ்தல புராண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வரலாறு மேலும் கூறுகிறது. கருவறைக்கு முன் உள்ள மண்டபத் தூண்களில் எதிரெதிரே மருது சகோதரர்களின் சிற்பங்கள் வணங்கும் முறையில் உள்ளன.

இந்த மண்டபம் தாண்டி சிறிய கிழக்கு வாசல் வழியே வெளியே வந்தால் சிறிய மண்டபம் ஒன்றுக்கு வருகிறோம். சில தூண்களுடனும், பாதுகாப்பு அரைச்சுவரும் கொண்ட அந்த மண்டப விளிம்பில் நின்று பார்த்தால், குன்றத்துச் செங்குத்தான சரிவும், கீழ்க் கோவிலைச் சுற்றியுள்ள வீதியின் சில பக்கங்களும், வயல் வெளிகளும், கிராமங்களும் கொண்ட ரம்மியமான தோற்றம் தெரிகிறது. இந்த கிழக்கு வாசல் வழியாக வேறு எவ்வித பயன்பாடும் இல்லை.

வைகாசி விசாகம், ஐப்பசியில் கந்தசஷ்டி, தைப்பூசம், பங்குனி உத்தரம் முதலியன இத்தலத்தின் முக்கிய விழாக்களாகும். பால்காவடி, பன்னீர்க்காவடி, புஷ்பக்காவடி, சந்தனக் காவடி, சர்ப்பக் காவடி என பலவகையான காவடிகள் எடுத்து வழிபாடியற்றி தாம் விரும்பிய வரங்களை அன்பர்கள் முருகனிடமிருந்து பெற்றுக்கொள்கிறார்கள்.

முருகன் புறப்பாடு உட்பட சகல காரியங்களும் தெற்கு கோபுரவாசலூடாகவே நடைபெறுகிறது. நாமும் கோபுரவாசல் வழியாக, வெளியே வந்து கீழிறங்கி மலையடி வாரத்திற்கு வருகிறோம். எதிரேயுள்ள வீதி கடந்து சென்றால், வடக்குப் பார்த்தபடியுள்ள அழகான மணிமண்டபத்தைப் பார்க்கிறோம். பிற்காலத்தில் குன்றக்குடி கோவிலின் புனரமைப்புப் பணிகளில் முன்னின்று உழைத்தவரும், இலங்கைக்குப் பலமுறையும் வந்து பல்வேறு கோவில்களிலும் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றியவரும், தலைசிறந்த சைவசமய சொற்பொழிவாளருமான **குன்றக்குடி அடிகளாரின்** நினைவாக இந்த மணிமண்டபம் எழுப்பப்பட்டுள்ளது. மணிமண்டபத்தின் மையத்தில் பளிங்குக் கல்லினால் ஆக்கப்பட்ட குன்றக்குடி அடிகளாரின் மார்பளவுச் சிலை மாலையணிவிக்கப்பட்டு அழகுற உள்ளது. கலையம்சங்கள் பொருந்திய தூண்கள் கொண்ட சிறிய பிரகாரம் பார்ப்பதற்கு ஒரு சிறிய கோவில் போன்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது. வாழுங்காலத்தில் அவர் கலந்துகொண்ட பெரிய அளவிலான புகைப்படங்கள் மூன்று பக்கங்களிலும் பார்க்க முடிகிறது. தமிழ் நாட்டின் பல முதலமைச்சர்கள், அரசியற் பிரமுகர்கள், சினிமா நட்ஷத்திரங்களுடன் எடுக்கப்பட்ட புகைப்படங்களும் மிக அதிகமாகவே மண்டபத்திற் காணப்படுகின்றன.

மண்டப வாசலில் நின்றபடியே, நிமிர்ந்து வடக்கே பார்த்து குன்றக்குடி மலையையும் குமரன் கோவிலையும் வணங்கி விடைபெற்று, நமது அடுத்த திருக்கோயிற் பயணத்தைத் தொடருகிறோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனிமாத வாராந்த நிகழ்வுகள்

**06.06.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "இன்னிசை"

வழங்குபவர் :- ஆசிரியை திருமதி வானதி மகிந்தன் அவர்கள்

[நுண்கலைமாணி]

---

**13.06.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "கலைநிகழ்வுகள்"

வழங்குபவர்கள் :- யா/ தொண்டைமானாறு வீ.ம.வி. மாணவர்கள்

வருடாந்த வைகாசிப் பெருவிழா

---

**20.06.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

**27.06.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

# ஞானச்சுடர் ஆனிமாத வெளியீடு

வெளியீட்டுரை :- பிரம்மஸ்ரீ கு. தியாகராஜசர்மா (நீர்வைமணி) அவர்கள்

மதிப்பீட்டுரை :- திரு க. நவரத்தினம் அவர்கள்

[இளை. ஆசிரியர், நெல்லியடி]

198ஆவது மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல. QD/16/NEWS/2014

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org